www.padippakam.com

# வித்தியாலயம் 2003



வேலணை ம.ம.வி. பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்

www.padippakam.com



## கனவிற்கும் வாழ்விற்குமிடையே......

கனவுகள் எல்லோரிடமும் உண்டு. மனிதனை இயக்கிக் கொண்டிருப்பதற்கு கனவுகளும் காரணம். கனவுகளே எல்லாக் காரியங்களையும் இயக்கிக் கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர்கள், ஆக்கிரமிப்பாளர்கள், போராளிகள் ஒடுக்கப்பட்டவர்கள், ஒடுக்குபவர்கள், அகதிகள் எல்லோரிடமும் நிறையக் கனவுகள். கனவுகள் இன மத பேதம் பார்ப்பதில்லை. அவை வளர்ந்து கொண்டிருப்பவை. வளர்க்கப்படுபவை.

கனவுகள் கைவசப்படாமல் போவதுண்டு, களவாடப்படுவதுமுண்டு. கனவுகளாகவேயிருந்து காலாவாதியாகிப் போவதுண்டு. யதார்த்தங்களை எதிர் கொள்ள முடியாத கனவுகள் அப்படியே காலாவதியாகிப் போவதுமுண்டு. கனவுகள் ஒவ்வொருவரினதும் கற்பனை, திட்டம். இயல்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதன் தன் வாழ்வை கற்பனை செய்கிறான். திட்டமிடுகின்றான். இந்தக் கற்பனையும் திட்டமும் கட்டி வைக்கப்படுமிடமே கனவு. உடனடிச் செயல் திட்டம் ஆகின்றது. ஆசைகளின் செயலுருப்பெறும் நினைப்பு, முயல்வது, இயலாதது, தேவைகளின், தேக்கநிலை கனவு ஆகின்றது. வாழ்நிலையிலிருந்து மிகத் தொலைவில் தேவைகள், ஆசைகள், திட்டங்கள் எல்லாம் கட்டிவைக்கப்பட்டிருக்கின்றது.

கனவுகளைக் கைப்பிடிக்க எல்லோரும் முயல்கின்றனர். கனவுகளை நோக்கிய பயணம் வாழ்வு, கனவையும் வாழ்வையும் இணைத்து வைத்திருக்கும் இயல்பு யதார்த்த நிலை, கனவுகளை இல்லாமல்ச் செய்ய பல்வேறு கோணங்களிலும் முயன்று கொண்டிருக்கின்றது. யதார்த்தம் எல்லாவற்றையும் எல்லாமுமாய் மாற்றிக் கொண்டிருக்கிறது.

பெற்றோர்களிடம் பிள்ளைகள் பற்றிக் கனவு, ஆசிரியர்களிடம் மாணவர்கள் பற்றிய கனவு, புலம்பெயர்ந்தவனிடம் தாய் மண் கனவு, பசித்திருப்பவனுக்கு உணவு பற்றி கனவு, அகதிகளுக்கு வாழ்நிலை கனவு, இயற்கையும் அமெரிக்காவும் பூமியை கால் பந்தாக்க கனவு, உலகோர் குருதி அருவியில் குளித்து மகிழ அமெரிக்க ஆட்சி பீடத்திற்குக் கனவு, நிம்மதியாய் மகிழ்ந்தினிது வாழும் உரிமைக்கனவு எங்களிடமும். வாழ்தலையும், மகிழ்தலையும் யதார்த்த இயங்கு நிலை சித்திரவதை செய்கிறது, அல்லது வாழ்வை வாழ்வதற்கான பயிற்சிக்களம் ஆக்குகிறது. மனிதனை மனிதனாக்காமல் மனிதனாகுவதற்கான முயற்சியாக்குகிறது. யதார்த்தத்தை பொருளியலே வடிவமைக்கிறது, வழிநடத்துகிறது. பொருளியலின் படைப்புக் கூறுகளே,ஆதிக்கம், ஆக்கிரமிப்பு,அழித்தல், அடிமைப்படுத்தல். பொருள் + காலம் = யதார்த்தம் மாறிக்கொண்டும், மாற்றிக்கொண்டுமிருக்கின்றது. யதார்த்தத்துடன் இசைவுபடல் என்பது சுயமிழத்தலுமாகின்றது. சுயம் யதார்த்தத்தை உடைத்தோ, தகர்த்து எகிறிப்பாய்ந்து கனவுகளை எட்டுவது என்பது எளிதல்ல.

யதார்த்த நிலை கனவுகளைப் பற்றிட தடையாயிருக்கையில், பற்றும் முயற்சிக்கு ஊறு விளைவிப்பின் கனவுகள் வளர்ச்சியடைகின்றன. வாழ்வு காலாவதியாகிப் போகின்றன, காணாமல்ப் போகின்றன. தனிமனிதன், அமைப்புகள், அதிகார பீடங்கள் எல்லாவற்றினது கனவுகளையும் யதார்த்தம் பறிமுதல் செய்து சூழ்நிலையில் சிறைப்படுத்தி விடுகின்றது.

சாதரண துப்பாக்கிக்கும் செல் இற்கும் பயந்தோடிவந்து ஏவுகணைத்தொழிற்சாலையின் கோடியிலல்லவா குடியிருக்கின்றோம். தாய் மண்ணில் பூவரசம் நிழலிலிருப்பவர்களின் தேவை, நிறைவு, வாழ்வு பற்றி, வல்லரசுகளில் வாழும் நம்மிடமும் கனவுகள். கனவுகள் கைப்பட காரியமாற்ற வேண்டும், காரியங்களைச் செய்ய தியாகத்தன்மை வேண்டும், தியாகம் என்பது எதையாவது இழத்தல், இழத்தலை ஈடு செய்யவும் எதிர்க்கவும் எமது புரிதல்கள் விசாலிக்க வேண்டும்.

புரிதல்களின் விசாலங்களை அகலிக்க இந்த விழாவும் மலரும் ஒரு கைஒழுங்கை ஆகட்டும் •

வித்தியாலயம் 2003 உருவாக்கத்திற்கான ஆக்கங்கள் தந்துதவியவர்களுக்கும் கணணியில் எழுத்துருவாக்கித் தந்த இ.பிரியதர்சினி, ப.கந்தப்பிள்ளை, பி,இறயாகரன், வாசுதேவன் மற்றும் எமது கல்லூரி கோலங்களை புகைப்படமாக்கித் தந்த வாசுதேவனுக்கும் 'ஐரோப்பிய தமிழ் ஊடகங்கள்' கட்டுரை முழுமைபெற தகவல்கள் தந்துதவிய விக்கினா பாக்கியநாதன், வேலணையூர் பொன்னண்ணா, வடிவமைத்த சங்கீதா அச்சகத்தினருக்கும் நன்றிகள்.

மலர்க்குழு.



படிப்பகம்

www.padippakam.com



# கல்லூரிக்கீதம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவொம்
வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

ஆழி சூழும் ஏழு தீவும்
அறிவு காணும் சாலையாம்
ஊழி ஊழி ஓங்கும் சேவை
உயர்வு காணும் சாலையாம்
வாழி வேலணை மத்திய மகா
வித்தியா சாலையாம்
வாழி ஊழி ஊழி யென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

அன்பு ஒளியைக் காட்டும் வழியே
ஆய சின்னம் அதுவாய்க்
கொண்டு ஊங்கும் கொள்கை வழியே
குலாவும் சிறார்கள் வாழ்கவே
நன்று கல்வி நாமும் நல்கி
நல்லொழுக்கம் வளர்க்குமே
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

ஞானம் சீலம் நாடு எங்கும்
நல்கி மல்கி பெருகவே
மான வீர மாணவர்கள்
வளர்த்தெடுக்கும் தாயிவள்
ஆயகலைகள் அறிவியல்கள்
அள்ளி அள்ளி ஊட்டுவாள்
தேனருந்து வண்டு எனத்
திளைத்து நாங்கள் போற்றுவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

அன்பு ஆசார் அதிபர் கூடி
ஆக்கம் காட்டும் கோவிலாம்
இன்பத் தமிழோடாங்கிலத்தை
ஏந்திப் போற்றும் கோவிலாம்
நன்று ஆட நயந்துபேச
நமக்கருள் செய் கோவிலாம்
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவொம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

போற்றுவோம் போற்றுவோம்
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்



படிப்பகம்

www.padippakam.com



## அகத்தில் பதிந்த முன்னாள் அதிபர் கு. கணேசலிங்கம்



நான் பயின்ற காலத்தே ஆசிரியராக இருந்து அதே பாடசாலையில் அதிபராக உயர்ந்து எல்லோர் மனங்களிலும் நிறைவான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட அதிபர் திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் இளைப்பாறி இருக்கும் இவ்வேளை "வித்தியாலயம் 2003" மலரில் அவர் சேவையை நினைவு கூறுவதில் அவருடைய மாணவன் என்ற வகையில் பெருமையடைகிறேன். எனது எண்ணப்பதிவுகள் எழுத்துருவம் பெறுகின்றன. மனம் நிறைவடைகிறது.

அவருடைய மாணவர்களில் பலர் இன்று புலம் பெயர்ந்து வாழுகின்றார்கள் அன்று 80 களில் புவியியல்ப் பாட நேரத்தின் போது உலகப் பந்தினில் தான் வலம் வருவதோடு எம்மையும் வலம் வரச்செய்வார். நினைனத்துப் பார்க்கின்றபோது நேற்று நடந்தது போல் இருக்கிறது. அவரது அபார திறமைகள் இன்று வெளித் தெரிகின்றன.

உலகின் தரைத்தோற்ற உயர வேறுபாடுகள் கால நிலை, தாவர உயர வேறுபாடுகள், அதன் வளர்ச்சி, தொழில்நுட்பத்துறை, மக்கள் வாழ்க்கை முறை, உற்பத்தித்தித்திறன், அபிவிருத்தி பற்றியெல்லாம் எடுத்துக்கூறுவார். அவற்றை நேரிடையாக நாம் இங்கு காண்கிறோம்.
இலையுதிர் பருவங்களும் இலை துளிர் பருவங்களும் மாறி மாறி வருகின்றன. ஆசிரியர் பற்றிய பழைய நினைவுகளும் மனத்தில் பசுமை தரு நினைவாகின்றன.

அவருடைய கற்பித்தல் முறை தனிச் சிறப்பு வாய்ந்தது. அவர் பழகுவதற்கு எவ்வளவு இனிமையானவரோ அதேபோல் பயிற்றுவதிலும் தனிச்சிறப்பு வாய்ந்தவர். மொழி என்றால் என்ன? அது ஒரு பரிமாற்று ஊடகம், பேச்சிலும் எழுத்திலும் அந்த மொழி இலகுவாக இருந்தால் சொல்லுவோன் மனதில் ஒரு திருப்தியும்,கேட்போன் மனத்தில் ஆழப்பதிகின்ற நிலையும் உருவாகும்.

அதைவிடுத்து தான் கற்ற கல்வியின் ஆற்றலை தன் உயர் நிலையை வெளிக்காட்டுவதற்கு தேடிப்பிடித்து கடினமான சொற்களை வலிந்து புகுத்த நினைத்தால் அது பயனற்றதாகிவிடும் என்ற அடிப்படையில் ஆசிரியருடைய பேச்சும் பாடக்குறிப்புகளும் அமைந்திருப்பது அவருடைய கற்பித்தல்த் திறமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. கா.பொ.த. உயர் தரப்பரீட்சையில் அவரிடம் கற்றவர்கள் நல்ல பெறுபேறுகளை எடுத்திருப்பது எனது இக்கூற்றை உறுதி செய்கிறது.

ஆன்மீகத்தில் நம்பிக்கை உடைய இவர் மனிதனை மிருகமாக மாற்றாது மனிதனாக வாழவைப்பதில் ஆன்மீகத்திற்கு பெரும் பங்கு இருக்கிறது என்ற அடிப்படையில் மாணவர்களை இளவயதில் இருந்தே ஈடுபாடு கொள்ளச் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இவருடைய செயற்பாடுகள் பாடசாலையில் நடைபெறும் கலை மகள் விழாவின் போது தனித்துவமாக வெளிப்படும்.

ஒரு முனற அவர் சரஸ்வதி பூசையன்று அவல் முடிந்நநிலையில் சட்டியோடு நின்று உயர்வகுப்பு மாணவரைப்பார்த்து அவலைக் கொண்டு வாருங்கள் என்று அழைத்த விதத்தை இன்றும் சக நண்பர்கள் நகைச்சுவையாக சொல்லி இன்புறுகின்றபோது பசுமையான அந்த நினைவுகள் உடலுக்கும் உள்ளத்துக்கும் சுகம் தருகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



பழகுதற்கும் பேசுதற்கும் இனிமையானவர் யாருடைய மனத்தையும் புண்படுத்தவிரும்பாத இவர் எல்லோருடனும் அன்பாகவே பழகுவார் இதனால் எல்லோர் மனதிலும் இடம் பிடித்துக் கொள்வார். இத்தகைய பல சிறப்புக்கள் கொண்டவர்.அதிபராக வந்தமை கல்லூரித் தாயினுடைய வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதே.

ஒரு கல்லூரியின் அதிபராக இருப்பது என்பது இலகுவான காரியமல்ல பன்முகப்பட்ட பிரச்சனைகளுக்கு முகங் கொடுக்கவேண்டிய நிலை அங்கு இருக்கிறது. தனது சொந்த வேலைகளையும் அபிலாசைகளையும் தியாகம் செய்யவேண்டிய நிலை தவிர்க்க முடியாத தாகிறது. ஆங்காங்கே கல்விச் சமூகத்தின் சொல்வீச்சுக்கள் கல்வீச்சுக்களாகவும் வந்து மனதைப் புண்படுத்தும். இவை அனைத்தையும் பொறுத்துக் கொண்டால் மட்டுமே ஒரு முதல்த்தர அதிபராக இருக்கமுடியும்.

இவ்வாறு நிலமை இருக்கின்ற போது அரசியல் சூழ்நிலை காரணமாக ஏற்படுகின்ற அனர்த்தங்கள், நிபந்தனைகள் இடப் பெயர்வுகள், அனைத்துக்கும் முகம் கொடுத்து பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட சிறந்த அதிபராக இருந்தமை பழைய மாணவர்களாகிய நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அவருடைய சேவைகளை மறந்தவர் களானால் நன்றி மறந்தவர்களாவோம். என்ற வகையில் பாராட்டப் படவேண்டியவர். அதிபர் கணேசலிங்கம் அவர்கள்.

அவருடைய நோக்கு பரந்து பட்டது. பாட சாலையினதும் மாணவர்களினதும் வளர்ச்சி. குறிப்பாக படிப்பில் பின்தங்கிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி, ஆசிரியர்களுடைய, பெற்றோர்களுடைய நலன் என்ற வகையில் திட்டங்களைத் தீட்டி புலம் பெயர்ந்து வாழுகின்ற கல்லூரித் தாயின் மைந்தர்களோடும்,ஏனையவர்களோடும் தொடர்புகளை ஏற்படுத்தி தீட்டிய திட்டங்கள் பலவற்றை நலடமுறைப்படுத்தியவர். மேலும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்த துடித்தவர் என்ற வகையில் பாரட்டுக்குரியவர்.

அதுமட்டுமல்லாமல் முன்னை நாள் அதிபர் திரு.குணபாலசிங்கமவர்களோடு தொடர்புகொண்டு பாடசாலை நிலமைபற்றி ஆராய்வதும் அவருடைய ஆலோசனைகளைப் பெறுவதும் கூட இவருடைய முற்போக்கான உயர்ந்த தேடலாகும். இதை வெளிப்படையாகவே அவர் கூறுவதன் மூலம் திறமைக்கு மதிப்புக் கொடுக்கின்ற அவரது உயர்ந்த பண்பையும் எமக்கு வெளிக்காட்டி உயர்வின் உச்சத்துக்கே சென்றுவிடுகிறார்.

இத்தகைய சிறப்பம்சம் கொண்ட திரு.கு.கணேசலிங்கம் அவர்கள் அதிபராய் இருந்த 1997 முதல் 2002 வரையிலான காலப்பகுதி எமது பாடசாலை வரலாற்றில் குறிப்பிடத்தக்கதும் மறக்க முடியாததும் ஆகும்.இவருடைய சேவை நீடிக்கப்படக்கூடாதா என்பதே என்மன ஆதங்கம். இருந்த போதிலும் இவருக்கு பாராட்டுதலையும் நன்றியறிதலையும் தெரிவிப்பது எமது கடமை அதுவே தலையாய பண்பும் கூட என்றவகையில் நன்றி தெரிவிக்க இம்மலரில் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு கல்லூரியின் பழைய மாணவன் என்ற நிலையில் பெருமையடைகிறேன்.

**நன்றி**

**செல்லையா தேவன்**




படிப்பகம்

www.padippakam.com



# என் மண்ணின் பெருமை



கடலலைகள் தாலாட்ட
தென்னை இளங்காற்றுக்களின் இசைக்கு
குயில்கள் பாடலிசைக்க
புள்ளினங்கள் உலாவர
பூவினங்கள் மணம்பரப்ப
புது மெருகு பெறுமே
என் மண்.

வானளாவ உயர்ந்து
வந்தாரை வாழவைக்கும்
வளமிக்க பனைமரங்களும்
பார்ப்போரை மயக்கும்
பச்சைப் பசேலென்று
பச்சைக் கம்பளம் விரிந்தது போன்ற
பசும் புல் வெளிகளும்
கொத்துக் கொத்தாய்
நெல் மணிகள் கலகலக்க
நெற் கதிர்கள் தலை சாய்த்து நிற்க
பரந்த வயற் பிரதேசங்களும்
பார்ப்பதற்கு கண் கொள்ளாக் காட்சியே.

கையசைத்துக் கரம்கொடுக்கும்
புகையிலைக் கன்றுகளும்
கொத்துக் கொத்தாய்
காய்த்துக் குலுங்கும்
மிளகாய்களும்
நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்தி

பாடுபட்டுப் பக்குவமாய்
பாடுபடும் மக்களின்
அயராத உழைப்பும்
பசுமை கொழிக்கும்
என் மண்ணின்
மாண்பைப் புலப்படுத்துமே.

என் மண்ணின் மத்தியில்
நடு நாயகமாய் விளங்கி
கல்வி மான்களையும்
அறிஞர் பெருமக்களையும்
ஏராளமாய் உருவாக்கி
இன்னல்கள் இடையூறுகளுக்கு
இன்முகமும் கொடுத்து
இன்று வரைக்கும்
அளப்பெரிய சேவையாற்றி வரும்

மத்திய மகா வித்தியாலயமும்
வேலணை மண்ணின்
பெருமையைப் பறைசாற்றி நிற்குமே.
மதங்கள் வேறாய் இருந்தாலும்
மொழியால் நாம் ஒன்றே என்பதை
இந்து முஸ்லீம்
கிறிஸ்தவ ஆலயமென
அமைதியின் உறைவிடங்களும்
என் மண்ணின்
பெருமையைப் பறைசாற்றுமே.

**பழைய மாணவி**
**திருமதி. ரஜனி அன்ரன்**
**டோட்மொண்ட்**
**ஜேர்மனி.**



படிப்பகம்

www.padippakam.com



# பனைமரக் காடே... பறவைகள் கூடே...

[பயணக்கட்டுரைகள் இலக்கியவகையறாக்களுள் ஒன்றாக மதிக்கப்பட்டு வருகிறது. அன்று கடிதத்தொடர்புகளுக்கு எடுக்கும் கால அவகாசம் வாரங்கள் மாதங்கள். தொலைபேசியும் கூட மிகுந்த செலவுமிக்கதான தாகவும், பயணங்க நாட்கணக் கானவையாகவும் இருந்தன. அப்போது உலகம் மிகப் பெரிதாகத் தோற்றமளித்தது. ஆகவே பயண அனுபவங்கள் பலருக்கும் பகிர்தல் பொருட்டு பகர்தலுக்கு இலக்கியமானது. இன்று மூன்றாம் மண்டல நாடொன்றின் கிராமத்தில் தாயின் காய்ச்சல் பத்தாயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கப்பால் வல்லரசு நாட்டின் கட்டிடக்கூட்டில் வாழும் மகனால் மகளால் அடுத்த நிமிடத்தில் அறிய முடிகின்றது. உலகைச் சுற்றிப் பயணிக்க 16 மணித்தியாலங்கள். உலகம் சிறியதாக விட்டது. இருந்தும் நமக்கும் நமது பிறந்த மண்ணிற்கும் தூரம் அதிகம். முகம் இழந்தவனின் தாய் மண் பிரவேசம் இங்கே பகிர்தலுக்காய் பதிவாகிறது.]

- மலர்க்குழு -



உறவுகளைத் தேடி என் ஊருக்குள் சென்றேன்.
முற்றத்தில் வைத்த முல்லை
என் கொல்லைக்குள் இன்று இல்லை.
வேலியில் பூத்திருந்த பூவரசும் முள்முருக்கும்
சாலைக் குயில்களின் சங்கீதச் சோலைகளும்
இன்று பாலைப்பெருவெளியாய்...

மகாகவி.

இருபத்தி நான்கு மணிநேரம் கூடக் கடப்பதற்குள் என் கனவைச் சென்றடைவேன் என்று நான் அங்கு சென்றடையும் இறுதிக்கணம் வரையும் நம்பவில்லை.

பலாலி விமான நிலையத்தை நோக்கி விமானம் தரையிறங்க முற்படுகையில் ஏதோவொன்று என்னில் இறுகிவருவது தெரிந்தது. சிறிய சிந்தனைப் பரப்பிற்குள் அல்லோலமாக மடையுடைத்த உணர்ச்சிக் குழம்புகள் கணப்பொழுதில் மூளையின் அனைத்து அடுக்குகளிலும் ஆவேசப் பிரவாகம் செய்து உடலெங்கும் இறுக்கத்தைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. தசைநார்கள் இறுக்கம் கண்டு அசையாமையைத் தேடின.

பிரக்ஞையின் ஏதோ ஒரு நுண்துண்டம் நடப்பதன்மீது சுயவிளக்கம் ஒன்றிற்கான எத்தனங்கள் செய்து தோல்விகண்டு கொண்டிருந்தது.

பலாலி விமானத் தளத்தின் மத்தியில் உள்ள ஓடுபாதையில் தரையிறங்கிய விமானத்தை விட்டு வெளியேறியவுடன் இராணுவத் தோற்றங்கள் அச்சமூட்டின. ஆக்கிரமிக்கப்பட்ட தேசமொன்றினுள் தவறுதலாக வந்திறங்கி விட்டேனோ எனவும் ஒருகணம் உணர்வலையோடியது.

விமானத்திலிருந்த பொதிகளையெல்லாம் இராணுவ வாகனமொன்றிலும், பயணிகளை பஸ் வண்டியொன்றிலும் ஏற்றிக்கொண்டு இராணுவப் பரிசோதனைச் சாவடிக்கு எல்லோரும் கொண்டு செல்லப்பட்டார்கள்.

அவரவர் தமது பொதிகளைத் தூக்கிக்கொண்டு இன்னொரு பஸ்வண்டியொன்றினுள் ஏறவும், பஸ் யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டது. போரின் தழும்புகள் நிறைந்த பிரதேசமொன்றின் மௌன அலறலினால் செவிடாகிப் போனவர்கள் போல பஸ்வண்டிக்குள்இருந்தோர் உறைந்து போயிருந்தனர். அவர்களில் பலர் என் போன்றே வெளிநாடுகளில் இருந்து வந்ததை அவர்களின் பொதிகளின் தோற்றங்கள் உறுதி செய்தன. செப்பனிடப்படாத தெருக்களினால் வாகனம் மெதுவாக முன்னேறிக்கொண்டிருந்தது. ஆங்காங்கே காணப்படும் இராணுவச் சோதனைதச் சாவடிகளும், காவலரண்களும் அச்சமூட்டுவதாயிருந்தன. காய்ந்து போன தெருக்களில் இருந்து புழுதி கிளர்ந்து வாகன யன்னல்களூடாக நாசியை வந்தடைந்த போது, மண்ணின் மணம் மீண்டும் ஞாபகத்தில் கிளர்ந்தெழுந்தது. பிற்பகல் நான்கு மணியிருக்கும். இயற்கை எழுந்தமானமாக மதமதத்திருந்தது. பசுமை மாசிமாத வெய்யிலையும் மீறித் தன்பாட்டில் மிளிர்ந்து கொண்டிருந்தது. எனக்குள் ஆழ்ந்து உறைந்து இக்கணம் வரையும் காத்துக்கொண்டிருந்த இந்தத் தேசத்தின் இருபத்தியிரண்டு மாசிமாதங்கள் உருகிக் கரைந்து என் உயிரை நனைத்துக் கொண்டிருந்தன. நாசியை வந்தடைந்த புழுதிகளுக்குப் புனிதப் பரிமாணம் கிடைத்தது. 'நான்' புழுதியிலிருந்து மீண்டும் பிறந்து கொண்டிருந்தேன். 'தேசமற்றவன்' என ஐரோப்பியத் தெருக்களிலே கூறிய எனக்குத் தேசமும் பிறந்துகொண்டிருந்தது. எதிர்பாராத கணமொன்றில் இன்னொரு பிறப்பிற்குள் தூக்கியெறியப்பட்டவன் போலவும், உலகம் தோன்றிய நாள் முதல் இப்பிறப்புத்தான் உண்மையானதாகவும் மற்றவையனைத்தும் கனவுகளாக இருக்குமோ எனவும் எண்ணத் தோன்றியது.

உயர்பாதுகாப்பு வலய எல்லையைத் தாண்டியபோது மனித நடமாட்டங்கள் அதிகரித்தன. சைக்கிள் போக்குவரத்துகள் சரளமாகின. கைவிடப்பட்ட இயற்கையின் சுயம் மனிதர்களால் வடிவமைக்கப்பட்ட விவசாய நிலங்களாக காட்சியளித்தன. அதே சந்திகள்,



படிப்பகம்

www.padippakam.com



ஒலிபெருக்கிப்பாடல்கள்... இங்கு எதுமே மாறவில்லையா ?

எல்லாமே இங்கு பரிச்சயமானவை. பரிச்சயமற்றவையென இங்கு எதுவுமேயில்லை. பரிச்சயமான மரங்கள், பரிச்சயமான செடிகொடிகள், பரிச்சயமான பூக்கள், பரிச்சயமான பறவைகள்... எனக்குப்பரிச்சயமற்ற யுத்தத் தழும்புகளைப் பின்னணியாகக் கொண்ட பரிச்சயங்கள். வேறிடத்திற்கு வேறிரை தேடிப்போன பறவை அதிகம் தாமதமாகி மீண்டும் என்கூட்டை நாடிப்போகிறேன்.

பரிச்சயமான காட்சிகளைத்தாண்டி பஸ்வண்டி யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்தது. எந்த வீதிக்கு என்ன பெயர் என்பதை இலகுவில் ஞாபகப்படுத்திக் கொள்ளமுடியவில்லை. காயப்பட்ட நகரின் கலகலப்பான வீதிகளில் கண்ணோட்டம் வீழ்ந்தபோது எல்லாமே சிறுத்து விட்டதாகத்தோன்றிது. கட்டிடங்கள் சோபையிழந்தவைபோல் காட்சி தந்தன. யாழ்ப்பாணச் சாக்கடையின் சரித்திர மணம் முண்டுபிடித்தது. வியாபார நிலையங்கள் சூடுபிடித்திருந்தன. என் முன்னைநாட் தலைநகரம் சோகத்தைப் பரவியது. தேனீர்க் கடைகளிலிருந்தும், உணவுவிடுதிகளிலிருந்தும் சினிமாப்பாட்டுகள் போட்டி போட்டுச் செவிப்பறையில் வந்து விழுந்தன. தனியார் பஸ்தரிப்பிடத்தில் விரிசையாக நிறுத்தப்பட்டிருந்த முற்சக்கர மோட்டார் (ஓட்டோ) வண்டிகளின் ஓட்டுனர்கள் பஸ்ஸைச் சுற்றி வளைத்து அதிலிருந்து இறங்குபவர்களை தமக்கு வாடிக்கையாளராக மாற்றப் பகீரதப் பிரயத்தனம் செய்து முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள்.

நான் யாழ்ப்பாணம் வந்துவிட்டேன். ஆமாம், 'நான்' யாழ்ப்பாணம் வந்து விட்டது. யாருக்கும் எவ்வித முன்னறிவிப்பும் செய்யாது நான் யாழ்ப்பாணம் வந்து விட்டேன். யாருக்கும் எதுவித முன்னறிவிப்பும் இல்லாமல், யாரும் வழியனுப்பாமல் ஒரு நாள் விமானமொன்றில் ஏறிப் பரதேசம் போனவன், பதினெட்டு வருடங்களையும், பல்லாயிரம் கிலோமீட்டர்களையும், என்னையும் தாண்டி, யாருக்கும் எதுவித முன்னறிவிப்பும் இல்லாமல், யாரும் வழியேற்க நில்லாமல் யாழ்ப்பாணம் வந்து நின்றேன்.

இப்போது வீட்டுக்போகவேண்டும். வீட்டுக்குப்போதல் இப்போது சாத்தியமாகிவிட்டது. நான் வீடு செல்லப்போகிறேன். ஒ மனிதர்களே ! கேட்டுக்கொண்டுவிட்டீர்களா ? வீட்டுக்குப் போதல் இப்போது சாத்தியமாகிவிட்டது. 'வீடு செல்லல்' என்னும் அபத்தம்அர்த்தம் கண்டுவிட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து நான் வீடு செல்லப்போகிறேன். ஆனால், வீடு எங்கே என்று கண்டுபிடிக்கவும் வேண்டுமே ! வேலணையில் தான் என் வீடு. பள்ளிக்கூடத்தடியில். 'பள்ளிக்குடத்தடி' என்று கூறித்தானே முன்னயை நாட்களில் இ.போ.ச வில் ரிக்கட் எடுக்கவேண்டும். ஆனால் அங்கு இன்னமும் நேவி இருக்கிறதே. அப்படியானால் அம்மாவின் வீடு எது ?

தொலைபேசி மையமொன்றில் நுழைந்து, திருகோணமலையிலுள்ள என் தங்கையின் தொலைபேசி இலக்கங்களை அழுத்தினேன்.

'ஹலோ, நான் அண்ணா பேசுகிறேன். யாழ்ப்பாணத்தில் நிற்கிறேன். இப்போதுதான் வந்தேன். அம்மா வேலணையில எங்கையிருக்கிறா ?'
ஒரு கண அமைதிக்குப்பின்: 'உனக்கெப்ப பாத்தாலும் பகிடிதான், ஏன் ரெலிபோன் அடிச்சனியெண்டு சொல்லு ?'
'நான் பகிடிவிடேல்ல, யாழ்ப்பாணத்திலதான் நிக்கிறன்.அம்மா வேலணயில எங்கயிருக்கிறா எண்டு சொல்லு ?'
'சரி அதைவிட்டுப்போட்டு ஏன் அடிச்சனியெண்டு சொல்லு.'

விசித்திரமாய் என் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த தொலைத் தொடர்பு நிலையப் பொறுப்பாளரிடம் தொலைபேசி முனையைக் கொடுத்து, 'அண்ணே, நான் யாழ்ப்பாணத்திலதான் நிக்கிறனெண்டு ஒருக்காய்ச் சொல்லி விடுங்கண்ணே.'என்றேன். அவர் சிரித்தவாறே தொலைபேசியை வாங்கி நான் யாழ்ப்பாணத்தில் தான் நிற்கிறேன் என்றும், தேவையேற்படின் தனது இலக்கத்திற்குத் தொலைபேசியில்அழைத்து என்னுடன் கதைக்குமாறும் கூறி உண்மையை ஏற்றுக்கொள்ள வைத்தார். ஆச்சரியமடைந்த என் தங்கையிடமிருந்து அம்மா இருக்குமிடத்தைத் தெரிந்து கொண்டு ஓட்டோவைப் பிடித்துக்கொண்டு ஒரு சாரமும், ஒரு சோடி செருப்பும் , ஒரு தண்ணீர் போத்தலும் வாங்கிக் கொண்டு வேலணை ராசையா வீதிக்குப் போகும்படி ஓட்டோக்கார இளைஞனிடம் கூறினேன்.

நயினைதீவை அடியாகக் கொண்ட அந்த இளைஞன், நான் வெளிநாட்டிலிருந்து வருகிறேன் எனப் புரிந்து கொண்டு கேள்விகள் கேட்க ஆரம்பித்தான். பின்னர், கேள்விகள் தீர்ந்து போனதோ என்னவோ, 23 வயது நிரம்பிய அவ்விளைஞன் தன் வாழ்க்கையைப் பற்றிக் கூறினான். வறுமைப்பட்ட குடும்பம், பெண்சகோதரங்கள், அவர்களின் திருமணம், இயக்கத்தில் இறந்து போன தம்பி ... ஓ ! சபிக்கப்பட்டவர்களே. சபிக்கப்பட்டவர்களே ! எப்போதுதான் உங்கள் சிறுமைகளை விட்டொழிவீர்கள் ? எப்போதுதான் பெண்களுடன் பிறக்கும் ஆண்களுக்கு விடுதலையளிப்பீர்கள் ? எப்போதுதான் பெண்களைச் சீதனம் வாங்கி 'வாழ்வு கொடுக்கும்' பண்டங்களாகக் கருதாது விடுவீர்கள் ? சீதனம் கொடுக்கச் சொத்துத் தேடப் பரதேசம் போனவர்களே, உங்களில் எத்தனை பேர் நீங்களாகவே இங்கு மீண்டு வருவீர்கள். ?

புறப்பட்ட போது வழியனுப்பிய யாழ் கோட்டையினிடத்தில் வெறுமையிருந்தது. அங்கெல்லாம் புல், பூண்டு வளர்ந்து பசுமை பரவியிருந்தது. இராணுவக் காவல் அரண்களைத் தாண்டி, பரிச்சயம் நிறைந்த பண்ணை வாசனை வரவேற்றது. காலத்தால் மாற்றமுடியாத அநித்தியமான அதே வாசனை. பரிச்சயமான பண்ணைக் கடல்.

சாதாளைகளில் மோதிச் சரிந்து இல்லாமற் போகும் அலைகள் சதாவரவேற்ற வண்ணமாக இருக்கும் அதே பண்ணைக்கடற்கரை. முன்னரெல்லாம் பண்ணை வாசனையுடன் மீன் சந்தை வாசனையும் என்னைப்பிடி உன்னைப்பிடி என்று கட்டியம் கூறும். இப்போ



படிப்பகம்

www.padippakam.com



இராணுவச் சீருடையும் 'பங்கர்களும்' அங்கே நடக்கும் கெடூரமான 'ஒளிச்சுப்பிடி' விளையாட்டின் நிஜமுகங்களையும் அவற்றின் கோர விதிகளையும் உணர்த்தின.

கடலுள் படுத்திருக்கும் றோட்டு முனையில்'ஓட்டோ' நுழையவும், நான் ஒருவன் மட்டுமே பின்னால் அமர்ந்திருந்ததைக் கண்ட சிங்களச் சிப்பாய் ஒருவன் வண்டியை மறித்துக் கேட்டுக் கேள்வியின்றி தானும் பின்னால் ஏறிக்கொண்டான். அவன் தோழிலே ஒரு 'கலாஷ்நிக்கோவ்' தொங்கிக்கிடந்தது. இயல்பாகவும் இறுக்கமாகவும் என்னுள் எழுந்த திகிலை வெளிக்காட்டாமல் இருப்பதற்கு நான் திண்டாடினேன். அவன் 'அண்ணளவான ஒரு நட்புப்பாணியில்' அரைகுறைத் தமிழில் என்னுடன் அளவளாவினான். நான் பிரான்ஸிலிருந்து வருகிறேன் என்று 'ஓட்டோ' இளைஞன் என்னை அறிமுகப்படுத்திய போதும், அவன் நான் கொழும்பில் என்ன தொழில் செய்கிறேன் என வினாவினான்.

அந்த இருபது வயதுச் சிங்கள் சிப்பாயின் சீருடையையும், அவன் 'கலாஷ்நிக்கோ' வையும் களைந்துவிட்டால், அவன் வெறும் ஏழைச் சிங்கள வாலிபனாகக் காட்சி தந்தான். அவனது முக, உடற்தோற்றங்கள் வெறுமையான சிரிப்பு எல்லாமே அவன் மீதிருந்த பய உணர்வை சற்றுத் தளர்த்தியது. முன்னரெல்லாம் வலைகள் விரித்துக் கிடந்த கடற்பரப்பு முட்கம்பிகளால் ஆக்கிரமிப்புக் கண்டிருந்தது. மண்டைதீவுச் சந்தியிலே சிங்களச் சிப்பாய் எம்மிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான். மனத்தில் ஒரு தெம்பு பிறந்தது. அல்லைப்பிட்டிச் சந்தியில் இராணுவச் சோதனையுண்டு, அதையும் கடந்து விட்டால் நிம்மதி.

ஆதவன் பனை வடலிக்குள் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். சதுப்பு நிலங்களை வருடியதால் தண்மை பெற்று வந்த மென்காற்று மேனியைத் தொட இதமாகவிருந்தது. அல்லைப்பிட்டி அலுமீனியத் தொழிற்சாலை நொருங்கிக் கிடந்தது. இராணுவச் சோதனைச் சாவடியைத்தாண்டி அப்பால் செல்லும் கணத்தைக் காத்து மனமேங்கியது.

அடையாள அட்டை பார்க்கப்பட்டு, பொதிகள் கிளறப்பட்டு, அப்பால் 'ஓட்டோ' உருள ஆரம்பித்தபோது 'இனிக் கொன்றோல் இல்லையண்ணே' என்ற ஓட்டோ இளைஞனின் வாக்கியங்கள் செவிப்பறையில் வீழ்ந்ததும் , சிந்தனையின் துல்லியமான மடிப்புகள் விரியவாரம்பித்தன. பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் பார்வையிலிருந்து பின்னோக்கி மறைந்து போன தெரு இப்போ பார்வையின் முன்னோக்கி விரிந்த வண்ணமாகவிருந்தது.

குழிகள் விழுந்து, கரடுமுரடாய், அவ்வப்போ மதகுகளின் மேல் படர்ந்து, நீண்டு விரிந்த அந்த 'என் நெடுஞ்சாலை' , என்ன ? படம்பாரத்து விட்டு வருகிறாயா ? என என்னிடம் வினாவியது. முன்னரெல்லாம், 'கலரியிலிருந்து' படம் பார்ப்பதற்கும், யாழ்ப்பாணம் போய்வரவும் பணமிருந்தால், யாருமறியாமற் சென்று , (காவாலித் தனமாய்ப்) படம் பார்த்து விட்டுத் திரும்பிவரும்போது இந்த நெடுஞ்சாலைக்குப் பார்த்த படக் கதையை அராலிச் சந்திக் வருவதற்குள் சொல்லுவது எனது வழக்கமாகவிருந்தது. பார்த்து வந்த படக்கதை சொல்லுதல்தான் இந்த நெடுஞ்சாலைக்கும் எனக்குமான உறவுகளில் முதன்மையானது. சகிக்க முடியாத யதார்த்தங்களிலிருந்து ஆகக் குறைந்த விலைகொடுத்து விடுதலை வாங்குவதுதான் அப்போ எனக்குச் சினிமா பார்ப்பதன் அர்த்தத் தெளிவு.

ஆனால், பதினெட்டு வருடங்களுக்கு மேலாக நான் பார்த்து விட்டு வரும் படக்கதையை எவ்வாறு நான் அராலிச் சந்தி வருவதற்குள் கூறிமுடிப்பது ? என் சிந்தனைக்கு மூச்சுத் திணறியது. தெருக்கரையோரமாக நின்று வா வா என வரவேற்ற மரங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கட்டியணைத்து முத்தமிட்டால், ஓட்டோவை விட்டிறங்கி ஓவென்று கத்திக்கொண்டு ஓடிச்சென்று கடல் நீரிற் காலை நனைத்து வந்தால், இடது பக்கமாகப்பனை வடலிகளுக்குள்ளால் ஓடிச்சென்று மணற்குவியல்களில் உருண்டு வந்தால், பூவரச இலையொன்றைக் கொய்து உருட்டி ஒரு ஊதுகுழல் செய்து ஊதினால்...

வெறும் மேலுடன் வெளிகளில் வியர்வையுடன் அலைய ஆரம்பித்தேன். எண்ணை வைத்துச் சீவாத பரட்டைத் தலையும், பொருக்கு வெடித்த தோலுமாய் பாசாங்குகளைப் பற்றைகளுக்குள் பதுக்கிவைத்துவிட்டு, விலா எலும்பு வெளியே தெரிய என் சுமையற்ற கனவுகளைத் தாங்கி ஊரிலிருந்து தொலைவில் உள்ள அந்த வெளியில் ஊர்வலம் போனேன். பாதை படக்கதை கூறெனக் பலவந்தப்படுத்தியது.

என் பதினெட்டு வருடப் படக்கதையை, என் பதினெட்டு வருட அந்நியத்தை, பதினெட்டு வருட இல்லாமையை, பதினெட்டு வருடக் கனவை அராலிச் சந்தி வருவதற்குள் இந்த நெடுஞ்சாலைக்குச் சொல்லிமுடிப்பதென்பது அவ்வளவு இலகுவானதா ? மொழிக்கு மூச்சுத்திணறியது.
சித்திரைக் கஞ்சி விழாவிற்கு ஈச்சங் குலைகள் வெட்டப்போன வெளிகளே, பற்றைகளே , தாழம்பூக்களே, வரட்டு நிலத்தின் சிப்பிகளே, சோகிகளே, நத்தைகளே, ஊரிகளே, மதகுக் குட்டைகளில் வாழும் மீன் குஞ்சுகளே, சிறு பூச்சிகளே... நான் மீண்டும் வந்திருக்கிறேன், என்னிடமிருந்து மீண்டு வந்திருக்கிறேன். பதினெட்டு வருடங்களாகப் படம் பார்த்து வந்திருக்கிறேன்.

இங்கிருந்து நான் போனபின் எனக்கு நடந்ததனைத்தும் வெறும் கனவுதான் என்று உள்ளம் உறுதியுடன் அறைகூவியது. எதுவும் நடக்கவில்லை. நடந்ததனைத்தும் பிரமைகள். சுத்தப்பிரமைகள். வாழக்கைத்துணையும், ஆதவனும் வேலனும் எல்லாமே கனவுகள்தான். ஓ, உடைந்து நொருங்கிச் சிதறிப் போகும் என் உண்மைகளே. ஓயாமல் இரைந்து கரையை அடித்துக் கொண்டிருக்கும் அந்தமற்ற அலைகளே.



படிப்பகம்

www.padippakam.com



இருட்போர்வை வெளிகளை மூடும்வேகத்தில் அராலிச் சந்தி வந்தது.

இடது பக்கம் போனால் அம்மாவிடம் போகலாம்.வலது பக்கம் போனால் ஒற்றைப்பனையிடம் போகலாம். இறங்கி வட மேற்கால் நடந்தால் நான் பல தடவை மானசீகமாக எரிந்து போன சுடுகாட்டிற்குப் போகலாம்.
மதிய வேளைகளில் மயிலப்புலம் தாண்டி, கொதி வெயிலையும் தாண்டி, சூரியனில் குளித்தவாறே சுடலையை அடைவதும், கானல் நீரைக் கண்டு களிப்படைவதும் எத்தனை அற்புதங்களாக இருந்தன. வரண்டு போன இந்த 'வடக்கு வெளி' பிரக்ஞையின் ஆழ்மட்டத்திலிருந்து பெயர்ந்து மேலெழுந்து வேடிக்கை காட்டியது.

நடந்து கொண்டே சிந்திப்பதற்காக நான் கடந்து பழக்கமுள்ள அராலிவெளி, கானல் நீர், வடசுடலை, அதன் சிறு கிணறு, இவையெல்லாமே ஏதோ ஒரு விதத்தில் என் பதினெட்டு வருடங்களுடன்பிணைந்து கிடப்பது உள்ளத்தின் மூலைமுடுக்குகளில் எழுந்த எதிரொலிகளால் முறையாக உறுதி செய்யப்பட்டது.

செக்கலிருட்டிலும், அராலிச் சந்திக் காவலரணில் இரண்டு சிப்பாய்கள் அவதானிப்பிலிருப்பது தெரிந்தது. ஓட்டோ தெற்கு நோக்கி குடிமனைகளையும் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது. ஆங்காங்கே வெளிச்சப் பொட்டுகள் காணப்பட்டன. ஆரம்பத்தில் சில வீடுகள் இடிபாடடைந்து காணப்பட்டபோதும் , தாண்டிச்செல்ல பனங்கூடல்களும் வீடகளும்மெல்லிருளிலையும் மீறித் தெனபட்டன. திடிரென் ஓட்டோ ஒளியூட்டப்பட்ட ஒரு கோவிலைத்தாண்டி சந்தி ஒன்றில் நுழைந்தது.

சுயநினைவு வந்தவனாய் 'தம்பி, இராசையா வீதியைத்தாண்டி வங்களாவடிச் சந்திக்கு வந்து விட்டோம்' என்று நான் கூறவும் அவ்விளைஞன் ஓட்டோவைத் திருப்பி என் வழிகாட்டலில் இராசையா வீதியை நோக்கி ஓட்டினான். நெஞ்சு பதைபதைத்தது.

முன்னறிவிப்பில்லாமல், செக்கலிருட்டில் எதிர்பாராத நேரத்தில் வரும் எதிர்பாராத மனிதனாக நான் வாசலில் நின்று அம்மாவை அழைக்கப் போகிறேன்...

******************************

வாளியில் முகர்ந்திருந்த தண்ணீரில் முகத்தைக் கழுவவும் , இருளில் நின்ற பசுவில் எல்லை கெட்ட நேரத்தில் கறந்து காய்ச்சிய பால் கைக்கெட்டியது. அம்மாவின் கையால் சமைத்ததினால் அறுசுவைபெற்ற உணவை உண்டதும் ஆறுதல் உண்டாகியது.

தூய இருளில் நட்சத்திரங்கள் கவிந்த வானம் முன்னைய நாட்களை முன் நிறுத்தி மாய வித்தை காட்டியது. மணிக்கணக்கில் சலிப்பின்றிப் பார்த்தவாறே நட்சத்திரங்களை விசாரம் செய்யும் இளமைக்காலப் பொழுதுகள் ஐரோப்பிய வெளிச்சம் நிறைந்த நகர இரவுகளில் காணக்கிடைப்பதில்லை. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் செய்த பயணமல்ல இது, ஒரு பிரபஞ்சத்திலிருந்து இன்னொரு பிரபஞ்சத்திற்கு நடத்திய பாய்ச்சல் என உள்மனம் கூறியது.

ஒரு லாம்பின் உருண்ட கண்ணாடிச் சுவரின் மத்தியில் மண்ணெண்ணை உயிரூட்ட மயங்கி மிளிர்ந்த சுவாலையொன்று முகங்களை ஒளியூட்டும் முயற்சியில் வெற்றிபெற, சுற்றிவர இருந்த உறவுகள் கேள்விக் கணைதொடுக்க, நான் ஒரு சாய்மனையில் சரிந்தவாறே கதை சொல்லியானேன். பதினெட்டு வருடமாகப் பார்த்த படக் கதை. கனவுகளில் வாழ்ந்த கதைகளைப் புனைவுகளாய் எண்ணிப் புகன்றவாறே பொழுது போவதை மறந்தபோது தூக்கம் அழைத்தது.

நிசப்த வெண்மையில் வீழும் துல்லியமான கருங்கோடுகளாக கதை சொல்லியானது என் குரல். இப்போது மீண்டும் நான் ஊஞ்சல் ஆட ஆரம்பித்தேன். என் கதையை எனக்கே கூறி அங்கும் இங்கும் என ஆடும் கலை. அற்புதமான ஊஞ்சற் கலை. பிரபஞ்சம் முழுவதிலுமே என் குரல் மட்டும்தான் ஒலித்துக்கொண்டிருக்கிறதோ எனப் பிரமைகொள்வதைத் தடுக்கு முகமாய் அவ்வப்போ நாய்கள் குரைத்தன. 'நான்' எனும் புனைவை நான் கதைப்பொருளாக்கிப் புளகாங்கிதம் கொண்டேன். கதை சொல்வதில் கதை சொல்லியைத் தவிர அதிகம் இன்புறுபவர்கள் வேறு யாருமிலை.

நிசப்தமான காரிருளிற் புதைந்து கிடந்த கிராமத்தின் இரவுக்காவலர்களான நாய்களின் இடையிடையேயான குரைப்புகள் ஐரோப்பாவின் மிகச் சிறந்த இசைவாணனின் மிகச் சிறந்த இரவிசைத் தொகுப்பிலும் இனியதாயிருந்தது.

துருதுருவென இருந்த உள்ளத்தையும் மீறி உடல் அமைதி வேண்டியது. தூக்கம் இமைகளைச் சாத்தியது. இதமான கட்டிலுக்குப் பழக்கப்பட்டுவிட்ட உடல் கடின நிலத்தில் விரிக்கப்பட்ட பாயுடன் சற்று முரண்பட்ட போதும் களைப்பு மிகுதி தூக்கத்தை இலகுவில் அழைத்து வந்தது.

நுளம்பின் ரீங்காரத்தையும், இரவாயினும் உயர்ந்த வெப்பநிலையையும் மீறி உறக்கம் கொண்ட போதும், அதிகாலை நான்கு மணியளவில் வெடிச்சத்தங்கள் விழிப்பைக் கொண்டு வந்தன. வடக்கு வெளியில் இடையிடையே இராணுவதினர் அதிகாலைப் பயிற்சி எடுக்கிறார்கள் என அம்மா விடயம் கூறினார். போர்க்கால வாழ்வின் சுமை, போர்ச் சூழலின், யுத்த பிரதேசத்தின் அனுபவம் முதன்முதலாக



படிப்பகம்

www.padippakam.com



அண்மித்துக் கிடந்தது.

சிறிது நேரத்தில் சேவல்கள் கூவி ஆதவனை அழைத்தன. அதிகாலை இளங்கதிர்கள் தென்னைகளையும், பனைகளையும், பூவரசுகளையும் மற்றும் அனைத்துப் பசுமைகளையும் மிளிரவைத்தன. வாயிற்படியில் குந்தியிருந்து ரம்மியமான இக்காட்சியைக் கண்ணுற்றபோது பல்லாண்டு ஏக்கங்கள் என்னில் தணிந்து போவது தெரிந்தது. மரவெள்ளி மரங்களுக்கிடையே கிடந்த குப்பைகளைக் கிளறிக் கோழிகள் அதிகாலையிலே புழுப்பூச்சி வேட்டையை ஆரம்பித்திருந்தன.

கிணற்றின் தண்ணீர் மட்டம் இன்னமும் மேலேதான் நின்றது. வாளியைத் தூக்கியெறிந்து லாவகமாகத் தண்ணீரை மொண்டு தலையில் கொட்டியபோது உடல் ஒரு கணம் உலுப்பப்பட்டது. ஆடையுடன் குளிப்பது அந்நியமாகவும், விசித்திரமாகவும், கடினமாகவும் பட்டது.

உறவுகளும், அயலவர்களும் ஒன்றுகூடிக் குசலம் விசாரித்தார்கள். 'வயது போனது பெரிதாகத் தெரியவில்லை.', 'பெடி இருந்தது போலதான் இருக்குது.' 'எவ்வளவுகாலம் நிப்பியள் ?', 'ஏன் குடும்பத்துடன் வரவில்லை ?' , 'ப்ரான்ஸில இனவாதமிருக்காமே!', 'எங்கட ஆக்களெல்லாம் அங்க நல்லாயிருக்கினமோ ?' , எனவெல்லாம் பல கேள்விகள் தொடர்ந்து வந்தவண்ணமாகவேயிருந்தன. முடிந்தளவு பதில்களைக் கூறிவிட்டுத் துறையூருக்கு மீன் வாங்கப் புறப்பட்டு விட்டேன்.

இன்னமும் ஓடக்கூடிய நிலையிலிருந்த, இரவலாகப் பெற்ற ஒரு துவிச்சக்கர வண்டி என் துணைவனானதும் என் பயணம் ஆரம்பமாகியது. வங்களாவடிச் சந்தி, பஸ்கொம்பனியடி எல்லாவற்றையும் தாண்டி துவிச்சக்கரம் என்னை தூக்கிச் சென்று தவறணையைத் தாண்டி மீன் வாங்கும் இடத்திற்குக் கொண்டு வந்து விட்டது. ரூபாவில் மீன் மிக மிக மலிவாக இருந்தது.

மதிய உணவை அருந்திவிட்டு, சுட்டெரிக்கும் வெய்யிலில் என் துவிச்சக்கரத்துடன் புறப்பட்டேன். முன்னிருந்திராத புதிய பாதைகளுடாகப் பயணம் செய்து இடங்களை அடையாளப்படுத்தி நுண்விபரங்களுக்குப் பரிச்சயப்படுவது இலகுவாக இருக்கவில்லை. பண்படுத்தப்பட்ட முன்னைநாட் தெருக்கள் பல சுவடிழந்து வெறும் பாதைகளாக இருந்தன. மத்திய பாடசாலையிலிருந்த மயிலப்புலம் வரையும் செல்லும் தெரு கோலமிழந்து கிடந்தது.

சீருடையின்றித் திரியும் இராணுவத்தினரின் தோள்களிலும் துப்பாக்கி தொங்கியது. தேசம் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறதென்பதை இடையறாது உணர்த்தியது இராணுவப் போக்கு வரத்துகள். சிங்களச் சிப்பாய்கள் எம் நிலத்தைத் தம் நிலமெனக் கருதி அங்கு வாழ்வதுபோல் பட்டது. கிராமத்தின் ஒரேயொரு பேக்கரியும் அவர்கள் வசமேயிருந்தது. நட்டநடுத் தெருவில் கூட சிலவேளைகளில் அவர்கள் பயிற்சிபெற்றவண்ணமிருந்தார்கள். கோவில் வீதிகளில் பெருத்த கோசத்துடன் உடலை முறித்துக்கொண்டிருந்தார்கள்.

அண்மையில் இராணுவப் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியிலாகிவிட்ட, அதனால் உடையாத நிலையிலுள்ள 'என் வீடு' என்னுடையதாகவிருக்கவில்லை. இவ்விடத்தில் என் வீடு இருந்தது, என் வேலியிருந்தது, என் முற்றமிருந்தது, என் கிணறிருந்தது. இல்லாமற்போன இவையெல்லாம் நானல்ல. வீட்டுக்குப்போதலைச் சாத்தியப்படுத்தலில் இருந்த நம்பிக்கை ஒரு கணப்பொழுதில் ஆவியாகியது.

ஓ காலமே. ஓ இடமே. நேற்று ஓடிய ஆற்று வெள்ளம்தான் இன்னும் இப்போதும் இங்கே ஓடுகிறதென ஒரு மாயையைக் கொணர்வாயா ? தென்னோலைகளில் நேற்று வந்தமர்ந்த கிளிகள்தான் இன்னும் இங்கே அமர்ந்திருக்கின்றன எனும் ஒரு பிரமையைத் தருவாயா ? எங்கே அவர்களெல்லாம் ? எங்கே அவைகளெல்லாம் ? இங்கே, இக்கணத்தில், இவையவையெல்லாம்... ஓ காலமே! ஓ இடமே! அருளைக் காணவில்லை. தேவனைக் காணவில்லை. கணேசனைக் காணவில்லை. குணத்தைக் காணவீலை, அப்பனைக் காணவில்லை, வரைவதனால் மட்டும் அன்பு வரையாக உயர்வதுண்டோ என மடல் வரைந்தவனைக் காணவில்லை, யாரும் இங்கில்லை. இருப்பவர்கள் எல்லோரும் வேறெவெரோவாக... தேவனைக் கண்டேன்: ஆனால் அவன் தேவனில்லை. அருளைக் கண்டேன்: ஆனால் அவன் அருளில்லை. ஓடிப்போனவர்கள் எல்லோரும் ஓடிப்போனவர்களாகவே... தனிமையின் அதீதம் ஒருகணம் எனைச் சிதறடித்தது. கைவிடப்பட்டுக் கிடந்த வயிரவர் கோவில் மணிக் கயிற்றை மானசீகமாக உந்தி இழுத்து ஒரு கணம் பித்தளையை அதிர வைத்தேன். வேருடன் பிடுங்கி எறியப்பட்டு வெறுமையை விரவி நின்ற வேப்பமரத்தின் நினைவுகள் மட்டும் தான் அவர்களும், அவைகளும் இங்கும், இப்போதும் நிற்பதற்கான ஆத்மீகச் சாட்சியங்கள். பற்றைகளுடாக நடந்தபோது பாதங்களில் குத்திய நெருஞ்சி முட்கள்தான் நெஞ்சில் குத்திய இறந்தகாலத்தின் சுவடுகள்.

ஓ காலமே! ஓ இடமே !

பற்றைகளாய்ப் படர்ந்த பசுமைகளுக்குள் சிலவேளைகளில் கைவிடப்பட்ட , சிதைந்த நிலையில் வீடுகள் மண்டிக்கிடந்தன. கலகலவென வாழ்க்கைத் துண்டங்களைச் சுமந்த வீடுகள், கதைகதையாய்க் கேட்டுவைத்த சுவர்கள், தம் நிசப்தத்தில் ஓவென அலறின. வரண்ட குளத்தை விட்டுக் கொக்குகள் ஓடிப்போனபின் பொருக்கு வெடித்துக் கிடக்கும் நிலமாய் ஒரு கிராமமே உருவகம் கொண்டிருந்தது. யாழ் நகரில், கொட்டாஞ்சேனையில், எங்கோவொரு ஐரோப்பிய நகரில் எனவெல்லாம் சிதறிப்போய்விட்ட மண்ணின் குழந்தைகள் கைவிட்டுப் போன கானல் நீராகப் பல வீடுகள் கண்ணீர் விட்டன. சில இடங்களில் வீடுகள் இருந்ததற்கான சாட்சியங்களாக எதுமேயிருக்கவில்லை. சில இடங்களில் சரிந்து வீழ்ந்த சுவரிருந்தது. இன்னும் சில இடங்களில் சில கற்கள் கிடந்தன. முகவாயில் நிலைமட்டும் தன் தனிமைக்குள் வீடின்றி நின்ற காட்சிகள் வேதனையின் மூலங்களாயிருந்தன. வேறு சில இடங்களில் இறுகிய



படிப்பகம்

www.padippakam.com



அமைதியைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை.

வயல் வெளிகளில், மனிதர்கள் நடமாடத் தடைவிதிக்கப்பட்டிருந்த கட்டாந்தரைகளிலெல்லாம் கேட்பாரற்ற, பார்ப்பாரற்ற மாடுகள் சுயாதீன வாழ்க்கை வாழ்ந்தன.

அறியா முகங்கள் பல வீதிகளில் அசைந்து திரிந்தன. மறந்துபோன மரங்கள், செடிகொடிகளின் பெயரை மற்றவர்களிடம் விசாரித்து ஞாபகப்படுத்திக் கொண்டேன். கடதாசிப்பூவும், செவ்வரத்தைப் பூவும் யாருக்காகவும் காத்திராமல் தம் கடமையை நிறைவேற்றின. வரண்ட நிலத்திலும் வனப்பாய் பூத்திருக்கும் எருக்கம் பூவுடன் நெருக்கமாய்ச் சில கணங்களைக் கழித்தேன். அறுகம் புற்களை ஆசுவாசமாய் சுகம் விசாரித்தேன். எப்போதுமே பெயரறிந்திராத பூண்டுகளிடம் பெயர் வினாவிப் பார்த்தேன். கொழுத்தும் மதிய வேளைக் கொடுவெய்யிலில் வெளிச்சென்று சனசந்தடியற்ற மரநிழல்களில் அமர்ந்து காற்று வாங்கியவாறே கையில் கொண்டு சென்ற பல்ஸாக்கின் 'பள்ளத்தாக்கு லில்லி மலர்கள்' ஐ வாசிக்க முனைந்தேன். விமானத்தில் பறந்து வந்தபோது சுவைமிகுந்ததாயிருந்த கியாதி பெற்ற பிரஞ்சு இலக்கியம் மரநிழல்களின் கீழ் மணமிழந்து, சுவையிழந்தன.

பிரமாண்டமான சமுத்திரங்களாக முன்னர் தோன்றிய குளங்களெல்லாம் குட்டைகளாய்த் தோன்றின. புளியங்கூடல், சுருவில், நாரந்தனை, கரம்பொன் எனவெல்லாம் வலம் வந்தபோது நாடு சிறுத்துவிட்டதாய்ப்பட்டது.

**************

இருள்பட்ட நேரங்களில், சுத்தமாகக் கூட்டிவாரப்பட்ட முற்றங்களில், இதமான மாலைப்பொழுதுகளின் போது நான் அயலவர்களுக்குக் கதை சொல்லியானேன். ஐரோப்பிய நகர வாழ்க்கையைப் பற்றியும் நம்மவர்களின் இருப்பு நிலைகளைப் பற்றியும் என் கண்ணோட்டங்களை விபரித்தேன். புகையிலைப் போரணை பிடித்தவர்களிடம் சென்று உரையாடினேன். மிளகாய்த் தோட்டத்தில் தண்ணீர் மாறினேன். வெறுங்காலுடன் கொதிவெய்யிலில் பாத்திக்குப் பாத்தி தண்ணீர் மாறும்போது உள்ள சுகம் சொல்லக்கூடியதா ? மைத்துனர் ஒரவருடன் பள்ளிவாசற் கடற்கரைக்குக் குளிக்கப் போனேன். வெளிநாட்டுக்காரரை ஏற்றி வந்த, குளிரூட்டிய 'டொல்பின்' வான்கள் வரிசையாய் நின்றன. வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் இப்படித்தான் வருவார்கள் எனவும் அறிந்து கொண்டேன்.

'இந்தப் பெடியனைப் பார்த்தால் வெளிநாட்டிலிருந்து வந்ததென்று யாரும் சொல்ல மாட்டினம். கையில ஒரு மோதிரமில்ல, கழுத்தில ஒரு சங்கிலியில்ல. ஒரு ஓட்டைச் சயிக்கிள்ள சுத்தித் திரியிது' என்னும் என் மீதான விமர்சனம் காதில் விழுந்தபோது என்னையுமறியாமல் சிரித்தேன்.

நீங்கள் பெருமைக்குரியவர்கள். இம்மண் உங்களின் சந்ததிக்குரியது. போனவர்கள் இங்கு ஊர்சுற்ற வருவார்கள். அவர்களின் சந்ததிகள், அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஆங்காங்கே அடையாளம் அருகித் தொலைந்துவிடும். நீங்களும் தம்மவர்கள் எனக் கோசம் போட்டு வரும் மனிதர்களின் 'பொழுதுபோக்கு' உதவிக்கரங்களும், 'குற்றஉணர்வுப்' பச்சாதாபங்களும் உங்களுக்குத் தற்காலிக உதவிகளை வழங்கும். ஆனால், அவர்கள்முன்னே என்முன்னே நீங்கள் பெருமைக்குரியவர்கள். நிமிர்ந்து நில்லுங்கள். மெலிந்து, கொடுவெயிலால் கறுத்த உங்கள் உடல்களும், அழுக்கடைந்த உங்கள் ஆடைகளும் கூடப் பெருமையின் சின்னங்களே என அவர்களிடம் உண்மையாகக் கூறிவைத்தேன். திமிருடன் இங்கு வந்து யாரும் திரும்பிப் போகும்போது தெரியாத விடயத்தை சில வருடங்கள் கழித்துத்தான் அவர்கள் புரிந்து கொள்வார்கள் எனவும் கூறி வைத்தேன். போகும்போது வீட்டு நாயையும் தவறவிடாமல் கூட்டிச்சென்றுவிட்டு, இதுதானே என்நாடு என உரிமை கோரிவரும் 'இங்கிருந்தவர்கள்' உங்களுக்குக் கடமைப்பட்டவர்கள். பெருமைக்குரியவர்களே, நிமிர்ந்து நில்லுங்கள். புகைப்படக் கருவிகளையும், வீடியோக்களையும் கொண்டு வந்து வேடிக்கையாய் படம் பிடித்துச் செல்லும் இவர்களை வினோதப் பொருட்களாய்ப் பாருங்கள்.

நானும் அவர்களும் அகதிகள். இருக்கும் உரிமையை இரந்து பெற்றவர்கள். நாங்கள் வெள்ளைக்காரர்களின் தாழ்வாரங்களில் வேடிக்கை வாழ்க்கை வாழ்பவர்கள்.

நாம் அணிந்து வரும் நாகரீக ஆடைகளும், எம் உடல் சுமந்துவரும் தங்க நகைகளும் உங்களுக்கு எமது சிறுமையைத் தவிர வேறெதையும் பிரதிபலிப்பதில்லை என்பதை உணர்ந்து விடுங்கள். பின் உங்கள் தாழ்வு மனோநிலை நீங்கிவிடும். உங்களுக்கு உங்களின் உரிமைக்குரிய பெருமை என்னவென்று புரிந்துவிடும் என அவர்கள் மத்தியில் உரையுறுத்தேன். ஆனந்தம் அவர்களிடத்திலே இழையோடியது.

************************

பதின்மூன்று நாட்கள், பார்த்த வண்ணமிருக்கப் பறந்தோடின. கையிலிருந்த என் அகதி விசாவும், கடமையும் திகதிகளை நினைவில் கொண்டு வந்து நிறுத்தின.

பசியிருந்தவன் அறுசுவையுணவின் முன்னமர்ந்து இரு கவளம் எடுத்துண்கையில் எழுந்துபோக வேண்டியதாகி விட்டதைப் போல், நான் மீண்டும் புறப்பட்டேன். என் பயணம் மீண்டும் தொடங்கிது. நான் படம் பார்க்கப் புறப்பட்டேன். யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலையை நோக்கிச் செல்லும் நெரிசலான பஸ்வண்டியொன்றிற்குள் நானும் என் பொதியுமாக...



படிப்பகம்

www.padippakam.com



## வேலணை மத்திய மகா வித்தியாலயம் பிரான்சுக் கிளையின் 2002 ம் ஆண்டுக்கான வரவு

| நன்கொடை | | சந்தா | |
|---|---|---|---|
| கா. ரவீந்திரபாலன் | 76.22 | நா. மகேந்திரன் | 50.00 |
| செ. இராமலிங்கம் | 152.45 | கே. விசாகன் | 50.00 |
| நா.மகேந்திரன் | 200.00 | க. தவச்செல்வம் | 50.00 |
| அ. ஜெயகுகன் | 200.00 | மு. கேதீஸ்வரன் | 50.00 |
| யா. பாலகிருஷ்ணன் | 500.00 | அ. தேவதாஸ் | 50.00 |
| செ. பாஸ்க்கரன் | 200.00 | ந. கனகரட்ணம் | 50.00 |
| சு. பாஸ்க்கரன் | 300.00 | யா. பத்மநாதன் | 50.00 |
| கு. ஸ்ரீஸ்கந்தராசா | 200.00 | யா. பாலகிருஷ்ணன் | 50.00 |
| சு. கருணாநிதி | 100.00 | செ. ஸ்ரீபாஸ்க்கரன் | 50.00 |
| கு. ராசன் | 100.00 | அ. ஜெயகுகன் | 50.00 |
| கு.விக்னராஜா | 200.00 | ச. கருணாகரன் | 50.00 |
| செ. ஸ்ரீதரன் | 200.00 | ச. பிரபாகரன் | 50.00 |
| கே. சாந்தலிங்கம் | 200.00 | க. பாஸ்க்கரன் | 50.00 |
| த. சந்திரகுமார் | 500.00 | சி. பாலச்சந்திரன் | 50.00 |
| ப. கந்தப்பிள்ளை | 100.00 | செ. தேவன் | 50.00 |
| யா. பத்மநாதன் | 150.00 | மொத்தம் | 750.00 |
| க. சகுந்தலாதேவி | 100.00 | | |
| க. வாசுதேவன் | 500.00 | | |
| சி. பாலச்சந்திரன் | 100.00 | | |
| மொத்தம் | 4078.67 | | |

### விளம்பரம்

| | |
|---|---|
| Magentha Exchange | 100.00 |
| Auto Santia | 50.00 |
| Sri Mahal | 50.00 |
| Krishna Press | 50.00 |
| Ocean Indian | 50.00 |
| Thangamaligai | 50.00 |
| Singapoor Exchange | 100.00 |
| மொத்தம் | 450.00 |

## வேலணை மத்திய மகா வித்தியாலயம் பிரான்சுக் கிளையின் 2002 ம் ஆண்டுக்கான வரவு செலவு விபரம்


| வரவு | | செலவு | |
|---|---|---|---|
| நன்கொடைகள் | 4078.67 | 23.01.2002 இல் பாடசாலைக்கு அனுப்பிய தொகை | 3078.00 |
| விளம்பரவருகை | 450.00 | மண்டப வாடகை | 609.80 |
| சந்தா நிதி | 750.00 | வித்தியாலய மலர் | |
| மொத்த வரவு | 5278.67 | போட்டோக் கொப்பி . | 285.00 |
| 2001 இறுதியில் கையிருப்பு | 2663.74 | அன்பளிப்புப் பொருட்கள் | 78.00 |
| மொத்தம் | 7942.41 | மொத்தச் செலவு | 4050.80 |
| | | கையிருப்பு | 3871.61 |
| | | மொத்தம் | 7942.41 |




படிப்பகம்

www.padippakam.com





இன்றைய அதிபர்
பொ. அருணகிரிநாதன்



வங்களாவடியிலிருந்து ஊர்பாவற்துறை நோக்கிச் செல்லும் பிரதான வீதி, இதுதான்.



படிப்பகம்

www.padippakam.com



## சுய அடையாளம் அற்றவன் யார்?

தன்னைப் பற்றிய வரலாறு தெரியாதவன் சுய அடையாளம் அற்றவன். சுய கல்வி அற்றவன், சுயமாக எதையும் தெரிந்து கொள்ளும் ஆற்றல் அற்றவன். மனிதன் (சுய) பற்றி வரலாற்றையும், இயற்கை பற்றிய வரலாற்றையும் தெரிந்து கொள்ளதவன் சுய அடையாளம் அற்றவன். இவர்கள் மேற்கு நாடுகளில் வளர்க்கும் மந்தைக்கு கீழானவனாக இருக்கின்றான். சமூகத்தை, நாம் வாழும் எதார்த்த வாழ்க்கையை, ஏன், எப்படி, எதற்காக இவைகள் நிகழ்கின்றன என்று கேட்க முடியாத ஒருவன், சுய புலன்கள் உள்ள மனிதனாக இருப்பதில்லை. நாம் வாழும் சமூகத்தை புரிந்து கொள்வது அவசியமானது, அடிப்படையானது. இல்லாத போது உனது புரிதல் என்பது மந்தைக்குரிய ஒழுக்கத்தைக் கடந்தது அல்ல. மந்தைத்தனம் என்பது சிலர் பலர் மேல் சவாரி செய்வதை நிபந்தனையாக்கின்றது.

நீ எப்படி வாழ்கின்றாய்? எப்படி உன்னை நீ தீர்மானிக்கின்றாய்? இது பற்றி எப்போதாவது நீ சிந்தித்து பார்த்தாயா? உன்னால் இதை விளக்க முடியுமா? நீ மற்றொரு மனிதனுக்கு ஒரு அடிமை என்பது உனக்கு தெரியுமா? இல்லை எனின் இது பொய் என நிறுவ முடியுமா? உனது அறிவின் எல்லை என்ன?

உனது சமூக அறிவை எங்கே இருந்து எப்படி, எப்போது பெற்றாய்? என்னத்தை பெற்றாய்? காலகாலம் நீ நம்புவது எல்லாம் உண்மையாக இருந்து வருகின்றதா? ஏன் இவை மாறிச் செல்லுகின்றன? நம்பிக்கைகள் ஏன் தகர்ந்து போகின்றன? இது போன்ற உணர்வுகள் உணர்ச்சிகள் எப்படி உன்மேல் உருவாகின்றன என்பது உன்னால் விளக்க முடியுமா?

சந்தோசம் எப்படி உருவாகின்றது? துன்பம் எப்படி உருவாகின்றது.? காதல் எப்படி உருவாகின்றது? அவமானம் எப்படி உருவாகின்றது? வெற்றி தோல்விகள் எப்படி உருவாகின்றது? விருப்பு வெறுப்பு எப்படி உருவாகின்றது? உனது நேசம் எப்படி உருவாகின்றது? உனது தனிமனித விருப்பு வெறுப்புகள் எப்படி உருவாகின்றது? சமூகம் பற்றிய விருப்பு வெறுப்புகள் எப்படி உருவாகின்றது. இது போன்றவற்றுக்கு உன்னிடம் பூரணமான விடை உண்டா? இதை ஏன் நீ தெரிந்து கொள்ளவில்லை? தெரிந்த கொள்ள என்ன தடை உனக்கு உண்டு? எப்போதாவது நீ சிந்தித்தது உண்டா? நீ உன்னைப் பற்றி (என்னைப் பற்றி) சிந்தித்தது உண்டா?

மனிதனின் வேறுபட்ட நிறங்கள் ஏன் உருவானது? வேறுபட்ட மதங்கள் ஏன் உருவானது? வேறுபட்ட இனங்கள் ஏன் உருவானது? வேறுபட்ட சாதிகள் ஏன் உருவானது? இயற்கையான பூமிக்கு யார் வேலியிட்டது? ஏன் வேலியிட்டனர்? இது உன்னுடையது இது என்னுடையது என்று யார் சொல்லித் தந்தனர்.? இவை போன்றவற்றை நீ எப்படி உருவானது என்பதை தெரிந்து கொள்ள உனக்கு என்ன தடையிருந்தது? அதைக் கடக்க நீ முயன்றாயா?

மனிதனில் ஆண் பெண் இடையில் ஏன் அடிமைத்தனம் உருவானது? ஒரு மனிதன் மற்றொரு மனிதனை அடக்கியாளுதல் எப்படி உருவானது? ஏன் உருவானது? ஒருவன் வசதியானவனாகவும் மற்றொருவன் வசதியற்றவனாகவும் மாறியது ஏன்? பணக்காரன் ஏழை எப்படி உருவானான்? உயர் சாதி தாழ்ந்த சாதி எப்படி உருவானது? உன்னால் விளக்க முடியுமா? இவை எல்லாம் ஏன் எப்படி இந்த சமுதாயத்தில் நிகழ்கின்றன? வசதியுள்ளவன் காலடியில் வசதியற்றவன் நக்கி வாழும் மனித வாழ்க்கை இயற்கையானதா? எவன் எப்படியும் விதவிதமாக இதை நியாப்படுத்துவதை நாம் சகிக்கும் மந்தைக் கூட்டமா நாங்கள்?

நீ உனது உழைப்பை சுதந்திரமாக எங்கும் எப்படியும் பயன்படுத்த முடிகிறதா? நீ விரும்பியவாறு உழைப்பை பயன்படுத்துகின்றயா? அல்லது ஒரு இயந்திர வாழ்வில் ஒரு அங்கமாக இது போய்விட்டதா? நீ இயந்திரத்தின் ஒரு அடிமை அல்லவா! நீ நுகரும் பொருட்கள் உனது விருப்பத்துக்கு உட்பட்டதா? அல்லது சந்தை உன் மேல் அதை திணிக்கின்றதா? பொருளின் அடிமையல்லவா நீ? கவர்ச்சியில் நீ கவரப்பட்டும் சிந்தனை ஆற்றலை இழந்த ஆப்பிளுத்த குரங்கா நீ! இது போன்ற கேள்விகளை நீ உன்னையே கேட்டது உண்டா?

மனித வாழ்வின் உண்மைகள் கவர்ச்சியாக இருப்பதில்லை. அவை வேதனை நிறைந்தாக துன்பம் நிறைந்தாக உள்ளது. நீ புரிந்து கொண்ட உலகம் அழகனதாக, கவாச்சிகரமானதாக, போதை ஊட்டக் கூடியதாக காட்டி மந்தைக் குணத்தில் சொக்கி நிக்கின்றாய். ஆனால் மனிதன் நாள் தோறும் அழுகின்றான். நாள் தோறும் வதைக்கப்படுகின்றான். நாள் தோறும் உயிருடன் கொல்லப்படுகின்றான். அழகான வாழ்வை தரும் இயற்கை கற்பழிக்கப்படுகின்றது. இல்லை என்று அடித்துச் சொல்லும் துணிவு இருந்தால், கீழ் உள்ள வாழ்வின் உண்மைகளை மறுத்து நிறுவுங்கள் பார்க்கலாம்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு தனது அறிக்கை ஒன்றில் வேலையில் ஏற்படும் விபத்தினால் அல்லது அதனால் ஏற்படும் நோயினால் வருடம் 20 லட்சம் பேர் இறப்பதாக அறிவித்துள்ளனர். இந்த இறப்பு வேகமாக அதிகரித்து வருகின்றது. 1990 இல் வேலையின் போதான விபத்து மரணம் 12 லட்சமாக இருந்தது. இந்த இறப்பில் மேற்கு நாடுகளில் அதாவது தொழில் வள நாடுகளில் 15 சதவீதமாகவுள்ளது. ஒவ்வொரு வேலை விபத்து மரணத்துக்கும் 2000 பேர் காயமடைகின்றனர். அதாவது வருடந்தம் வேலையினால் எற்படும் காயங்கள் அல்லது செயலாற்ற முடியாத நிலை என மொத்தமாக 400 கோடி நிகழ்ச்சிகள் வருடாந்தம் நிகழ்கின்றது. இன்று வரும் கன்சர் நோயில் இறப்போரில் 60 சதவீதம் வேலை காரணமாக ஏற்படுகின்றது. இதன் காரணமாக வருடம் ஒரு லட்சம் பேர் இறக்கின்றனர். இவை எதற்காக நிகழ்கின்றன? முதலாளியின் சொத்துப் பெருகி வசதிவாய்ப்பு பெருகும் போது, மனித உடல்கள் அவனின் காலுக்கு கீழ் விரிக்கப்படும் செங் கம்பளமாகின்றன. இல்லை என்று சொல்ல யாருக்கும் துணிவு உண்டா?



படிப்பகம்

www.padippakam.com



பண்டைய கால மனிதன் தனது உணவில் 1500 விதமான காட்டுத் தவாரங்களை பயன்படுத்தினான். பண்டைய நாகரீகங்களில் 500 மேற்பட்ட காய் வகைகளை பயன்படுத்தினான். இன்று 30 வகையான தாவர உணவில் இருந்தே உணவுச் சத்து கிடைக்கின்றது. இதிலும் 75 சதவீதம் மூன்ற வகையான உணவில் கிடைக்கின்றது. அதாவது சோளம், அரிசி, கோதுமை சார்ந்து இருக்கின்றது. காய் கறிகளில் 20 வகை சாந்து போய்யுள்ளது. இது ஏன் எப்படி அழிந்தது? என்ன நடந்தது? உனது தேர்வின் சுதந்திரம் எங்கே எப்படி அழிந்தது? யார் அழித்து? உனது அறிவு, உனது ருசி, உனது ரசனை என எல்லாம் எப்படி அழிந்து போனது? நீ மந்தையாகிய வரலாறு எப்படி யாரால் நிகழ்ந்தது? நீ மந்தையாக இருப்பது உனக்கே தெரியமால் போனது எப்படி?

இலங்கையில் வேரில் விளையும் 40 காய்கறி வகைகளும், இலை காய்கறி வகையில் 28 இனங்களும் உள்ளன. இது உனக்கு தெரியுமா? இது இலங்கையில் இயக்கை சார்ந்த சிறப்பு! ஆனால் இதை நாம் எப்போதாவது புரிந்து பாதுகாத்தோமா? இது அழிக்கப்படுவதை நாம் தடுத்தோமா? ஏன் இந்த உணவு வகையை எமது அறிவு இழந்துள்ளது உனக்கு தெரியுமா? நாம் எங்கே எதை அடையும் போட்டியில் எமது இயற்கையை, எமது வாழ்வை இழந்தோம்!

இந்தியாவில் சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது 100 வருடத்துக்கு முன் 30 ஆயிரம் வகையான அரிசி வகை இருந்தன. ஆனால் இன்று எஞ்சி இருப்பது 15 இனங்கள் மட்டுமேயாகும் லெபனானிலும், சவுதி அராபியாவிலும் இருந்த பார்லி இனங்களில் 70 சதவீதமானவை அழிந்து விட்டது. கோதுமையை எடுத்தால் 1 10 000 வகைகள் இருந்தன. 12500 காட்டுக் கோதுமை இருந்தன. இது உனக்கு தெரியுமா? யார் அழிக்கின்றான்? ஏன் அழிக்கின்றான்? இது உனக்கு தெரியாமல் போனது என்? 30 ஆயிரம் வகையான அரிசி உணவின் ருசியை இழந்து, இரண்டு மூன்று அரிசியில் உனது ரசனை வீம்பும் என்பது வெக்கக் கேடானது! மனக்கேடான வாதங்களால் மக்களை மந்தையாக்கதே! கடந்த எமது முந்தையர் வாழ்வில் தேடு உனது அறிவை. அங்கே இருக்கிறது எமது செல்வம்? அங்கே இருக்கிறது மனித அறிவியல்! இன்றைய அறிவு எமது முந்தையர் அறிவை அழிக்கின்றது? இங்கு படைப்பது மந்தைக்குரிய பொருட்களையே ஒழிய, மனிதனின்பரந்த வாழ்வுக்கும் அது சாாந்த சமூக அறிவுக்குரிய பொருட்களை அல்ல? லாபத்துக்காக உன் மேல் கட்டிவிடப்படும் கழிவுகளே! இதற்கு நவீன தேவை பற்றியும், வாழ்வின் இலகுவான பொருட்கள் பற்றியும் ஒரு போதனை புகட்டி விட மந்தையாக நின்று கத்துவது எஞ்சிக்கிடக்கின்றது. நவீன அறிவியல் எல்லாம் மனித வாழ்வை முன்னேற்றுவதற்கே ஒழிய, மனிதனை அடிமைப்படுத்துவதற்கு அல்ல!

மூன்று கோடிக்கு மேற்பட்ட உயிரினங்கள் பூமியில் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மழைக்காடுகள் ஒரு நிமிடத்துக்கு 100 ஏக்கா வீதம் இன்று அழிக்கப்படுகின்றது. இதனால் 25 வகையான பூச்சி இனங்கள் மட்டும் ஒரு நாளைக்கு பூமியில் இருந்தே அழிந்து போகின்றன. இன்று நாம் பாவிக்கும் மருந்துகளின் 25 வீதமானவை மழைக்காடுகளின் மூலிகையில் இருந்து உற்பத்தியாகின்றன. ஒவ்வொரு வகைத் தாவர இனமும் அழியும் போது அது சார்ந்து வாழும் 10 முதல் 30 வகையான உயிரினங்களும் அழிந்து விடுகின்றது. இயற்கை அழிக்கப்படுகின்றது. ஏன்? காடுகள் சூறையாடப்படுகின்றது என்? இயற்கை கற்பழிப்பவன் எதை பெறுகின்றான்? அவனின் நோக்கம் என்ன? காடுகள் அழிக்கப்பட்டு எங்கே அவை செல்லுகின்றன. தெரிந்து கொள் அவை எங்கே, யாருக்கு, எதற்காக செல்லுகின்றன என்பதை! ஒரு இனம் அழிகின்ற போது, அதைச் சார்ந்து வாமும் உயிர்கள் அழிந்து விடுகின்றனவே? யார் குற்றவாளி? இந்த உயிரினங்கள், மனிதனுக்கு நன்மை அளிக்கக் கூடிய பல கூறுகளைக் கொண்டவையாக இருந்த போதும், இதுவரை யாரும் அவைபற்றி தெரிந்த கொள்ளவில்லை என்பது தெரியுமா உனக்கு? ஒரு சதவீதமான உயிரினத்தைக் கூட மனிதன் பூரணமாக தனது இன்றைய நவீன அறிவால் அறிந்து கொள்ள முடியாத நிலை, இயற்கை அழிப்பு எதைத்தான் எமக்கு விட்டுச் செல்லப் போகின்றது?

1994 இல் வெளியான அறிக்கை ஒன்றின் படி தொடர்ந்த 20, 30 வருடத்தில் 2.5 லட்சம் உயிரினங்கள் மண்ணில் இருந்த காணமல் போய்விடும் நிலமையை அறிவித்திருந்தது. 350 பறவையினங்கள், 200 வகையான பாலுட்டிகள், 25 ஆயிரம் தவரங்கள் உடனடியாக அழிந்து போகும் நிலையில் இருந்தது. யாரால்? எதற்காக? இவை அழிக்கப்படுகின்றது. மனித சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்காவுமா? இதனால் என்னத்தை நீ அடைந்த விடுகிறாய்? அழிப்பது தான் சுதந்திரமா? இது தான் ஜனநாயகமா? இது தான் உனது நியாவாதம் சார்ந்த வீம்பா!

உலகெங்கும் 4 லட்சம் ச.கி.மீ பரந்து காணப்படும் ஏரிகள் சார்ந்து வாழும் 5 லட்சம் உயிரினங்கள் வாழ்விடத்தை இழந்து அழிகின்றன. இதனுடன் காடுகள் சூறையாடும் போது உயிரணத் தொகுதியை மூலதனம் முழுங்கி ஏப்பமிடுவது தான் சுதந்தரமான ஜனநாயகமா? இது உனது லட்சியக் கனவா? இல்லை என்றால்!

பூமியின் வரலாற்றை ஒரு மாதமாக எடுப்பின் தற்போதுள்ள மனிதன் தோன்றி ஒரு நிமிடம் தான் கடந்துள்ளது. இந்த மனிதன் நிலையாக வாழத் தொடங்கி 7 செக்கன் தான் கடந்துள்ளது. மொத்த மனித வரலாற்றில் 99 சதவீத காலம் வேட்டையாடியும் மீன்பிடித்தே காலத்தை கடந்துள்ளான். மிகுதி உள்ள 1 சதவீத ஆயுள் தான் இன்றை நவீன சமுதாயத்துக்கு உட்பட்ட சுரண்டல் சமுதயாமாகும். 7 சென்னளுக்கு முன் நிலையாக தரிக்கத் தொடங்கிய வரலாற்றில் அழிப்பும், அதை நியாப்படுத்துவதும் தொடங்கிவிடுகின்றது. இவன் தான் பூமியை சூறையாடுகின்றான். அழிக்கின்றான்? இயற்கை மீதான அவனின் அறிவு உலகை எப்படி அழிப்பது என்பதே! எப்படி இயற்கையை பாதுகாப்பது என்பது அல்ல! அவன் தன்னைத் தானே அழிக்கின்றான்! தன்னைத் தானே அடிமைப்படுத்துகின்றான்! இது எப்படி நிகழ்ந்தது? இதில் ஒவ்வொரு மனிதனும் பங்காற்றுகின்றான். இதை மாற்ற உனது பங்களிப்பு அவசியமா? இல்லையா?

உலகத்தையே ஆளுகின்றவர்கள், உலகத்துக்கு



படிப்பகம்

www.padippakam.com



ஒழுக்கத்தை போதிப்பவர்கள், உலகத்தின் செல்வங்களை நுகர்பவர்கள், உலகத்தின் மேல் துாப்பாக்கியை நீட்டி வைத்திருப்பவர்கள் அனைவரும் கொள்ளைக்காரர்களே. இது உனக்கு தெரியுமா? ஒரு சின்ன நம்ப முடியாத ஆச்சரியமான உதாரணம். காலனிகளை உருவாக்கி உலகை சூறையாடிய போதும், மற்றயை நாடுகளில் புகுந்து தாவரங்களைக் கூட கொள்ளையிட்டனர். உன்னால் நம்ப முடியவில்லையா? பிரிட்டன் உலகையே அடிமைப்படுத்தி தனது நாட்டுக்கு கடத்தி வந்த தாவரங்கள் எண்ணிக்கை

| | |
|---|---|
| 16 ஆம் நூற்றாண்டு | 84 |
| 17 ஆம் நூற்றாண்டு | 940 |
| 18 ஆம் நூற்றாண்டு | 8939 |

இவற்றை ஏன் கடத்தி வந்தனர்? உனக்கு தெரியுமா? தெரியாவிட்டால் தெரிந்து கொள்வது உனது கடமையல்லவா!

அமெரிக்காவில் 1947ம் ஆண்டு உற்பத்தி செய்த தானியங்களின் அளவைப் பெற இன்று 5 மடங்கு செயற்கை உரங்கள் தேவைப்படுகின்றது. மண்ணை, மண்வளத்தை கற்பழித்தவர்கள் சேர்க்கையாக மண்ணுக்கே பூச்சு பூசுகின்றனர். மண்ணை மண்வளத்தை கொள்ளையிட்டவர்கள் யார்? சேர்க்கை உரங்கள் என்பவை என்ன? அவை எல்லாம் இரண்டாம் உலக யுத்தத்தில் மக்கள் மேல் போட்ட குண்டுகளுக்குரிய வெடி பொருட்களே. அன்று குண்டுக்காக செய்த வெடிப்பொருள் முதாலளிகள் நட்டமடையாகக் கூடாது என்பதால், அதை மண்ணில் கொட்டி மண்ணையே வெடிக்க வைத்தனர். சேர்க்கை உரமற்ற விவாசாயம் இந்த மண்ணில் இருக்கவில்லையா? 50 வருடங்களுக்கு முன்னைய எமது விவசாயம் என்ன? மறந்துவிட்டதா? உனது தலைமுறையிடம் கொஞ்சம் கேட்டுப் பார்? எல்லாம் புரியும்? உனது மந்தை தனமும் சேர்த்து தான்!

1984 இல் மண் அரிப்பு காரணமாக வருடத்துக்கு 2 கோடி லீட்டர் விவசாய நிலம் நாசமாகியது. வருடாந்தம் 60 லட்சம் லீட்டர் என்ற விகிதத்தில் பாலைவனம் விரிந்து செல்லுகின்றது. 350 கோடி ஹெக்டர் செழிப்பான விவசாய நிலம் பாலவனமாதலால் சேதமடைந்து வருகின்றது. இதில் மூன்றில் ஒரு பகுதி தீவிரமான பாதிப்புக்குள்ளாகியுள்ளது. வெப்ப மண்டலக் காடுகள் அழிப்பு 1980 இல் வருடாந்தம் 1.13 கோடி லீட்டராக இருந்தது. 1990 இல் இது 1.7 கோடி லீட்டராக மாறியது. எதை நோக்கி நாம் முன்னேறுகின்றோம்? எந்த நவீனத்தை நோக்கி? உனது சந்ததிக்காக மாடாய் உழைக்கும் நீ, உனது சந்ததியே இந்த இயற்கையில் வாழமுடியாத மலட்டுத்தனத்தில் அழியப் போகிறதே! அதைப்பற்றி கொஞ்சம் சிந்தித்தாயா? எப்போது?

1979 க்கும் 1986 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஒசோன் படத்தில் சராசரி அளவு 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 1980 இல் அண்டாடிக்காவுக்கு மேலே ஒரு துவாரம் கண்டு அறியப்பட்டது. இது போன்று 1994 இல் ஆர்டிக்கிற்கு மேலே ஒரு துவாரம் எற்படும் சத்தியக் கூறு காணப்பட்டது. 1960க்கும் 1985 க்கும் இடையில் சல்பர் டையாக்ஸைடு வாயுவின் வெளியேற்றம் வருடத்துக்கு 70 லட்சம் தொன்னில் இருந்து 15.5 கோடி தொன்னாக அதிகரித்துள்ளது. இது அமில மழையை பூமியின் மேல் பொழிய வைத்துள்ளது. இதை தடுத்த நிறுத்த யார் தடையாக இருக்கிறார்கள்? தேவையின் அடிப்படையில் உற்பத்தி என்பது மறுக்கப்பட்டுள்ள நிலையில், வர்த்தக நோக்கில் உற்பத்தி இயற்கையின் எல்லாப் பண்பையும் அழிக்கின்றது அல்லவா! யார் லாபம் அடைகின்றான் எனின், இதை உற்பத்தி செய்பவன் தான் அல்வா! ஆனால் பாதிப்பு எல்லா மனிதனுக்கு மட்டுமல்ல, இயற்கை சார்ந்த அனைத்துமே பாதிக்ப்படுகின்றது அல்லவா! இது உனக்கு தெரியுமா?

1990 இல் ஐ.நா சுற்றுச்சூழல் கூட்ட தொடரில் 30 முதல் 40 கோடி தொன் கழிவு உலகில் உருவகுவதாக அறிவித்து. இதில் 98 சதவீதம் 24 முன்னேறிய நாடுகளினால் உருவாக்கப்படுகின்றது என அறிவித்தது. எதற்காக கழிவை உற்பத்தி செய்கிறார்கள்? அதை எங்கே கொட்டுகிறார்கள்? உதவித் திட்டத்தின் கீழ் மூன்றாம் உலகுக்கு வருவதில் கணிசமானவை நச்சுக் கழிவை கலந்து, ஏமாற்றியும் அனுப்புவது உனக்கு தெரியுமா?

உணவு, சுத்தமான நீர், சுத்தமான காற்று, மருத்துவம் இன்றி அண்ணளவாக வருடந்துக்கு 19 கோடி மக்களின் உயிரை நேரடியாகவே பலியிடுவதன் மூலம் படுகொலை செய்யப்படுகின்றனர். இது அனைத்து மக்களுக்கு கிடைப்பதை யார் தடுக்கின்றார்கள்? இந்த படுகொலைகளுக்கு யார் பொறுப்பு? யார் குற்றவாளி? இதை எந்த சாவதேச நீதி மன்றம் விசாரிக்கும்? 19 கோடி மக்களின் உயிரையே வருடாந்தம் அடித்தளமாக கொண்டு எழுந்து நிற்கும் இந்த அமைப்பு உன்னதமானதா? உனது நம்பிக்கைகள் எல்லாம் சரியானதா? உனது தெரிவுகள் சரியானவையா? 19 கோடி மக்கள் கொல்லப்படும் போது நீயும் அதற்கு எதோ ஒரு விதத்தில் உதவுவதை உணரவில்லையா? இதை தடுக்க என்ன செய்யப் போகிறாய்?

வருடம் 1.8 கோடி மக்கள் வறுமை சம்பந்தப்பட்ட ஒரு காரணத்தால் கொல்லப்படுகின்றனர். இதற்கு காரணம் என்ன? விதியா! வருடம், வறுமை இல்லாத ஒரு நிலையில் 1.8 கோடி மக்கள் இந்த மண்ணில் உயிருடன் வாழ்வர்கள் அல்லவா!. அவர்கள் வருடா வருடம் வறுமையினால் கொல்லப்படும் நிலையில், யார் குற்றவாளி? இதில் எனது பங்கு என்ன? உனது பங்கு என்ன? உனது மௌனத்தின் சம்மதம் உனது பெருந்தன்மையா? வாயைத் திற, மந்தைத் தனத்தை திரும்பி பார் அப்போது புரியும் உனது கடந்தகால முட்டாள் தனத்தையும் உனது அறியாமையும் உனக்கே புரியவைக்கும்.

இன்று பூமியில் இறைச்சிக்காக கொடுக்கும் உணவு 1500 கோடி மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யப் போதுமானது. அப்படியாயின் வறுமை என்பது கற்பனை அல்லவா! இறைச்சி ஏன் தேவைப்படுகின்றது? யாருக்கு தேவைப்படுகின்றது? இறைச்சியை எத்தனை வீதமானவர்கள் அன்றாட வாழ்வில் உணவில் பயன்படுத்துகின்றனர்? 1500 கோடி மக்களின் உணவை உபயோகித்து மந்தைகளை உருவாக்குபவன், மனிதனையே மந்தையாக்கியுள்ளான்! இந்த மந்தைத் தனத்தைப் பேணவே, வறுமைக்கு காரணங்களை சோடிக்கின்றான். உண்மை நிர்வாணமாகும் போது, பொய் பித்தலாட்டங்கள் தலைவிரிகோலமாகிவிடுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



2001ம் ஆண்டு உலகில் 10 லட்சம் டொலருக்கு அதிகமான 71 லட்சம் பேர் கொண்ட மிகப் பெரிய சொத்துடைய ஒரு வர்க்கம் உருவாகியிருந்தது. இது 2000ம் ஆண்டில் 69 லட்சமாக இருந்தது. இந்த சொத்துடைய வர்க்கத்தின் மொத்த சொத்தின் பெறுமதி 26 20 000 கோடி டொலராகும். சொத்துடை வர்க்கம் தொடர்ந்து கொழுக்கின்றது. இதில் தென் அமெரிக்காவில் அதிகமாக அதாவது 8 சதவீத்தால் சொத்துடை வர்க்கம் கொழுத்துள்ளது. மூலதனம் சுதந்திரமானது. அது தன்னைத் தான் விரிவாக்கும் ஜனநாயகத்தை ஆதாரமாக கொண்டது. மூலதனம் சில நாட்டில் சிலரிடம் குவிகின்ற போது, உலக மக்கள் இழப்பு நிபந்தனையானது அல்லவா! உலகில் அடிநிலையில் உள்ள 45 சதவீதமான மக்களின் வருமானத்துக்கு சமமாக உலகில் அதிகூடிய வருமானத்தை உடைய 258 இரத்தை உறுஞ்சிக் கொழுக்கும் அட்டைகள் பெறுகின்றனர். இது தான் இந்த உலகின் ஜனநாயகம், சுதந்திரத்தின் வரைவு? எழைகள் பெருக்க, வசதியானவன் கொழுக்கின்றான். எதுவரை உனது அற்ப சொத்தையும் கொள்ளையடிக்கும் வரை தான். அதற்கு பின்னால் மந்தையில் நீயும் நானும் விடப்படும் இடத்தில் நின்று, ஏஜாமானுக்காக எமையே சுய தியாகம் செய்வது தான் இந்த ஜனநாயத்தின் உயர்ந்த வடிவமாகிவிடும்.

ஜனநயகமான சுதந்திரமான சமத்துவமான உலகில் அண்ணளவாக ஒவ்வொரு நாலு செக்கனுக்கும் ஒரு மனிதன் உணவு இன்றி கொல்லப்படுகின்றான். அதாவது நாள் ஒன்றுக்கு 24000 பேர் பட்டினியில் இறக்கின்றனர். உலகமயமாதல் ஒவ்வொரு வருடமும் 88 லட்சம் மக்களை வெறுமனே பட்டினி போட்டே பலியெடுக்கின்றது. இந்த பலியிடும் ஜனநாயக உரிமையில் சராசரி கலோரித் தேவையை ஒரு அமெரிக்கன் ஒரு ஆபிரிக்கனைவிட 78 சதவீதம் அதிகமாக பெறுவதன் மூலம் நுகர்கின்றான். அப்படியாயின் வறுமைக்கு காரணம் என்ன? ஆபிரிக்காவில் 30 நாடுகள் உள்ளடங்க மொத்த 50 நாடுகளில் 75 வீதமான மக்கள் வறுமையில் பட்டினியில் வாழ்வதையே உலக ஜனநாயகமாக வருணிக்கின்றனர் உலக காவலர்கள். உலகில் உள்ள பணக்கார நாடுகள் உணவு உற்பத்தியை பேண 35 000 கோடி டொலரை விவசாயிகளுக்கு மனியம் வழுங்குகின்றது. வளரும் நாடுகள் வெறும் 800 கோடி டொலரையே மானியமாக வழுங்குகின்றது. இந்த 800 கோடி டொலரையும் நிறுத்தக் கோரி உலமயமாதல் வங்கிகள் நிர்பந்திக்கின்றன. பட்டினி வாழ்வை ஒரு நிரந்த கொடையாக ஜனநாயகம் வளரும் நாடுகள் மீது திணிக்கின்றன. 35000 கோடி டொலர் மானியத்தில் ஏற்றமதியாகும் உணவை சார்ந்து எழை நாடுகள் சுதந்திரமாக கையேந்தி பிழைக்க கோருவதே உலகமயமாதலின் உள்ளடக்கமாகும். இது உனக்கு உனது சந்ததிக்கும் புரியவில்லையா?

இயற்கையில் இருந்த நீரை செயற்கையாக அளிக்கும் உரிமையே சுதந்திர, ஜனநாயகம் என்றுபீற்ற முடியுமா? நீ நம்பும் ஜனநாயகம் அப்படித்தான் விளக்கி அழிக்கின்றது. இதை நீ புரிந்து கொள்ளதா வரை உன் உதவியின்றி இது நடக்கவில்லை. குடிக்கும் நீருக்கு பணம் கொடுத்து வாங்கும் மனித அவலம் எப்படி உருவானது? எல்லா பண்ணகார நாடுகளிலும் குடிக்கும் தண்ணீருக்கு பணம் அறவிடப்படுகின்றது. எல்லா வளரும் நாடுகளில் நகர்புறங்களிலும் தண்ணீருக்கு பணம் அறவிடப்படுகின்றது. இதைவிட சந்தையில் போத்தல் தண்ணீர் வந்துவிட்டது. குடிக்கும் தண்ணிர் பணம் கொடுத்த வாங்கி குடிக்கும் அவலத்தை 100 வருடங்களுக்கு முன் யாரும் நம்பியிருப்பார்களா? இயற்கை வளத்தில் நீர் அழிகப்படுகின்றது. உலகில் 150 கோடி மக்கள் குடிக்க தண்ணீர் அற்ற உலகமயமாதலில் வாழ்கின்றனர். இந்த உன்னாதமான அமைப்பில் யார் குற்றவாளி. இயற்கையா? இல்லை. மூலதனமா? காடுகள் வரைமுறையற்ற வகையில் அழிகப்படுகின்றது. நீரை மூலதனம் உறுஞ்சுகின்றது. பூமியில் உயிரினம் தோன்றியது முதல் நீரின் இயற்கை இருப்பு சிதைந்தது கிடையாது. கடந்து 100 வருடத்தில் நீர் காணமல் போவது ஏன். மக்கள் தண்ணீரை குடிப்பதால் அல்ல. 2025ம் ஆண்டில் உலகில் 500 கோடி மக்களுக்கு தண்ணீர் குடிக்க கிடைக்காது என்றுஇந்த மூலதன அமைப்பே எச்சரிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் 6600 கன மீற்றர் நீரை பெறுகின்றான். ஆனால் 2025 இல் 4800 கன மீற்றர் நீர்தான் கிடைக்கும் உலகமயமாதலின் சூறையாடல் விதி இது. 1950 இல் ஒரு மனிதனுக்கு கிடைத்து 17 000 கன மீற்றராகும். மூலதனம் அழிக்கின்ற, நுகர்கின்ற வேகத்தில் மனிதன் உணவுக்கு மட்டமின்றி, குடிக்க தண்ணீரே இன்றி வாழும் அவலம் உலகமயமாதலின் கொடையாக உங்கள் முன் படைக்கின்றனர். இது நீ சுவாசிக்கும் காற்றுக்கு நிகழ்ப் போகின்றது? சுத்தமான காற்றை சுவாசிக்க பணம் கொடுத்து வாழும் நாள் அதிகமில்லை! இதை தான் ஜனநாயகத்தின் பெயரில் சுதந்திரத்தின் பெயரில் நாம் தங்கத் தட்டில் எந்தி மட்டைக்குள் இறக்குகின்றோம். எதற்காக சூடுசுறணையற்ற வகையில் இதைச் செய்கின்றோம். உலகில் நீர் வளமுள்ள 269 ஆறுகள் மற்றும் அருவிகளிள் சார்ந்து வாழும் பூமியில், அனைத்த உயிரிணங்களும் வாழ்கின்றன. ஒவ்வொரு நீர் வளங்கள் சார்ந்த 2 நாடுகள் உயிர்வாழ்கின்றன. இந்த அருவிகளில் நீர் வருவது குறையும் அளவுக்கு இயற்கை வளம் கற்பழிகப்படுகின்றது. ஏன்? ஒரே ஒரு கணம் சிந்தித்து பார்த்தயா!

ஒவ்வொரு செக்கனும் நீர் சார்ந்த நோயால் 9 பேர் கொல்லப்டுகின்றனர். உலகமயமாதல் சுதந்திரமாக குடிக்க சுத்தமான தண்ணிரை வழுங்க மறுக்கும் உன்னதமான ஜனநாயகத்தில், நாள் தோறும் நீர் சார்ந்த நோயால் 30 000 பலியெடுக்கப்படுகின்றனர். 30000 மக்கள் பலியிடப்பட்டு கிடைக்கும் இரத்தமே, நீ சுதந்திரமாக குடிக்கும் கொக்கோகோலா முதல் அனைத்தும். மற்றவன் குடிக்க தண்ணீர் இன்றிய விடாயில் தான் உனது வக்கிரமான குளிர்மை பேணப்படுகின்றது. இதுதான் ஜனநாயகத்தினதும், சுதந்திரத்தினதும் எல்லை.

ஒவ்வொரு மூன்று செக்களுக்கும் ஒரு குழந்தை தனது 5 வயதை அடைய முன்பு உலகமயமாதல் பலியெடுக்கின்றது. அதாவது வருடம் 1.2 கோடி குழந்தைகளை தமது ஐந்து வயதை அடைய முன்பு மூலதனம் தனக்கு இரையாக்கின்றது. உலகமயமாதமல் இதை நிறுத்தப் போவதில்லை. புறநிலையாக நடைமுறை ரீதியாக உலகமயமாதல்



படிப்பகம்

www.padippakam.com



மருத்துவம், உணவு மானியம் போன்றவற்றை நிறுத்தக் கோரி மூன்றாம் உலக நாடுகளின் உள்ள வரவு செலவை திருத்துகின்றது. உன்னதமான உலகமயமாதலை போற்றும் ஒவ்வொரு பன்றியும், குழந்தைகளின் பலியீட்டின் மேல் தான் தனது சுதந்திரத்தை ஜனநாயகத்தை நிலைநிறுத்துகின்றான்.

ஒவ்வொரு செக்கனும் உலகில் இரண்டு மனிதர்களுக்கு மருத்து கொடுக்க மறுத்து உலகமயமாதல் மூலதனம் பலியெடுக்கின்றது. அதாவது வருடம் 5.5 கோடி மக்கள் மருத்துவம் மறுக்கபட்ட ஜனநாயக சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தால் கொல்லப்படுகின்றனர். உலகளவில் மருந்து உற்பத்தியை கட்டுப்படுத்தும் விரல் விட்டு எண்ணக் கூடிய பன்நாட்டு நிறுவனங்களின் ஒரே நோக்கம், மூலதனத்தின் கொள்ளையே. இந்த மூலதனம் வீங்கி வெடிக்க 5.5 கோடி மக்களின் உயிர் காவு கொள்ளப்படுகின்றது. இதை மறுப்பது எதிர்ப்பது பயங்கரவாதமாகும் என்பது உலகமயமாதலின் அடிப்படையான ஜனநாயக கொள்கையாகும்.

ஒவ்வொரு 2 செக்களுக்கும் ஒரு உதைபந்தாட்ட விளையாட்டரங்கு அளவுக்கு காடுகளை அழிப்பது யார்? அதாவது கிழமைக்கு இரண்டு லட்சம் ஹெக்டர் காடுகள் முற்றாக அழிக்கப்படுகின்றது. கடந்த 10 முதல் 20 வருடத்துக்கு முன்னிருந்த காட்டில் எஞ்சியிருப்பது 40 சதவீதக் காடுகள் மட்டுமேயாகும். இன்று உலகில் இருக்கும் 17 லட்சம் ஹெக்டர் காடுகள் உள்ளன. இதில் 3.6 லட்சம் தாவரங்களும், 9.9 லட்சம் முதுகெழுபற்ற உயிரினமும், 50 ஆயிரம் முதுகெழுபுள்ள உயிரினமும் உள்ளன. ஒட்டு மொத்தமான ஒன்று முதல் மூன்று கோடி தாவர மற்றும் விலங்கு வகை உயிரினங்கள் காட்டில் வாழ்கின்றன. இதை மூலதனத்திடம் இருந்து எப்படி பாதுகாப்பது?

இன்று மக்களை அடக்கும் ஆயுதத்துக்காக நிமிடத்துக்கு உலகளவில் 35.9 லட்சம் டொலர் செலவு செய்யப்படுகின்றது. 1985 இல் ஒரு போர் வீரனின் பயிற்சிக்காக செலவு செய்வதை விட 60 மடங்கு குறைவாகவே அறிவியல் அடிப்படையை புரிய வைப்பதற்காக குழந்தைக்கு செலவு செய்யப்படுகின்றது. பசி நோய், குடிநீர் இன்மை, மருத்துவம் இன்மையால் நாள் ஒன்றுக்கு 2880 குழந்தைகள் மூலதனத்தின் லாப வேட்கைக்கு பலியிடப்படுகின்ற ஜனநாயயகமே இன்று உலகமயமாகின்றது. ஒரு ஆக்கிரமிப்பு இராணுவ வீரனுக்கு உலகம் ஆண்டு ஒன்றுக்கு செலவு செய்யும் தொகை 12330 டொலர். ஆனால் பாடாசாலை மாணவனுக்கு 219 டொலரே செலவு செய்யப்படுகின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு யூலியஸ் சீஸர் யுத்தத்தில் ஒரு பகைவனைக் கொல்ல 75 அமெரிக்க சதம் தேவைப்பட்டது. நெப்போலியன் பகைவனைக் கொல்ல 3000 டொலர் செலவு செய்யப்பட்டது. இது முதலாம் உலக யுத்தத்தில் 21000 டொலரும், இரண்டவது உலக யுத்தத்தில் 2 லட்சம் டொலரும் தேவைப்பட்டது. மக்கள் வாழ்வு பிழியப்பட்டு மூலதனத்தின் யுத்தவெறி ஒரு தொழில் துறையான முதலீடாக மாறியிடுகின்றது. 90 ஆயிரம் தொன் நச்சுப் பொருட்களை வியட்நாம் மக்களுக்கு எதிராக வீசிய அமெரிக்கா, 18 லட்சம் எக்கர் நிலத்தை முற்றாக நாசமாக்கினர். வியட்நாம் யுத்தத்தில் ஒவ்வொரு வியட்நாமியனுக்கும் எதிராக 160 கி.கிராம் குண்டை அமெரிக்க போட்டு உலக ஜனநாயகத்தை பாதுகாத்ததாக மார்பு தட்டியது.. வியட்நாமில் ஒவ்வொரு வியட்நாமியனுக்கு எதிராக 3 கிலோ நச்சு பொருட்களை சுதந்திர அமெரிக்கா வீசி நச்சிட்டது. அமெரிக்கா வீசிய குண்டு மற்றும் பீரங்கிகள் துளைத்த துளைகளின் அளவு 1.48 லட்சம் ஹெக்டா நிலத்தின் அளவுக்கு சமமாகும். 700 அணுக் குண்டுக்கு சமமாக 1.4 கோடி தொன் வெடிகுண்டுகளை அமெரிக்கா வியட்நாம் மக்களுக்கு எதிராக பயன்படுத்தியது. வானில் இருந்து வியட்நாமுக்கு எதிராக வீசிய 80 லட்சம் தொன் வெடிகுண்டுகளின் அளவை, இரண்டாம் உலக யுத்தத்தில் வீசிய மொத்த வெடி குண்டுடன் ஒப்பிட்டு ஆராயின் மூன்று மடங்கு அதிகமாகும். உலக அமைதி ஆய்வுக் கழகம் முதலாவது உலக யுத்தத்தில் இறந்தவர்களில் 5 சதவீதமானவர்கள் மட்டுமே மக்கள் என தெரிவித்தது. இதுவே இரண்டாம் உலக யுத்தத்தில் 48 சதவீதமாக மாறியது. இது வியட்நாமில் 90 சதவீதமாக மாறியது. யுத்தம் நவீனத்துவமாக, தொழில் நுட்பம் குறிப்பானதாக மாற, மக்கள் யுத்தத்தில் பலியிடப்படுகின்றனர். இரண்டாம் உலக யுத்தத்தில் போலந்தில் 60 லட்சம் பேர் இறந்தனர். இதில் 11 சதவீதமானவர்கள் மட்டுமே போர்முனையில் இறந்தனர். மிகுதியானவர்கள் பாசிச சட்ட வரையறைக்குள் கொல்லப்பட்டனர். இரண்டாம் உலக யுத்தத்தில் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கும் 220 போலந்து மக்களும், 130 சோவியத் மக்களும், 108 யுக்கோசிலேவியா மக்களும், 15 பிரஞ்சு மக்களும் கொல்லப்பட்டனர். யுத்தம் மக்களுக்கு எதிரானதாக இருந்தது போய் குறிப்பாகவும் மாறிவிட்டது. ஏன் யுத்தங்கள் நடக்கின்றன? யார் இதில் லாபம் பெறுகின்றனர். மக்களுக்கு இறுதியில் கிடைப்பது என்ன? இயற்கை எதை அனுபவிக்கின்றது?

உலகில் 1985 இல் 25000 வானொலி நிலையங்களும், 100 கோடிக்கு மேற்பட்ட வானொளிப் பெட்டிகளும், 40 கோடி தொலைக் காட்சி பெட்டிகளும், லட்சக்கணக்கான செய்தி பத்திரிகைகளும் உலகை வழிநடத்தின. அமெரிக்கா பாதுகாப்பு இலக்கா உலகெங்கும் 250 வானொலி நிலையங்களும், 40 தொலைக் காட்சி நிலையங்களையும் சொந்தமாக வைத்திருந்தன. மற்றும் செய்தி தகவலை உள்ளடக்கிய 80 லட்சம் பிரதியை அச்சிட்டது. பென்டகன் வருடம் தோறும் 24 செய்தி படங்களை வெளியிட்டது. பிபிசி 3250 பேர் பணிபுரிந்தனர். 46 மொழியில் வாரம் 725 மணி நேர வெளிநாட்டு மொழியில் ஒளிபரப்பைச் செய்தது. பிரஞ்சு நாடு 77 நாடுகளுக்கு 6000 மணி நேர ஒளிபரப்பை வருடாந்தம் செய்தது. இப்படி பல. எதற்காக இதை ஒளிபரப்புகின்றனர்? எதை நியாப்படுத்த செய்கின்றனர்? குறைந்த பட்சம் இந்த கட்டுரையின் உள்ளடக்கம் சார்ந்த உண்மைகளை எப்போதாவது செய்துள்ளர்களா? உண்மையில் நேரடி அடக்கு முறையற்ற அடிமைகளை இவை உற்பத்தி செய்கின்றன? உண்மைகளை குழி தோண்டி புதைக்கவும், மலட்டு சமுதாயத்தை படைக்கவும் இவை உழைக்கின்றன. ஆக்கமும் அறிவுமற்ற மலட்டு மந்தைகளைத் தான், சுதந்திரமும் ஜனநாயகமும் அன்போடு ஆராத் தழுவி நேசிக்கின்றன. இது கற்பனை அல்ல நிஜம்.

29 பேர் தமது மனைவியை கொடுமைப்படுத்தியவர்கள். 7 பேர்



படிப்பகம்

www.padippakam.com



மோசடி குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டவர்கள். 19 பேர் கள்ளக் கசோலை எழுதியதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள். 117 பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் இரண்டு தொழில் நிறுவனங்களை திவலாக்கி கொள்ளையிட்டவர்கள். 3 பேர் பொது இடத்தில் வன்முறையில் ஈடுபட்டதால் கைதாகி சிறையில் இருந்தவர்கள். 71 பேர் வங்கி மோசடியில் ஈடுபட்டதால் வங்கி அட்டை (கிரடிக் காட்,அல்லது காட்டி புளு) மறுக்கபட்டவர்கள். 14 பேர் போதைவஸ்து குற்றச்சாட்டுக்காக கைதானவர்கள். 8 பேர் கடைகளில் திருடியதற்காக கைதானவர்கள். 21 பேர் குற்றம் சாட்டப்பட்ட வழக்குகாளுக்காக நீதி மன்றம் சென்றவர்கள். 84 பேர் குடித்துவிட்டு வாகனம் ஒட்டியதற்காக 2002 இல் கைதானவர்கள்.

இவர்கள் யார்? 535 பேர் பணியற்றும் உலகையே அடக்கியாளும் ஜனநாயக பராளுமன்றமான அமெரிக்க உறுப்பினர்களில். அமெரிக்க சட்டத்துக்கு உட்பட்டு குற்றம் சாட்டப்பட்ட தண்டிக்கப்பட்டவர் பட்டியல்தான் இது. குற்றங்கள் இதைவிட பல மடங்கு? ஆனால் ஜனநாயகம் சமூகக் குற்றவாளிகளின் தங்குமிடமாகின்றது. இவாகள் தான் மக்களை அடக்கியாளவும், அவர்களை கொள்ளையிடவும் சட்டங்களை இயற்றியவர்கள்.. அந்த சட்டங்கள் இவர்களை விலைக்கு வாங்கிவிடுவது பொதுவான வடிவம். சில மட்டும் இப்படி சந்திக்கு வந்துவிடுகின்றது. ஈராக் போரில் இந்த குற்றவாளிகள் தான் அங்கு ஜனநாயகத்தை மீட்க படையெடுத்தவர்கள். தம்மைத் தாம் ஜனநாயகவாதிகள் எனக் கூறிக் கொள்பவர்கள். சொந்த நாட்டை சட்டத்துக்கு புறம்பாக கொள்ளையிட்டவர்கள், ஈராக்கை கொள்ளையிடவும் முயல்கின்ற கனவான்களின் கூடாரம் தான் அமெரிக்கா பராமுமன்றம். இதை தெரிந்து கொள்ளாமல் புரிந்து கொள்வது எப்படி?

சமூகத்தைப் புரிந்து கொள்வது எப்படி? உனது முட்டாள் தனமான மந்தை வாழ்வை விட்டு ஒழிப்பது எப்படி? இதில் இருந்து சுய அறிவைப் பெறுவதற்க்கு குறைந்த பட்சம் படிப்பது அவசியமானது. படிப்பது என்பது பரீட்சைக்காக படிக்கும் படிப்பு அல்ல. சினிமாவைப் பற்றியோ, அன்றாடச் செய்திகள், கிசுகிசுக்களை அல்ல. மாறாக இயற்கை குறித்து, அதில் வாழும் மனிதன் எதார்த்தமான வாழ்வு குறித்து, மக்களுக்காக தம் வாழ்க்கையை அர்ப்பணித்த மனிதர்களின் அளப்பரிய அறிவுக் களஞ்சியங்களை படிப்பது அவசியம். இது பல உனக்கு முரண்பட்டதாக, உனது எதார்த்துக்கு புறம்பானதாக இருக்கலாம். ஆனால் அதில் மனிதனின் எதார்த்த வாழ்வு குறித்து, எமது முன்னோர்கள் முதல் இன்றைய வாழ்வுவரை அறிவைத் தேடிப் படிப்பது மட்டுமே, நிகழ்கால எதிர்கால வாழ்வை புரிந்து கொள்ள உதவும். எனது, எமது வாழ்வுக்கும் மற்றும் எமது சந்ததிக்காகவும் உண்மையாக இருக்கமுடியும். நான், எனது, எனது சந்ததி, என்று நீளும் எமது பார்வையில் இருக்கின்ற சுயநலன்களைக் கூட, எதிர்கால தலைமுறைக்காக வாழும் எமது சுயதியாகம் உண்மையானதாக நேர்மையானதாக இருக்க வேண்டும் எனின், நீ ஒரு மந்தையாக இருக்கின்றயா அல்லது ஒரு சுய சிந்தனையுள்ள மனிதானாக இருக்கிறயா என்பதை நீ தெரிந்து கொள்வது அவசியம்.

இந்த வகையில் மந்தை அறிவியலுக்கு வெளியில் எமக்காக வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற மனித சிந்தனைகள், அறிவுகளை பல தரப்பட்ட தரப்பில் இருந்து படிப்பது அவசியம். நான் அண்மையில் வாசித்த நூல் ஒன்றை குறித்தும், அதில் மனிதத்துவம் எப்படி ஒரு அரசனால் பிரிட்டிஸ் எகாதிபத்தியத்துக்கு எதிராக வீரமாக போராடியபடி கையாளப்பட்டது என்பதற்கு ஒரு சிறு அறிமுகத்தை தரமுயல்கின்றேன்.

1.திப்பு - தொகுப்பு - வெ.ஜீவானந்தம், வெளியீடு அமைதி அறக்கட்டளை
(200 ஆண்டுக்கு முன்பு வெள்ளையருக்கு எதிராக கடைசிவரை கடைசி வீரப்போர் புரிந்த இந்தியா மன்னன் தான் திப்புசுல்தான்.)

1789 இல் அமைச்சர்களுக்கு திப்பு ஆற்றிய உரையில்

எகிப்திய பிரமிட்டுகள் அடிமைகளால் கட்டப்பட்டன. சீனப்பெருஞ்சுவர் அடிமைகளின் ரத்தத்தாலும், எலும்புகளாலும் உருவாக்கப்பட்டது. ரோமபுரியிலும், பாபிலோனியாவிலும், கிரேக்கத்திலும், கார்த்தேஜியிலும் உருவாக்கப்பட்ட மாபெரும் அரண்மனைகளும் கட்டடங்களும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு சவுக்கடிகளால் ரத்தம் சிந்திய எண்ணற்ற அடிமைகளின் உழைப்பைக் கசக்கிப் பிழிந்து உருவானவை. இந்தியாவின் கிழக்கிலும், மேற்கிலும் உருவாக்கப்கப்பட்டுள்ள அத்தனை நினைவுச்சின்னங்களும் கட்டிடங்களும், கலைச்சின்னங்களும் அந்த மன்னர்களின் மாட்சியைக் கூறவில்லை. அவற்றை உருவாக்கக் கண்ணீரையும், ரத்தத்தையும் சிந்திய அபாக்கியவான்களாகிய அந்த அடிமைகளின் வேதனைமிக்க மரண ஒலங்களின் சாட்சிகளாக அவை நிற்கின்றன.

அந்த நினைவுச் சின்னங்கள் எதை உணர்த்திக் கொண்டுள்ளன? என்ன செய்தியைச் சொல்லுகின்றன? அது மன்னர்களின் போலித்தனமான புகழ் மாயையை, அவர்களின் வெறுமையை, கொடுங்கோன்மையை எதிரொலிக்கின்றன. சர்வாதிகாரக் கொடுமையால் உருவான அந்த சாம்ராஜ்ய சிதைவுகள் அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் வேதனைகளைப் பதிவு செய்வதாக இருக்கிறது.

ஆனால், நமது இந்திய மண்ணின் பெருமைக்குரிய மரபு என்ன? இதன் அண்மைக்கால தாஜ்மகால் முதல் 2000 ஆண்டுத் தொன்மை வாய்ந்த சாஞ்சிஸ்தூபி வரை யாவும் சுதந்திரமான ஈடுபாடு கொண்ட மக்களின் உழைப்பிலேயே உருவாகின. இன்னும் பின்னோக்கிப் பல்லாயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஏதேனும் ஒரு நினைவுச்சின்னம், கட்டிடம், கலைப்படைப்பு அடிமைப்படுத்தப்பட்டு, மக்களைத் துன்புறுத்தி உருவானது என்று சுட்டிக்காட்ட முடியுமா? 2000 ஆண்டுகள், என்ன, அதற்கு முன்னரும் கூட இந்த நாடு எவரையும் வற்புறுத்தி, துன்புறுத்தி, கூலியின்றி உழைக்கச் செய்யும் அந்நியர்களின் அநாகரீக முறைகளைக் கையாண்டதில்லை.

இதை ஏன் உங்களிடம் சொல்கிறேன் என்றால் மலபார் பகுதி அதிகாரிகள் அரசுக் கட்டிடங்களைக் கட்ட சிற்ப



படிப்பகம்

www.padippakam.com



தொழிலநுட்பக் கலைஞர்களைச் சம்பளம் ஏதுமின்றி உழைக்க வற்புறுத்துவதாகக் கேள்விப்பட்டேன். எனது தந்தை கட்டிய தரியா தவுலத் அரண்மனையை விரிவுபடுத்துவதில், எந்த விருப்பமுமில்லாத கைகளின் உழைப்பும் இருக்கக் கூடாது. அத்துடன் மட்டுமல்ல, அவர்களது கடந்த கால உழைப்புக்குமான கூலி உடனடியாகத் தரப்பட வேண்டுமென உத்தரவிடுகிறேன். இனி எவரையும் வற்புறுத்திக் கூலியின்றி வேலை செய்யச் சொல்வது சட்டப்படி குற்றமாகும். இச் சட்டத்தைக் கடுமையாக அமல்தார்கள் உடனடியாக அமுலாக்க வேண்டும். இப்போக்கினை அனுமதித்தால் அது அடிமைத்தனத்திற்கு சுலபமாக வழிவகுத்து விடும்.

மனிதர்களின் கண்ணீரும், ரத்தக்கறையும் படிந்த எந்த அரண்மனையோ, சாலையோ, அணையோ புகழுக்கு உரியதாக ஆக முடியாது,,

புதிய மது விலக்கு பற்றி திப்பு

அனாதை பெண்களையும் - குழந்தைகளையும் விற்பது தடை செய்யப்படுகிறது. அரசு அதிகாரிகள் முன்பு இத்தகைய வணிகத்தை மேற்கொண்டிருந்தனர்.

எகிப்தின் பேரோக்கள் அடிமைகளைத் கொண்டு பிரமிட்டுகளைக் கட்டினார்கள். அடிமைகளின் ரத்தத்தாலும், எலும்புகளாலும் கட்டப்பட்டதே சீனப் பெருஞ்சுவர். அப்பாவி மக்களின் கண்ணீரிலும், வியர்வையிலும், ரத்ததிலும் எழுப்பப்படும், எந்த மாளிகையோ, சாலையோ, அணைகளோ பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரியதாகாது.

"1789-ல் தரியா தவுலத் உருவாக்கத்தின் போது முழு மது விலக்கு எனது இதயம் கவர்ந்த லட்சியம். மக்களின் பொருளாதாரம், ஆன்மீகநெறி, இளையோரின் எதிர்காலம் இவற்றை நாம் மனதில் கொள்ள வேண்டும். கிராமங்களில் உள்ள மத மடங்களில் போதைப் பொருட்கள் வழங்கப்படுகிறன. ப்.கிர்கள் தங்கள் மடங்களை விட்டு வெளியே இத்தகைய செயல்களில் ஈடுபடுவதைக் கடுமையாக எச்சரியுங்கள். இதை மீறுபவர்களை நாடு கடத்துவார்கள்."

தண்டனைகள் பற்றி திப்பு

"கசையடி போன்ற தண்டனைகள் அர்த்தமற்றவை. மனிதாபிமானமற்றவை. அவற்றால் பலன் ஏதுமில்லை. அவை குற்றவாளியைக் கேவலப்படுத்துகின்றன. அதற்கு உத்திரவிடும் மனிதனைத் தலைகுனியச் செய்யும் இழிதன்மை கொண்டது அது."

*1788 அமில்தார்களுக்கான உத்திரவு*

"விவசாயமே நாட்டின் ஜீவநாடி. வளமிக்க இம்மண் உழைப்பவர்களுக்கு எல்லாம் தரும். இல்லாமையும் வறுமையும் சோம்பல், அறியாமை அல்லது ஊழல் இவற்றால் உருவாவதே."

*1787 தண்டனைகள் குறித்து*

"நமது மக்களுடன் முரண்படுவது என்பது நமக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்வதாகும். மக்களே நமது வாளும் கேடயமும். அவர்களது கொடையை நமது அரசு. நமது சக்தி முழுவதையும் அந்நிய எதிரிகளை அழிப்பதற்கே பயன்படுத்த வேண்டும்."

*மலபார் கவர்னருக்கு திப்புவின் கடிதம் - 1785*

"மலபாரில் சில இனப் பெண்கள் மார்பகங்களைத் துணியால் மூடாமல் செல்வது எமக்கு வருத்தம் அளிக்கிறது. நல்ல உணர்வுக்கும், ஒழுக்கத்திற்கும் ஒவ்வாத உறுத்தலான காட்சி அது. அது பழங்குடி மக்களின் வழக்கமென நீங்கள் விளக்கம் கொடுத்துள்ளீர்கள். அது அவர்களின் தொன்மையான பழக்கமா? இல்லை வறுமையின் விளைவா? வறுமை காரணமென்றால் அவர்கள் மேலாடை அணிவதற்கான அனைத்து உதவிகளையும் உடன் வழங்குங்கள். அது அவர்கள் மரபு என்றால் அவர்களது இனத் தலைவர்களிடம் பேசி, ஒத்துழைப்பைப் பெற்று அதை மாற்ற முயற்சி செய்யுங்கள். இதற்கான முயற்சிகளை அவர்களது மத நம்பிக்கையைப் புண்படா வண்ணம் நட்பு ரீதியில் மேற்கொள்ளுங்கள். அவர்களது நம்பிக்கையின் வேர்களை உணர்ந்து அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.

இத்தகைய கட்டுப்பாடு ஆண்கள் மீதும் உண்டா? அப்படி அல்லாமல் பெண்கள் மீது மட்டும் இத்தகைய பழக்கம் சுமத்தப்பட்டால் அது நீதிக்குப் புறம்பானது. முரண்பாடானது

மேலாடை இல்லாத பழக்கம் வறுமையின் விளைவா அல்லது அரசர்கள் விதித்த தண்டனையா? இரண்டில் எதுவானாலும் அதை முடிவுக்குக் கொண்டு வர அந்த மக்களுக்கு உதவுவது நல்லது.

இது பழைமைப் பழக்கம் என்றாலும் கூட தமது தாய்மார்களும் சகோதரிகளும் பாதி நிர்வாணமாக நடமாடுவதை எப்படி இந்தப் பழங்குடி இன இளைஞர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்?"

திப்புவின் நூலகத்தில் 2000 மேற்பட்ட உலகளாவிய நூல்கள் இருந்தன. இன்று அவை அனைத்தும் பிரிட்டனில் உள்ளன. மனிதப் பண்பை, மனிதத்துவத்தை உருவாக்குவது சக மனிதனை பற்றிய உனது பார்வையில் இருந்து தான். இதைத் தெரிந்து கொள்வது செயலாற்றுவதுமே மனிதனின் உயர்ந்த மனிதத்துவமாகும்

**பீ. இரயாகரன்**



படிப்பகம்

www.padippakam.com



# கல்விக் கண்ணைத் திறந்த நம் கல்லூரி

இலங்கையிலே கல்வியிலே முன்னணியில் திகழ்வது யாழ் மாவட்டம் என்பது நாடறிந்த உண்மை. அதனிலும் தீவுப்பகுதி மாணவர்களுக்கு தனியிடம் உள்ளது என்று சொன்னால் மிகையாது. அத்தகைய கல்வி வளர்ச்சியில் பெரும்பங்கைக் கொண்ட பாடசாலைகள் இரண்டு தீவுப் பகுதியில் உள்ளன. ஒன்று வேலணை மத்திய மகா வித்தியாலயம் மற்றயது ஊர்காவற் துறை புனித அந்தோனியார் கல்லூரி.

இவ்விரு கல்லூரிகளிலும் வேலணை மத்திய கல்லூரி மாணவர்களின் கல்விக்கு பொருத்தமான அமைவிடத்தைக் கொண்டுள்ளது. சப்த தீவுகளிலுமுள்ள மாணவர்களுக்கு வசதியாகப் போக்குவரத்து செய்யக்கூடிய இடமாக அமைந்திருப்பதும், தூர இடங்களில் இருந்து வரும் மாணவ, மாணவியர் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு வசதியாக ஆண்களுக்கும், பெண்களுக்குமாக விடுதி வசதிகளைக் கொண்டிருந்ததும் இக் கல்லூரியின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் வளர்ச்சிக்கும் ஏதுவாக அமைந்த புறக்காரணிகளாகும். அத்தோடு நிர்வாகத் திறமை மிக்க அதிபர்களையும், கடமையைப் பெரிதென மதிக்கும் பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டிருந்ததும் வளர்ச்சியின் அகக் காரணிகளாகவும் குறிப்பிடலாம்.

இவ்வாறு பெரும் கல்விமான்களைத் தந்த எமது கல்லூரி 1990ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ் நகருக்கு இடம் பெயர வேண்டிய சூழ்நிலை உருவாகிற்று. அத்தோடு மாணவர்கள் பல்வேறு திசைகளெங்கும் பரந்து சென்றதாலும் முக்கியமாக வன்னிக்குச் சென்றதாலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. ஆனாலும் அப்போதைய அதிபர்களின் விடாமுயற்சியால் பாடசாலை தொடர்ச்சியாக இயங்கியது. இருப்பினும் சொந்த அமைவிடத்தில் இயங்க முடியாத நிலைமையே காணப்பட்டது. பாடசாலை இராணுவ முகாமாக இருந்தமையினால் பாடசாலைக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இருப்பினும் பல்வேறு தரப்பினராலும் கொடுக்கப்பட்ட நெருக்கடி காரணமாக இராணுவம் விலக்கப்பட்டு பாடசாலை இயங்க அனுமதியளிக்கப்பட்டது.

கடந்த வருடம் முதல் வேலணை மேற்கைச் சேர்ந்த திரு.அருணகிரிநாதன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று பாடசாலையை செவ்வனே இயக்கி வருகின்றார். இருந்தபோதும் இன்றைய கால கட்டத்தில் பாடசாலை வளர்ச்சிக்கு இன்னும் ஏராளமாகவே செய்ய வேண்டியுள்ளது. முதலாவது பாடசாலை செல்வதற்கான பாதை சம்பந்தமானது. பாடசாலைக்கும் வேலணை வங்களாவடிச் சந்திக்குமான பிரதான பாதை மூடப்பட்டிருக்கிறது. இதனால் கால் நடையாகச் செல்கின்ற மாணவர் பல்வேறு குறுக்குப் பாதையைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. மழை காலங்களில் இது மிகச் சிரமத்தைக் கொடுக்கிறது. (இப்போது பாடசாலை மாணவ, ஆசிரியர்களுக்கு மட்டும் பாடசாலை ஆரம்ப, முடிவு நேரங்களில் பாதையைப் பயன்படுத்த அனுமதியுள்ளது) இவற்றிற்கு முக்கிய காரணம் பாடசாலை அருகே அமைந்துள்ள இராணுவ முகாமாகும். யாழ்நகரில் இருந்து ஊர்காவற் துறை செல்லும் பஸ் வண்டி வங்களாவடிச் சந்தி வழியாக துறையூர், கெட்டில், சுருவில் சந்தி, புளியங்கூடல் சந்தி வழியாகவே பாடசாலைக்குச் செல்கிறது. இதனால் பஸ் வண்டியைப் பயன்படுத்தும் ஆசிரியர்களும் மாணவர்களும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னும் பாடசாலை அருகே இராணுவ முகாம் அமைந்திருப்பது விசனத்துக்குரியதாகும். எனவே இம்முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முகாம் அகற்றப்பட்டால் சாதாரண பொதுமக்களும் பெருமளவில் நன்மையடைவார்கள்.

அண்மையில் (29-11-02) எமது பாடசாலைக்கு கணிதக் கருத்தரங்கு ஒன்றை நடாத்துவதற்கு நான் சென்றிருந்தேன். அதிபருடனும் சக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் உரையாடக் கூடிய வாய்ப்புக் கிட்டியது. புலம் பெயர் நாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்களினூடாக அவர்கள் பல உதவிகளை எதிர் பார்க்கிறார்கள். நான் கொழும்பில் இருந்தபடியால் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் அந்த உதவிகளைப் பெற முயற்சி எடுத்தேன். அவர்கள் எதிர்பார்ப்பது:-

1- பாடசாலைக்கு முக்கியமாக தொலைபேசி வசதி தேவைப்படுகிறது. இதன் மூலம் புலம் பெயர் மாணவர்களுடன் நேரடித் தொடர்பு ஏற்படுத்தலாம். இதற்கு ஏறத்தாழ 90,000/= ரூபா தேவைப்படுகிறது.

2- இவ்வருடத்தில் இருந்து நூறு மாணவர்களுக்கு இலவசமாக விடுதி வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு பாடசாலை முன்பாக உள்ள ஆண், பெண் விடுதிகளை ஆரம்பித்தல்.

3- பாடசாலைக்குத் தேவையான பாண்ட் வாத்தியக் கருவிகளைப் பெறல்.

4- பாடசாலை பிரார்த்தனை மண்டபம் விஸ்தரிக்கப்பட்டு ஆலயம் வரை நீட்டப்பட்டு வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன. மீதமாக மின்சார வேலைகள், வர்ணம் பூசல் என்பன இடம் பெற வேண்டியுள்ளன.

5- பாடசாலை பின்புற எல்லைகள் மதிற்சுவர் கொண்டு அடைக்க வேண்டியுள்ளது.

6- பாடசாலைக்குத் தேவையான கணனி வசதி அதிகரிக்கப்பட வேண்டும்.

மேலே உள்ள குறைகளை நிரப்புவதற்கு பழைய மாணவர்கள் உதவியை எமது பாடசாலைத் தாய் எதிர்பார்க்கிறாள். எமது இளைய சந்ததியின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடனாகும்.

**இத்தாலியிலிருந்து பழைய மாணவன்**
**நாரந்தனை V. குமரன்**



படிப்பகம்

www.padippakam.com



# இரவுக்குள் அச்சம்

- ஹேர்மான் ஹெஸ (Hermann HESSE) -

சுவரில் தொங்கும் சிலந்தி வலையுடன்
மணிக்கூடு கதைத்துக் கொண்டிருக்க
கடைதனில் காற்று கிழிபட்டுக் கொண்டது,
எனது மெழுகுவர்த்தி மிகவும் தனையுருக்கி
கீழ்விழுந்தெரிந்தது.

கிளாஸ் குவளையுள் ஒரு சொட்டு வைனுமில்லை,
அனைத்து மூலையிலும் நிழல் விழுந்து கிடந்தது,
அதனது நீண்ட விரல்கள் என்னருகில் புதையும்படி.

எப்படி இந்தக் குழந்தைப் பருவம்
கண்களை இறுக மூடி பெருமூச்சு விட்டேன்
பயம் என்னை நாற்காலியுடன் பிணைத்திருந்தது
இனி,
என் அன்னை வரமாட்டாள்,
ஒரு நன்மையும் இல்லை, "பணியாளும் போய் விட்டாள்"
என்னை கைகளில் ஏந்தி
இந்தப் பயங்கர உலகத்தை நட்போடு துடைத்தெறிந்து
புதிய ஆறுதலை பிரகாசிக்க வைப்பதற்காக அன்னை வர மாட்டாள்.

கிரகணத்தின் மெல்லலுக்குள் நீண்ட நாளாகச் சிக்கியுள்ளேன்
முகட்டு உச்சியில் காற்றையும்,
மதில்களில் மோதும் அபாயகரமான மரணத்தையும் செவிகளால்
கேட்கிறேன்.
குளிரில் விறைத்து சிலந்தி விரல்களின் மதிப்பையும்
கேட்கிறேன்
கண்கள் விரிகிறது,
அவற்றைப் பார்த்து விட,
அவற்றை எதிர்த்துத் தாக்குவதற்கு,
வெறுமை.
சத்தமும் எங்கோ நெடுந்தொலைவில்

பரிகாசிக்கின்ற இதழ்களிலிருந்து மெல்லிய ஒலி,
கட்டிலை நாடிக் கொண்டேன், தூக்கம், தூக்கம், எவ்வளவு விருப்பமானது!
ஆனால்,
தூக்கமோ ஆட்காட்டிக் குருவியாகி விட்டது,
பிடிப்பதற்கோ அன்றி நிறுத்தி வைப்பதற்கோ
மிகக் கடினம்.
என்ற போதும் மிக எளிதாகக் கொன்று விடலாம்,
அது கத்திக் கொண்டு பறக்கிறது
அதன் குரலில் மிக மோசமான பரிகாசம் தெரிகிறது.
கிழித்தெறியும் காற்றுக் குள்ளும் அதன் அவசரமான பறப்பு வேறு.

தமிழில் : ப. வி. சிறிரங்கன்



படிப்பகம்

www.padippakam.com



## ஹைக்கூ கவிதைகளில் ஒரு பார்வை.

யப்பானியச் சொத்தான ஹைக்கூக் கவிதைகளின் தோற்ற காலம் ஏறக்குறைய 13 ம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. இருந்தும் இதன் தோற்றகாலம் பற்றி பல அபிப்பிராயங்கள் நிலவி வருகின்றன. 'ஹைக்கூ' என்ற யப்பானிய வார்த்தை இன்று சர்வதேச சொல்லாக வளர்ந்து வருகின்றது. எளிமையும் அனுபவமும் சேர்ந்த கடுகுப் பாக்கள் யப்பானில் பிரபல்யமாகி வருகின்றது. வாழ்வு அனுபவமும் ஓவியமும் இணையும் போது ஹைக்கூ கவிதைகள் பூரணம் பெறுகின்றன. அதாவது சித்திர எழுத்துக்களுடன் கவிதைகளைக் காட்சிப்படுத்த கவிதையும் ஓவியமும் ஒன்றிணைந்து படிப்போரால் உள்வாங்கப்படுகின்றன.

ஹைக்கூவின் பொதுவான இலக்கணத்தை நோக்கின் வாழ்ந்து பெற்ற அனுபவத்தை மிகக்குறைந்த பதங்களில் விரிந்த மறைமுகப் பொருள்களைக் கூறுவனவாக இருத்தல் வேண்டும். இது பதினேழு அசைகளையும் மூன்று அடிகளையும் கொண்டதாக இருக்கவேண்டும் என்பது பொது இலக்கணம். சிலர் பதினாறு அசைகள் என்றும் அபிப்பிராயப் படுகின்றனர். இங்கே உவமைகள் அணிகள் அலங்காரங்கள் எதுவும் அவசியமில்லை. படிப்பவருடைய அனுபவத்திற்கு ஏற்ப நூறுவகை அர்த்தங்கள் தோன்றலாம்.

தமிழிலக்கிய வரலாற்றில் புதுக்கவிதைக்குப் பின் முளைவிட்ட பயிர்தான் ஹைக்கூ கவிதைகள் எனக் கூறப்படுகின்றது. வசனக்கவிதை, புதுக்கவிதையோடு தொடர்புடையது. இது இக் கவிதைகளுக்கு அடியெடுத்துக் கொடுத்த பெருமை புரட்சிக்கவி பாரதியாருக்கே உண்டு எனில் மிகையாகாது. இவரைத் தொடர்ந்து பாவேந்தர் பாரதிதாசனும் அடியொற்றிக் கவி புனைந்தார்.
தமிழுக்கு ஹைக்கூ அறிமுகப்படுத்திய பெருமை இந்த இரு கவிஞர்களையுமே முதலில் சாரும். இவர்களுடைய காலத்தில் ஹைக்கூவை கவிதைகளுக்கு அதிக வரவேற்பு கிடைக்காமையினால் ஒதுங்கி இருட்டில் இருந்தது. தற்போதுள்ள கால நேரச் சூழ்நிலைகளால் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

குறுகிய வடிவிலே விரிந்த பொருளைக் கூறும் இலக்கணம் ஹைக்கூவுக்கு உண்டென்றால் சங்கத்தமிழ் நூல்களும் இத் தன்மையையே கொண்டிருந்தன என்பதைப் படிப்பவர் புரியலாம். ஐங்குறு, திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றவை ஹைக்கூவை ஒத்திருப்பதை ஊகிக்க முடியும். அறிவுரையும், அறவுரையும் வழங்குவனவாக உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளன. ஆனால் ஹைக்கூ ஒரு காட்சியைக் காட்டுவதோடு அதன் நோக்கம் நிறைவு பெறுகின்றது. ஒரு புதிர் போட்டு விடைகாணும் முயற்சியினைப் போன்றும் ஹைக்கூ கவிதைகள் உள்ளன. இது கவிதையும் அல்ல் வசனநடையும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட மொழிவாகனம் ஆகும்.

தமிழ்க் கவிஞர்களின் மனதிலே படிமக் குறியிட்டுக் கவிதைகள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த அது தமிழில் புதிய வடிவமாக, புதிய வரவாக பட்டுக் கம்பளம் விரித்து வரவேற்கப்பட்டுள்ளது. ஆரம்பத்திலே மொழிபெயர்ப்புக் கவிதைகளாகவே ஹைக்கூ தமிழில் இடம் பிடித்திருந்தது. நம் தமிழிலேயே யப்பானியக் ஹைக்கூவை பிரசவிக்கமுடியும் எனத் துணிவுடன் பிரசவித்த பாரதியாரும் அவர் வழியே பாரதிதாசனும் தத்தம் கவிதைகளிலே ஆங்காங்கே இனங்காண்பித்துச் சென்றுள்ளனர்.

தேவையற்ற சொற்சேர்க்கை,எளிதான கருத்து விளக்கம், சிந்திக்க வைக்கும் பாடுபொருள் என்பவற்றைத் தன்னகத்தே கொண்ட யப்பானிய ஹைக்கூவை மனப்பூர்வமாகத் தமிழ்மொழி தன் னுடன் அரவணைத்து ஏற்றுக்கொண்டுவிட்டது.

மகாகவி பாரதியாரால் பிள்ளையார்சுழி போடப்பட்ட ஹைக்கூ இன்று காலந்தாழ்த்திய வரவாயினும் தமிழன்னைக்கு ஒரு புது மெருகாகும். அவசரமான உலகிலே இவ்வாறான படிமக்கவிதைகள் வாசிப்போர் மனதை இலகுவிற் சென்றடையும். அத்துடன் அதனோடு ஒட்டிய ஓவியங்கள் மேலதிக விளக்கங்களையும், சிந்தனைகளையும் வாசகர் அறிவுக்கு ஏற்ப விதவிதமான அர்த்தங்களையும் கொடுக்கும். இவ்வாறு தத்துவங்களையும், நிஜங்களையும், போதனைகளையும் காண்பிக்கும்.ஆழ பொருள் கூறும் ஹைக்கூ கவிதைகளை அவரவர் தம்மிடமுள்ள அறிவு வாளியால் கோலி அள்ளிப் பயன் பெறமுடியும்.

**விக்னா பாக்கியநாதன். பீ. ஏ.**
**தமிழ் மணி - ஜேர்மனி**



படிப்பகம்

www.padippakam.com



## Lisbon Revisited (1923)

- தமிழில் வாசகதேவன் -

*இல்லை, எனக்கு எதுவுமே வேண்டாம்.*
*எதுவுமே எனக்கு வேண்டாமென நான் ஏற்கெனவே*
*கூறிவிட்டேனே.*
*உங்களின் தீர்மானங்களுடன் என்னிடம் வராதீர்கள் !*
*மரணம் மட்டுமே ஒரே தீர்வு.*
*அழகியலை என்னிடம் பிரேரிக்காதீர்கள் !*
*ஒழுக்கவியலைப்பற்றி என்னிடம் உரையாடாதீர்கள் !*
*உங்கள் ஆத்மீகவியலை உங்களுடனேயே வைத்துக் கொள்ளுங்கள் !*
*உங்கள் முன்னேற்றங்களை புகழ்ந்ததினிப் போதும்,*
*உங்கள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை அடுக்கடுக்காய்*
*அளந்து தள்ளாதீர்கள், (விஞ்ஞானமாம், கடவுளே, விஞ்ஞானமாம் !)*
*விஞ்ஞானம், கலைகள், நவீன நாகரீகம் !*
*கடவுள்களுக்கு என்ன அநியாயத்தைச் செய்தேன்?*
*உண்மை உங்களிடம் தானென்றால்,*
*அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் !*
*நான் நுட்பவியலாளன்,*
*எனது நுட்பங்கள் எல்லாம் நுட்பங்களுக்குள்ளேயே !*
*அவற்றிற்கு வெளியில் நான் பைத்தியக்காரன்,*
*அவ்வாறு இருக்க உரிமையும் எனக்குண்டு.*
*கேட்டுக்கொண்டீர்களா ? அந்த உரிமையும் எனக்குண்டு.*
*கடவுளின் பெயரால் கேட்கிறேன்,*
*என்னைத் தொந்தரவு பண்ணாதீர்கள் !*
*திருமணமானவனாய், வரட்டு மனிதனாய்,*
*வரிகட்டுபனாய், சாதரணமானவனாய் என்றெல்லாமா*
*நான் இருக்க வேண்டுமென நீங்கள் எண்ணுகிறீர்கள்?*
*அல்லது இதற்கெல்லாம் மாறானவனாய்?*
*எதற்கோ முரண்பட்டனவனாய் நான் ?*
*வேறொருவனாக இருந்திருந்தால், உங்களது அனைத்து வேண்டுகோள்களையும் நிறைவு செய்திருப்பேன்.*
*நான் நானானபடியால், இடத்தைக் காலி செய்யுங்கள் !*
*என்னை விட்டு எங்கேனும் போய்த்தொலையுங்கள்,*
*அல்லது தனியாய் என்னை எங்கேனும் போய்த்தொலைய விடுங்கள் !*
*எதற்காக நாம் ஒருமித்துப் போகவேண்டும் ?*
*கையை விடுங்கள் ! என் கையை நீங்கள் பிடிப்பது எனக்கு விருப்பமில்லாத ஒன்று !*
*நான் தனியாக இருக்க விரும்புகிறேன்!*
*நான் தனியாகவிருந்தேன் என்று ஏற்கெனவே உங்களிடம் கூறிவிட்டேன்.*
*ஆ ! என்னை உங்கள் கூட்டாளியாக்க விரும்புகிறீர்கள், இது என்ன உபத்திரவம் !*
*ஓ! நீல வானமே - எனது குழந்தைப் பருவத்திலான அதே நீல வானம்-*
*வெறுமையானதும் பூரணமானதுமான அநித்திய உண்மையே !*
*ஓ! ஒய்யாரமாய் ஓடும் மௌன,மூதாதைத் தாஷ் நதியே,*
*வானம் பட்டுத் தெறிக்கும் எளிமை உண்மையே !*
*நான் மீண்டும் வந்துபார்க்கும் சோகமே,*
*அன்றையதும் இன்றையதுமான லிஸ்பொண் நகரமே !*
*நீங்கள் எனக்கெதையும் தரவில்லை,*
*நீங்கள் என்னிடமிருந்து எதையும் அகற்றவில்லை,*
*என்னை உங்களில் அடையாளம் காணும் வகையிலான*
*ஏதும் நீங்களிலை !*
*என்னை அமைதியாய் விடுங்கள்!*
*ஒருபோதும் தாமதமாயில்லாத நான்,*
*இங்கு நீண்ட நேரம் தரிக்கப்போவதில்லை...*

*ஊழியும், பேரமைதியும் வாராதவரையும்*
*நான் தனியாக இருக்க விரும்புகிறேன் !*

*-பெர்னாண்டோ பெசோவா.*



படிப்பகம்

www.padippakam.com



## வேர்களின் பூக்கள்

மண்ணுக்குள் இருக்கும்
வேர்களின் கனவுகள்
என்னவாக இருக்கும்

தான் செடியில்
பூத்திருக்கும் பூக்களின் முகங்களை
பார்க்க முடியாமல் போன
சோகங்களை யாருக்கு சொல்லும்

பூக்களைப் பார்க்க
முடியாமல் போன வேர்கள்
என்றாவது அழுதிருக்குமா!

பூக்களின் அழகை
ரசித்த நாம்
என்றாவது வேர்களின்
வேதனையை உணர்ந்திருக்கிறோமா!

பூக்களைப்பற்றி கவிதைகள்
படைக்கத் தெரிந்தவர்கள்
வேரைப்பற்றி எத்தனை வரிகள்
எழுதியிருப்பார்கள்!

வேர்களுக்கு சொந்தமான
பூக்களை வேரிடம்
கேட்காமல்
பூக்களைப் பறிக்கும்
உரிமை யார் தந்தது!

வேர்களின் வேதனைகளை
தெரிந்திருந்தால்
பூக்களை காயப்படுத்தமாட்டோம்

பெண்கள் முகங்களைப் போல்
பூக்கள்.
அவர்கள் மனது போல
வேர்கள்!

~ குறிஞ்சி இளந்தென்றல் ~

### தீவகத்தின் குடித்தொகை 1871 - 1991

| ஆண்டு | வேலணை | புங்குடுதீவு | மண்டதீவு | நயினாதீவு | அனலைதீவு | எழுவைதீவு | நெடுந்தீவு | தீவகம் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1871 | 11,244 | 3,966 | 1,153 | 775 | 1,064 | 290 | 3,025 | 21,517 |
| 1881 | 10,504 | 3,499 | 1,248 | 942 | 1,296 | 277 | 2,637 | 20,353 |
| 1891 | 12,201 | 4,098 | 1,429 | 1,193 | 1,411 | 316 | 2,826 | 23,474 |
| 1901 | 13,014 | 5,201 | 1,890 | 1,318 | 1,543 | 324 | 3,906 | 26,996 |
| 1911 | 13,859 | 5,188 | 1,964 | 1,460 | 1,633 | 368 | 3,728 | 28,200 |
| 1921 | 13,663 | 5,888 | 1,874 | 1,722 | 2,042 | 323 | 4,051 | 29,563 |
| 1946 | 18,263 | 9,149 | 2,461 | 2,640 | 2,215 | 400 | 6,338 | 41,466 |
| 1953 | 20,158 | 9,773 | 2,536 | 3,181 | 2,410 | 403 | 5,987 | 44,448 |
| 1963 | 24,929 | 12,028 | 2,721 | 3,954 | 2,874 | 405 | 5,945 | 52,856 |
| 1971 | 28,025 | 13,766 | 3,078 | 4,090 | 3,030 | 440 | 5,607 | 58,006 |
| 1981 | 31,551 | 14,622 | 3,706 | 4,247 | 3,853 | 528 | 5,620 | 64,134 |
| 1991 | 33,446 | 15,121 | 4,116 | 4,346 | 4,021 | 656 | 5,611 | 67,317 |



படிப்பகம்

www.padippakam.com



## ஒரு சிறிய தேவதை காலத்தை கத்தரிக்கிறாள்.

மேகங்களுக்குப் பின்புறம்,
எங்கோ ஒரு நெடுந்தொலைவில்,
சிறிய தேவதை உட்கார்ந்த படி, பெருங்கத்தரிக்கோல் கொண்டு
காலத்தை தூள் தூளாக வெட்டுகிறாள்
அது எப்போதாவது தாளா இருக்கும் போது.

குறுக்கும் நெடுக்குமான துண்டுகளில்
அவை முன்னும் பின்னுமாக ஜொலிக்கின்றன,
இந்த நோக்கத்துள்
எப்படி அவளுக்கிந்த பாகை அளவு முறைகளெல்லாம்
நோக்கமாக வந்தது,
கூடவே இந்தக் கத்திரிக்கோல் எங்கிருந்து வந்தது.

இக்காலத்திற்குள்
என்ன மீதமாக இருக்கிறது?
அவளுக்கும்
எனக்கும் என்ன மீதமாக இருக்கும்?
என்ன இருக்கும், எங்களெல்லோருக்குமாக என்னயிருக்கும்?

பல வெட்டுத்துண்டு கடதாசிகள்,
இவை இறைவனது குப்பைக் கூடைக்குள் விழுந்து விட்டால்...
எங்கோ ஒரு தொலைவில்,
மேகங்களுக்குப் பின்புறமாக தேவதையொருத்தி இருக்கிறாள்,
காலத்தை சிறிய துண்டுகளாக வெட்டுகிறாள்
அது எப்போதாகினும் கடதாசியாய் இருக்கும் போது,

அவள் மகிழ்ச்சியை சிதைக்கிறாள்,
வேதனையைச் சிதைக்கிறாள்,
அவள் அனைத்து நித்தியங்களையும்
தூள் தூளாக்கி வெட்டுகிறாள் இறைவனது
மிகப் பெரிய கத்திரிக்கோலின் துணை கொண்டு...

## EIN KLEINER ENGEL ZERSCHNEIDET DIE ZEIT

Hinter den Wolken, irgendwo,
sitzt ein kleiner Engel und zerschneidet die zeit
mit einer groBen Schere, als wenn's eine Zeitung wäre.
Er schnickert in die Kreuz und die Quer
ganz einfach so vor sich her,
wie es ihm grad'in den sinn kommt
und wo seine schere hinkommt.
Was bleibt von der Zeit? Was bleibt dir und mir?
Was bleibt, was bleibt uns allen?
Viele kleine Schnitzel Papier,
die in Gottes Papierkorb fallen...
Hinter den Wolken, irgendwo weit,
sitzt ein kleiner Engle und zerschneidet die Zeit,
als wenn's eine Zeitung wäre.
Er zerschneidet das Glück, er zerschneidet das Leid,
er zerschneidet die ganze Ewigkeit
mit Gottes groBer Schere...

SIEGFRIED VON VEGESACK

**"எங்களது காலத்திலிருந்து" (Aus unserer feit)**
**என்ற ஜேர்மன் மொழித் தொகுப்பிலிருந்து - தமிழில் :- ப. வி. சிறீரங்கன்.**

Siegfried von vegesack **1888 இல் பவேரியாவிலுள்ள** Batte **என்ற ஊரில் பிறந்தவர். விவசாயியாய் இருந்த இவர் மிக உன்னதமான அங்கத சுவையுடை கவிதைகள் புனைந்தவர்.** "Klein Handgepack" **(சிறிய கைப்பொதி) என்ற பாடற் தொகுதி இவரது உச்சமான படைப்பு நூல். 1956 இல்** ALBERT Langer - GEORG Müller Verlag **க்கால் வெளிவந்துள்ளது இவரது படைப்புகள்.**



படிப்பகம்

www.padippakam.com



# பரம்பரை உரிமை கோரும் நீரிழிவு நோய்

இன்று புலம் பெயர்ந்து வாழும் எம்மிடையே பரவலாக வீட்டுக்கு வீடு அடிக்கடி பேசப்பட்டு வரும் நோயாகவும், அச்சுறுத்தி வரும் சீனி வருத்தம், சர்க்கரை வியாதி, சுகர் வருத்தம் என்று எம்மவர்களால் எச்சரிக்கப்படுவதைக் கேட்கின்றோம். ஆங்கில மொழியில் இதனை (DIABTES MELLITES) டயபிற்றிஸ் மெலிற்றஸ் என்று கூறுவர். மாத்திரை, ஊசி என்றும் கண்பாதிப்பு, இருதயம் பாதிப்பு, இரத்த அழுத்தம், அதிக உடல் எடை, மன அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பு, சமிபாடின்மை என்றும் பல புதிய புதிய சொற்கள், வாயில் நுழையாத வார்த்தைகள் நம்மவர்கள் பேச்சினிலே நிலை கொண்டுள்ளன.

தாய் நாட்டில் ஒரு வித நோயும் இல்லை. இங்கு புலம் பெயர்ந்ததும் வந்து தொற்றிக் கொண்டு விட்டன என்ற புலம்பல் எதிரொலிக்கின்றது. உதாரணமாக ஒருவர் விருந்தினராக ஒரு வீட்டுக்குச் சென்றால் தேநீருக்குச் சீனி போடுவதா? அல்லது சீனிக் குளிசையா? என்ற கேள்வி முதலில் கேட்கப்படும் அளவுக்கு இந்த வியாதி யாவரும் அறிந்த ஒன்றாக, ஆட்கொண்ட தொன்றாக உள்ளது. எம்மவரிடையே இந்த நீரிழிவு நோய் ஒரு குடும்ப அங்கத்தவன் போல் சேர்ந்து விட்டது. தாயக பூமியில் இவ்வாறான நோய் இல்லை. அப்படி அதிகம் பேசப்படுவதில்லை என்றும் கூறுவது தவறு என்றே சொல்ல முடியும். ஏற்கனவே இந்நோய் இருந்தாலும் அதை நாம் பரீட்சித்துப் பார்த்திருக்கவே மாட்டோம். அதற்குரிய ஒரு வாய்ப்பும் எமக்கிருக்கவில்லையே. அத்துடன் நம் நாட்டிலுள்ள இதமான காலநிலையும், உணவு முறைகளும் ஓய்வற்ற உடலுழைப்பும், மூலிகையுட்பட்ட உணவுகளும், இயற்கை உணவு முறைகளும் சர்க்கரை வியாதி இருந்தால் அதை வீறு கொள்ளச் செய்யாமல் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன எனலாம். உடல் நோக வேலை செய்யும் உடல் உழைப்பாளியை இந்நோய் எட்டிப்பார்ப்பது குறைவு. எனவே தான் சீனி வியாதியைப் பணக்கார நோய் என்று பெருமையாக அழைக்கப்படுவதைக் காணலாம். மடிப்புக்கலையாமல், உடம்பை அசைக்காமல் உட்கார்ந்தபடி வேலை செய்வோருக்கும் பெரிய முதலாளிகளுக்கும் இந்நோய் கூட்டாளியாகப் போய்ச் சேர்கின்றது. பணக்கார நோயாக இருந்து பரம்பரைக்குப் பரம்பரை கடத்தப்பட்டு வரும் பரம்பரை நோயாக இது உள்ளது. ஏனைய நோய்களைப் போல் அடுத்தவருக்குத் தொற்றி விடும் தன்மை இதற்கில்லை. பெற்றோருக்கு இந்த நோயிருந்தால் பிள்ளைகளுக்கும் இந்நோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து வீதம் உள்ளன.

சர்க்கரை நோயாளிகள் அதிக அளவுக்கு அடிக்கடி சிறுநீர் கழிக்கின்றார்கள் எனப் பொதுவாகக் கூறப்படுகின்றது. மேலோட்டமாக சர்க்கரை நோய் எவ்வாறு ஏற்படுகிறது எனப்பார்த்தால் நாம் உண்ணும் சில உணவுகளில் உள்ள இனிப்புச் சத்து ஜீரணமாகி இரத்தத்துடன் கலக்கின்றது. இத்தருணத்தில் எமக்கு சக்தியை உடலில் ஏற்படுத்துகின்றது. சில வேளைகளில் சீனி அல்லது சர்க்கரை ஜீரணமாகாமல் இரத்தத்துடன் நேரிடையாகக் கலக்கும் போது இது நோயாக மாறி விடுகின்றது. இரத்தத்தில் ஜீரணமாகாமல் சேரும் சர்க்கரை சிறுநீர் மூலம் வெளியே வருகின்றது. இதனால் உடலுக்குத் தேவையான சக்தி கிடையாமற் போகின்றது. உணவிலுள்ள சர்க்கரைப் பொருளை நமது உடம்புக்குள்ளே இருக்கும் கணையம் என்ற உறுப்பு இரைப்பையை ஒட்டியுள்ளது. இந்தக் கணையத்தில் சுரக்கும் இன்சுலின் என்ற திரவம் நாம் உண்ணும் உணவுகளில் உள்ள சர்க்கரைச் சத்தை ஜீரணிக்கச் செய்து இரத்தத்தோடு கலக்கச் செய்கிறது. இந்தக் கணையம் ஏதாவது ஒரு காரணத்தால் செயற்படாவிட்டால் இன்சுலின் சுரக்க வாய்ப்பில்லாமற் போகவே சீனி வருத்தம் ஏற்படுகின்றது. இவற்றோடு மனக்கவலை, மனஅழுத்தம், முறையற்ற உணவுப் பழக்கங்கள், கொழுப்புள்ள உணவுகள், மதுபானம், சிகரட் பாவனை, அதிக உணவு என்பன நோயை வளர்த்து விடுகின்றன.

உதாரணமாக நன்றாக வயிறு முட்ட உணவருந்தி விட்டு, தேவையான உடலுழைப்போ, தேக அப்பியாசமோ, எதுவுமின்றி கதிரையிலே முடங்கிக் கிடந்தால் நாளாந்தம் இந்நோய் நட்புடன் பழகி விடும். நீரிழிவு நோய் பொல்லாத நோய் என்றாலும் உணவுக் கட்டுப்பாட்டின் மூலம் ஒருவர் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

இன்று உலகிலே 17 1/2 கோடி மக்கள் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இன்சுலின் எமது கணையத்தில் உற்பத்தியாகும் ஒரு புரதம். இது சரியான அளவில் சுரக்காவிட்டால் நம் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் கட்டுப்படுத்த முடியாது. சீனியின் அளவு கட்டுக்கு அடங்காமல் மீறிவிட இருதயம், பல், சிறுநீரகம், கண், கால், இரத்தக்குழாய் போன்ற அவயங்கள் பாதிக்கப்படும். முற்றாக இந்நோயைக் கவனிக்காவிட்டால் முடிவில் மரணத்துக்கு வழிவகுக்கும் என்பது உண்மை. சீனி வருத்தத்துக்கு வயது எல்லை இல்லை. ஆனால் பொதுவாக நாற்பது வயதுக்கு மேலே பலருக்கு இது வெளிப்பட ஆரம்பித்துத் தலை காட்டும். 1778ல் மேலை நாட்டு மருத்துவர் மத்தியூ டாப்சன் என்பவர் சீனிவருத்தக்காரரின் சிறுநீரில் சீனிச் சத்து இருப்பதைக் கண்டறிந்தார். இவருக்குப் பின்னர் பிரடரிக் ஜி. பேனடிங் என்பவர் பிராணிகளின் கணையங்களில் இருந்து எடுத்த நீரை ஊசி மூலம் நோயாளிக்கு ஏற்றினார். பின்னர் அது இன்சுலின் சுரப்பை இயல்பாகவே உடலில் சுரந்து பல மணி நேரங்களுக்கு வேலை செய்யும் என்ற உண்மையைக் கண்டறிந்தார். இதன் பின்னரே 1921ம் ஆண்டளவில் இன்சுலின் என்ற பெயருடனே இந்த மருந்து உலகிலே அறிமுகமாயிற்று. இன்று பலவித செயற்கைக் கலப்புடன் இன்சுலின் ஊசி மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டுப் பாவனைக்கு வந்து விட்டன. இன்சுலினுக்கு இணையான மாத்திரைகளும் நவீன மருத்துவத்தில் பிறந்து விட்டன. நோயின் ஆரம்ப கட்டத்தில் இருப்பவர்கள் மாத்திரையைப் பயன்படுத்துவதுடன் உணவு விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். சிலருக்கு மாத்திரை ஒத்து வராவிட்டால் உடற்கோளாறு ஏற்படும். மருத்துவரின் ஆலோசனைப்படி இவற்றை உட்கொள்ள



படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். ஊசி மூலம் இன்சுலின் ஏற்றுவது உடனடியான செயற்பாட்டுப் பலனைத்தரும். எனவே இன்று பலர் ஊசியை விரும்புகின்றனர். உடன் மயக்கம், களைப்பு தலைச்சுற்று என்பன நீங்கும் தன்மையால் பலர் தாமே தமக்கு ஊசி ஏற்றிக் கொள்கின்றனர். பொதுவாக ஒருவருக்கு 125 மி.கிராம் சீனியின் அளவு சாதாரண நிலை ஆகும். 180-250 மி.கிராமுக்கு உயர்ந்து விட்டால் உடனடியாக இன்சுலின் ஊசி ஏற்றப்படுதல் நல்லது. சிலருக்கு சில காலம் செல்ல சீனியின் அளவு குறைந்து விட, உணவுக்கட்டுப்பாட்டின் மூலம் சாதாரண நிலைக்கு கொண்டு வரமுடியும். நாவை அடக்காமல், உருசியை வெறுக்காமல் இருந்தால் ஒருவர் ஊசியையே போகும் இடமெல்லாம் காவிச் செல்ல வேண்டும். ஊசி மருந்து மாத்திரைகளுடன் வாழ்நாள் முழுவதும் ஒரே அளவான கட்டுப்பாடான நிலைக்குள் வைத்திருப்பதற்கு உணவு முறைகள், நல்ல பழக்க வழக்கங்கள், அமைதியான உறக்கம், உடற்பயிற்சி என்பன மிக முக்கியமானவையாகும்.

(சர்க்கரை) சீனி வியாதிக்கான பொதுவான அறிகுறிகள்:-

1- எவ்வளவு உணவு அருந்தினாலும் உடல் மெலிந்து காணப்படும். அளவுக்கு மீறிய களைப்பும் சோர்வும் ஏற்படும்.

2- திடீரென தலைசுற்றி மயக்கம் வரும். சிலவேளை கண்பார்வை மங்கலாகத் தெரிவது போன்ற உணர்வு தோன்றும்.

3- உணவு சமிபாடு அடையாமல் பசியின்றி இருத்தல்.

4- தண்ணீர்த் தாகம் ஏற்படும். சிறுநீர் அதிகமாகக் கழியும்.

5- சிலருக்கு உணவு உண்ணாமலேயே உடலின் எடை அதிகரித்தல்.

6- உணர்ச்சி வசப்படுதல், திடீர்க்கோபம், கவலைகள், வழமைக்கு மாறாக இருத்தல்.

7- இல்லற வாழ்க்கையில் ஈடுபட இயலாமை.

இவ்வாறான அறிகுறிகள் கண்டோர் தமது இரத்தத்தைப் பரிசோதனை செய்து நோய் உண்டா? இல்லையா? என்பதை மருத்துவரினால் உறுதிசெய்து கொள்ள வேண்டும். இப்பரிசோதனையை அதிகாலை வெறும் வயிற்றிலே அதுவும் எதுவும் சாப்பிடாமல் இருக்கும் போதே செய்ய வேண்டும். இரத்தத்தில் உள்ள சாதாரண ஆரோக்கியமான அளவு நிலை 90-120 மி.கிராம் எனவும் சுருக்கமாகக் கூறலாம். 90 மி.கிராமுக்கு கீழே சீனியின் அளவு இருந்தால் அதுவும் நோய்க்குரிய நிலை ஆகும். இரத்தத்தில் உள்ள சீனியை அளக்கப்பயன்படும் கருவி "குளுக்கோ மீற்றர்" என அழைக்கப்படுகின்றது.

சீனி வியாதிக்கு உட்பட்டோர் தம் உணவு வகையில் கவனம் எடுக்க வேண்டும். பச்சைக்காய்கறி, கீரை, இலைக்கறி வகைகள், கோவா வகை, எலுமிச்சை, வரகரிசி, தவிட்டுப்பாண், கறுப்புப்பாண் உட்பட கொழுப்பு, எண்ணெய் இல்லாத உணவுகளையே சாப்பிடவேண்டும். இனிப்பு நிறைந்த உணவுகள், சீனி என்பன முற்றாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும். ஒரு நாளைக்குக் குறைந்தது இரண்டு லீற்றர் தண்ணீர் அருந்த வேண்டும். தேநீர், கோப்பி குறைவாக இருப்பது நல்லது. சிகரட், மதுபான வகை அறவே இல்லாத கட்டுப்பாடு அவசியம். தேவையான உடலுழைப்பு, தேகப்பயிற்சி, சுத்தமான காற்றில் உலவி வருதல், நடத்தல் என்பன இங்கே முக்கியமானவை.

புலம்பெயர் வாழ்வில் எமது சுகநலத்தை மற்றவர்கள் தருவார்கள் என்றோ, செய்வார்கள் என்றோ எதிர்பார்க்காமல் நமது ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ள வேண்டும். சுகவாழ்வு என்பது அவரவர் கைகளிலே தான் தங்கியுள்ளது. நோயுற்ற வேளையிலே ஒருவர் அவசரச்சிகிச்சை அறைக்கு அனுமதிக்கப்பட்டால் எல்லா உறவுகளும் கதவுடனேயே நின்று விடும். அதன் பின் வைத்தியரும், தாதியரும், கடவுளும் தான் கதி. பொதுவாக இங்கு வைத்தியரின் கைக்கு அகப்பட்டுவிட்டால் சொல்வதைக் கேட்பதாகவே எமது வாழ்வு அமைந்துள்ளது. எனவே ஒவ்வொருவரும் தத்தம் சுகநலத்தில் இயன்றவரை கவனம் எடுத்து அவசர சிகிச்சை அறைக்குச் (EMERGENCY WARD) செல்லாமல் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். புலம் பெயர்ந்து வாழும் வெறுமை வாழ்வில் நோயும் துணையாகி விட்டால் எப்படி இருக்கும்? எனச் சிந்தித்துச் செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

**விக்னா பாக்கியநாதன் பீ.ஏ**
**(தமிழ்மணி)**
**ஜேர்மனி**
**04-04-03**

## ஒரு கலைஞனின் புலம்பல்

**கனவுக்கும்**
**வாழ்வுக்கும் இடையில்**
**காணாமல் போனவர்களில்**
**நானும் 'ஒருவன்'**
**தானிருக்கும்**
**கொப்பை அறியாது**
**பறந்து போகும் 'காகம்'**

**சந்தைக்கு வந்து**
**காசைத் தொலைத்துவிட்ட**
**'நுகர்ச்சியாளன்'**
**கறையான்**
**தின்ற நாவலை**
**பக்கங்கள் மாற்றி**
**கடித்துவிட்டு**
**வாசிக்க முயலும்**
**'வாசகன்'**
**கனவுகளை**
**நாட்டி**
**கண்ணீர் விட்டு**
**வளர்த்துக்**
**கொண்டிருக்கும்**
**'விவசாயி'**

**- ஈழநிதி -**



படிப்பகம்

www.padippakam.com



## கறுப்புப் பெட்டி பற்றி....

கறுப்புப் பெட்டி என்று நாம் கூறும் பெட்டிகள் உண்மையாகவே கறுப்பு நிறம் கொண்டவையல்ல. கண்களுக்குத் தெரியக் கூடிய வகையில் செம்மஞ்சள் நிறத்தில் தான் அவை அமைந்திருக்கின்றன. பெரும் தீயினில் சிக்குண்டாலும் எரிந்து போகாதவாறு துருப்பிடிக்காத இரும்பினால் செய்யப்பட்டவை இந்தப் பெட்டிகள். சுமார் ஆறு கிலோ மீற்றர் ஆழம் கொண்ட கடலடியில் தாண்டு போனாலும் மூன்று மாதங்களுக்கு பழுதடையாமலிருக்கும். ஆகாயத்தில் இருந்து அதி கூடிய வேகத்தில் விழுந்தாலும் உடைந்து போகாமல் செய்யப்பட்டிருக்கிறது. எங்கு விழுந்தாலும் ஒரு வினாடிக்கு ஒரு தடவை என்னும் கால அளவில் தான் இருக்குமிடத்தை எலக்ரோனிக் தகவல் மூலம் காட்டிக் கொண்டிருக்கும். சுமார் ஒரு மாத காலத்திற்கு இந்தத் தகவல்களை அது வெளியிட்ட படியே கிடக்கும். கறுப்புப் பெட்டியைக் காணவில்லை என்று மற்றவர் கூறமுடியாத வகையில் தொழில்படவல்ல தொழில் நுட்பக் கருவி இது.

கறுப்புப் பெட்டியென்பது ஒன்றல்ல மொத்தம் இரண்டு பெட்டிகள் ஒவ்வொரு விமானங்களிலும் இருக்கின்றன. இவை விமானத்தின் சேதம் குறைவான பின்பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். இந்தப் பெட்டிகள் விமானத்தினுள் நடைபெறும் எல்லா விதமான உரையாடல்கள், ஒலிகள், இயந்திர இயக்கங்கள் உட்பட அனைத்தையும் பதிவு செய்து வைத்திருக்கும். இந்தக் கறுப்புப் பெட்டிகள் இரண்டிற்கும் தனித்தனியான பெயர்கள் உண்டு. ஒன்று சி.வி.ஆர் என்று அழைக்கப்படும். இது விமானமோட்டிகளின் அறையில் நடைபெறும் உரையாடல்களைப் பதிவு செய்யும். சுமார் இரண்டு மணிநேர உரையாடல்களை பதிவு செய்ய வல்லது. இரண்டாவது பெட்டியின் குறியீட்டுப் பெயர் எப்.டி.ஆர் எனப்படும். இது விமானத்தின் தொழில்நுட்பத் தகவல்களை சேகரிக்கும் பெட்டியாகும். விமானத்தின் வேகம், பறக்கும் உயரம், திசை உட்பட பல்வேறு தகவல்களை பதிந்து கொண்டிருக்கும்.

கறுப்புப் பெட்டிகளில் சில தகவல்கள் சட்டரீதியாக பதியப்பட வேண்டியவை உட்பட இதர தகவல்களும் இதில் பதியப்படும். சுமார் 300 விதமான தகவல்களை தனது எலக்ரோனிக் சிப்ஸ்கள் மூலம் பதிந்து வைத்துக் கொள்ளும் திறமை வாய்ந்தது. மேலும் பெட்டியின் வெளிப்பகுதியில் நிலவும் நிகழ்வுகளால் பாதிப்படையாதவாறும் இதன் உட்புறம் பாதுகாக்கப்பட்டிருக்கும். விமானத்தில் கேட்கும் பல்வேறுபட்ட ஒலி அதிர்வுகள் உட்பட நுண்ணிய சென்சார்கள் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் யாவும் விமானியின் அறையில் உள்ள கணினியில் சேர்க்கப்படும். அதன் பின்னர் அங்கிருந்து சகலவிதமான தரவுகளும் கறுப்புப் பெட்டிக்கு அனுப்பப்படும்.

## உலகிலேயே தெளிவாகப் பார்க்கக் கூடிய கணனி

இதுவரை உள்ள வளங்களைப் பயன்படுத்தி உலகத்திலேயே தெளிவாகவும், துல்லியமாகவும் பார்க்கக்கூடிய திரையொன்றை அமெரிக்காவில் உள்ள சன்டியா தேசிய ஆய்வுக் கூடத்தில் உருவாக்கியுள்ளார்கள். உலகத்திலேயே இதுதான் மிகவும் துல்லியமாகப் படத்தைக் காட்டும் கருவியாக உள்ளது. மனிதனின் கண்களால் சிறைப்பிடிக்க முடியாத நுண்ணிய விடயங்களை எல்லாம் தெளிவாக எடுத்துக்காட்டும். இன்றுள்ள ஓர் அதிசிறந்த அதேவேளை அதிசக்திவாய்ந்த - அதி துல்லியமான கணினியின் திரையைவிட இதன் திரை பத்துமடங்கு மேலதிக துல்லியமும் தெளிவும் கொண்டது. உதாரணமாக மூளையை ஸ்கான் செய்தால் அதை சிறு சிறு பகுதிகளாக, ஏன் ஒவ்வொரு புள்ளிகளாகப் பெருப்பித்து, என்ன நடந்திருக்கிறதென அவதானிக்க இது உதவும். அதுமட்டுமல்ல அணு குண்டு போன்றவற்றை வெடித்து பரிசோதனை செய்யும் போது நடைபெறும் மயிரிழை நிகழ்வுகளையும் மிகத் தெளிவாக நமது கண்களுக்குத் தரும்.

சுமார் 20 மில்லியன் பிக்சில்ஸ்கள் என்னும் புள்ளிகளின் அடர்த்தி கொண்டதாகும் இந்தத்திரை. பொதுவாகவே திரையில் விழும் ஒரு பிக்சிலுக்கும் இன்னொரு பிக்சிலுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் நமது கண்களுக்குத் தெரியாது. ஆனால் இந்தத்திரையோ அந்த நுட்பமான வித்தியாசங்களையும் தெளிவாகக் காட்டுகிறது என்றால் பாருங்களேன் அதன் சிறப்பை. இப்படியாக படங்களை தெளிவாகப் பார்ப்பதற்கு சாதாரணமாக ஒரு கணினியின் கிராபிக்கோட் போதியதல்ல. அதை வைத்து இதுபோல விரைவாகவும் தெளிவாகவும் படங்களைப் பெறஇயலாது. எனவே தான் மொத்தம் 16 பிரிவுகளாக இதன் படங்காட்டும் தொகுதி பிரிக்கப்பட்டுள்ளது. நான்கு அதிசக்தி வாய்ந்த கணினிகள் இதை இயக்குவதற்காக தொழிற்படுகின்றன. நாம் இங்கே காணும் கணினித் திரையானது சுமார் 64 கணினிகளின் கூட்டுத் தொகை வேகம், தெளிவு, கொள்ளளவு ஆகியன கொண்டதாகும். மனிதர்களை விட உயரமான இந்தத்திரையின் இரு பக்கங்களிலும் மேலும் இரண்டு திரைகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் முழுமையான படம், இன்னொன்றில் அதனுடைய தனிப்பகுதிக்கான படம், மூன்றாவதில் அந்தப் பகுதியின் தனி நுட்பமான சிறு பகுதிப்படமென மொத்தம் மூன்று படங்கள் இடம் பெறுகின்றன. நடுவில் இருக்கும் திரையே மற்ற இரு திரைகளை விட துல்லியமானது. இதுவே இங்கு நாம் குறிப்பிடும் பிரதான திரையாகும். இன்று வரை நமக்குக் கிடைத்த தகவல்களில் உலகிலேயே இதுதான் மிகத் தெளிவான - துல்லியமான தொலைக்காட்சி அல்லது கணினித் திரையாகும். இது வீடுகளில் பாவிப்பதற்காக செய்யப்படவில்லை விஞ்ஞான ஆய்வு கூடங்களின் தேவைகளுக்காகவே இது உருவாக்கப்பட்டிருக்கிறது.

கி. செ. துரை, டென்மார்க்



படிப்பகம்

www.padippakam.com



# மகா பெரிய ஒழுங்கு

- ஆல்பிறீட் பொல்கர் (Alfred POLGAR) -

“இராணுவம் தேசியக் கொடிக்கு மட்டும் மரியாதை செய்யும் பட்சத்தில் தனி நபரின் மரணம் எதனையோ உரைத்துச் செல்கிறது”- காப்டன் கூறிக் கொண்டான்.

“இராணுவப் படையணி ஒரு நகரத்தை மட்டும் பிடித்து எதிரியை வேட்டையாடும் போது இவ்வூழ்வினையுள் ஏதோவொன்று நிலவுகிறது”- ஜெனரல் கூறிக் கொண்டான்.

தேசாபிமானி கூறினார்:- “இறுதி மனிதன் இருக்கும் வரை நாம் போராடிச் சாக வேண்டுமானால் இச்சாவு தாய் நாட்டிற்காக மட்டும் உபயோகமாக வரவேண்டும்”

தூர நோக்குடைய பண்பாட்டு வரலாற்றியலாளர் தூரப்பார்த்து விட்டு கூறுகின்றார்:- “எப்போதாவது இரு நாடுகள் சுயமாகச் சிதைவுற்றுப் போனால் அவை வீணான காரணத்தால் சிதைவுற்றுப் போகவில்லை, ஐரோப்பா தானே தன்னை ஞாபகப்படுத்திக் கொள்வதும், புதிதாய் மலர்வதும், மேல் நோக்கி வளர்வதும் வேண்டும் கூடவே தனது இரத்தக் கறையை கழுவியாகவும் வேண்டும்.”

முதிர்ந்த புத்திஜீவி தனது குளிர்ந்த விரல்களால் நீண்ட தாடியைத் தடவியபடி:- “குழப்பம் நிறைந்த பழைய ஐரோப்பாவை எடுப்போம், உலகம் பூராக மீளவும் இவர்களால் குற்றச் செயல் செய்ய எப்படிச் சாத்தியமாச்சு? தோட்டத்திற்குப் பசளையிடுவதைப் போன்று மனிதம் பலியாக்கப்பட்டு, கொலையாக்கப்பட்ட பூமிப் பகுதியை மூடிமறைத்து, காத்திராது தங்கள் அறுவடையை செழிப்பாக்கி வளர்த்தெடுத்தார்கள்.”

கடவுள் கூறிக் கொண்டார்:- “எனது சூரியக் குடும்பம் xxvii க்கு, அரேபி 12, லிற்றோ f, தொலைந்து போனது பூமிக்கிரகம். இ.்.து சௌகரியமான பெரும் அர்த்தம் நிறைந்ததாக இப்போது தோன்றுகிறது. சிலவேளை இப்படித் தொலைந்தது நன்மையே! என் விருப்பத்தின் பொருட்டு எப்போதாவது இந்த எல்லாச் சூரிய குடும்பத்தையும் பிரபஞ்ச ஒழுங்குக்கு பொருத்தி வரக்கூடியதாக மாற்றிக்கொள்ள...”

“என் பையன் பத்திரமாக மீளவும் வீடு திரும்புவானென்றால் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று விட்டு விடலாம்.” திருமதி முல்லர் கூறிக் கொண்டார்.

**அல்பிறீட் பொல்கர் 1875 இல் ஜீன் அவுஸ்திரேலியாவில் பிறந்து 1955 இல் சூரிச்சில் காலமானார். வீனிலும், பேர்லினிலும் பெரும் நாடக விமர்சகராக 1940:1949 களில் செயல் பட்டார். சிறு இலக்கிய வடிவங்களின் தந்தை.**

exilivre.com

**புகலிடப் புத்தகம்.**
**அறிவியல் நோக்கில் ஆய்வுகளையும்**
**புகலிட வாழ்வின் எதிரொலிகளையும் சுமந்து வரும் முதலாவது இணையத்தளம்**



படிப்பகம்

www.padippakam.com



# ஐரோப்பிய தமிழ் ஊடகங்கள்

**- பதிவும், பார்வையும். -**

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" பாரதி பாடியதை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம் இன்று. பெருமைப்படும் விடயமாயிருப்பினும், நம்மில் பலரும் நினைப்பது போல் பெருமையல்ல. நாம் நமது தாய் மண்ணில் இருந்து கொண்டு தமிழை உலகமெலாம் பரவும் வகை செய்தால் அது தான் உண்மையில் பெருமைப்படும் பெருமை. தமிழ் பரவுவதற்கு முன் தமிழர் சொந்தமண்ணிலிருந்து விரட்டப்பட்டு அகதிகளாய் தேசாந்திரிகளாய் தேசமெலாம் அலைந்ததனாலல்லவா தமிழ் பரவிக்கிடக்கிறது. இருப்பவற்கு ஒரு வீடு இல்லாதவற்கு பல வீடு என்பது போல் சொந்த நிலங்களைப் பறிகொடுத்து பனி வயல்களை வாங்கிக் கொண்டிருக்கின்றோம். தமிழை வளர்த்துக் கொண்டும் இனத்தை மழுக்கிக் கொண்டுமிருக்கின்றோம்.

இந்தப் பணியை அய்ரோப்பாவில் தமிழ் ஊடகங்கள் செய்து கொண்டிருக்கின்றன. ஊடகங்கள் வெறும் செய்தி சொல்லிகளல்ல. அவை உலகை மாற்றியமைக்கும் சக்திகள், தற்போது E.மெயில் இன்ரர் நெட் போன்ற இலத்திரனியல் வேகமாக மானுடனுக்குள் புகுந்து கடவுளையும், மனிதனையும் அஞ்சலோட்டத்தில் இறக்கிவிட்டிருக்கின்றது. இன்றைய அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் கூட ஊடகங்கள் பெரும் பங்கு வகித்திருக்கின்றது. இந்த மகா சக்தியால் மனித அகவியலை சீர் செய்யவும் மனுக்குலத்தை முன்னேற்றவும் பயன்படுத்தவேண்டும்.

செய்தி ஊடகங்களில் பத்திரிகையும் வானொலியும் மிக எளிதானவை. வானொலி தொலைக்காட்சிகளிலும் பத்திரிகை தனி வாசகனின் உடமைப் பொருளாக்கக் கூடியதனால் விரும்பிய நேரத்தை வாசிக்கவோ பயணத்தின் போதோ நேரம் கிடைக்கும் போதோ விருப்பத்திற்கேற்ப சந்தர்ப்பத்திற்கேற்ப வாசித்தறியக் கூடியது. இதை வெளியிடுதலும் மற்றையவற்றிலும் இலகுவாயிருப்பதனால்த் தான் இன்று செய்திப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசகப் பரப்பளவிற்கு அதிகமாக வெளி வருகின்றன. இருபது வருடங்களிற்கு முன்பு அய்ரோப்பியத் தமிழ்ச் சூழலில் தமிழ்ச் செய்தி ஊடகங்கள் கிடையா. அப்போது தமிழர் தொகை குறைவாகவும், அடிப்படைத் தேவைகளுக்கே அல்லற்படும் நிலைமையும், மொழி மற்றும் பரிவர்த்தனைத் தொடர்புக் கஷ்டங்களும் இன்னபிற வசதியீனங்களும் சாத்தியப்பாடாக அமையவில்லை. நாளடைவில் இலக்கிய ஆர்வலர்களால் கையெழுத்துச் சஞ்சிகைகள், வீடியோப் பத்திரிகைகள் அய்ரோப்பியாவில் எல்லா நாடுகளிலிருந்தும் ஆங்காங்கு வெளிவரலாயின. ஆர்வலர்களினால் தோற்றுவிக்கப்பட்டிருப்பினும் அப்போதைய நம்மவர்களின் வாழ்நிலைச் சூழல், வேலைப்பளு, பொருளாதாரத் தேவைகள், வதிவிடப்பத்திரம் போன்ற சுமைகளினால் தோன்றலும், தோன்றி மறைதலும் தொடர்கின்றன.

**செய்திப்பத்திரிகைகள்;**

செய்திப்பத்திரிகைகள் என நோக்கின் 1987ம் ஆண்டு பாரிஸ் 18இல் இருந்து இரண்டு மாதங்கள் வாராந்தம் வெளிவந்த 12 பக்க போட்டோகொப்பி பத்திரிகை தான் முதல் முயற்சி. க.கணேசமூர்த்தி, தி.குலேந்திரன் என்பவர்களால் தொடக்கப்பட்டு வாசிப்பு நாட்டமற்ற நம்மவரிடையே சரியான சந்தைவாய்ப்பின்மையால் பத்திரிகை நின்று போனது.

1991 ஏப்ரலில் சராசரி மனிதனின் தனிநிறைவுடனான தொழில்சார் பத்திரிகையாக பெரிய முதலீட்டுடன் "ஈழநாடு பாரிஸ்" பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. ஈழத்தில் ஈழநாடு பத்திரிகையில் பணியாற்றிய எஸ்.எஸ்.குகநாதனை ஆசிரியராகவும் எஸ்.கே.காசிலிங்கத்தை நிர்வாகியாகவும் கொண்டு வாராவாரம் தவறாமல் அச்சு வடிவில் வெளி வந்து கொண்டிருந்தது. இப்பத்திரிகை அய்ரோப்பாவில் அச்சு வடிவிலான முதல் பத்திரிகை. மிகத் துணிச்சலான முயற்சியும் கூட. அன்றைய சூழலில் நம்மவர்களுக்கு செய்திகளை அறிந்து கொள்ளவும் மரண அறிவித்தல், நினைவஞ்சலிகள் என்பவற்றை அறிவிக்கவும் பத்திரிகை தேவையாகவிருந்தது. முதல்ப்பத்திரிகை என்பதினாலும் குறுகிய காலத்தில் மக்களின் அபிமானத்தையும் மதிப்பையும் பெற்றது. நாம் கால் நூற்றாண்டிற்கு மேலாக வாசித்துக் கொண்டிருக்கும் அல்லது வாங்கிச் சுருட்டி வைத்திருக்கும் "ஈழநாடு" என்ற பெயருக்குக் கிடைத்த வெற்றியே "ஈழநாடு பாரிஸ்" இன் வளர்ச்சி. இதன் அபரிமிதமான சந்தைவாய்ப்பு விளம்பரம் போன்றவற்றால் ஐந்து நாடுகளுக்குத் தனித்தனியான பதிப்புகளை வெளியிட்டு வந்தது. பரந்து பட்ட வெளியீடு சி.பாலச்சந்திரன் நிர்வாகியாகவும் எஸ்.எஸ்.குகநாதன் ஆசிரியராகவும் பணியாற்ற இப்பத்திரிகை தொடர்ந்தது.

ஈழநாடு எதிர்பாராத வெற்றியை லாபத்தை ஈட்டியதனால் லண்டனிலும் பாரிஸிலும் வேறு பத்திரிகைகளும் வெளிவரத் தொடங்கின. சுத்துமாத்தில்லாமல் மனிதனைத் துன்பப்படுத்தாமல் தொண்டு, சேவை என நல்லன செய்து லாபமீட்டலாம் என்று தொழில் முறைக் கண்ணோட்டத்தில் பலரும் பத்திரிகையைத் தொடங்கினர்.

ஈழத்தில் பல வருட பத்திரிகைத் துறை அனுபவஸ்தர் ஈ.கே.இராஜகோபால் "ஈழகேசரி" பத்திரிகையை 1991இல் தொடங்கினார். இது வீரகேசரியைப் போல அச்சுவடிவிலும் பக்க அமைப்பிலும் அமைந்திருந்தது. யாழ் "ஈழநாடு"வின் அபிமானத்தால் "ஈழநாடு பாரிஸ்" மக்களின் அபிமானப் பத்திரிகையானது போல் "வீரகேசரி"யின் அபிமானத்தால் "ஈழகேசரி" வெற்றியீட்டும் என்ற நப்பாசை. "பாரிஸ் ஈழநாடு" எல்லாத் தமிழர்களின் வெற்றிடங்களையும் நிரப்பி விட்டதால் வாசகர் பரப்பிற்குள் "ஈழகேசரி" சில காலத்தால் காணாமலப் போய் விட 1992 முற்பகுதியில் எஸ்.கே.காசிலிங்கத்துடன் ஈ.கே.இராஜகோபால் இணைந்து "தமிழன்" பத்திரிகை லண்டனிலிருந்து வெளிக்கொணர்ந்தார். "ஈழநாடு பாரிஸ்" லண்டனுக்கு வெளியே செல்வாக்குப் பெற்றிருந்த சமயம் "ஒன்று போதும் ஒரே செய்தியும் ஒரே விடயமும் தானே" என்ற மனோபாவம் தமிழன் சந்தை வாய்ப்பு அரிதாக, ஒன்று போதும் என்ற திருப்தியும் தமிழன் வெளியீட்டுரிமையை பிரான்சிற்கு த.சந்திரகுமார் கொண்டு வந்து எஸ்.கே.காசிலிங்கத்துடன் நடாத்தி, பின் அதுவும் மறைந்து போனது.

இதே ஆண்டு பிரான்ஸில் எஸ்.கே. ராசனும் கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்களும் இணைந்து "பாரிஸ் முரசு" பத்திரிகையைக் கொணர்ந்து இவ்வாண்டின் பின்பகுதியில்



படிப்பகம்

www.padippakam.com



தலைவலிக்கு தலைஅணையை மாற்றியது போல் வி.ரி.இளங்கோவன் ஆசிரியராக "ஐரோப்பா முரசு" எனப் பெயர் மாறி வெளியிட்டனர். வருடமுடிவில் இதுவும் நிறுத்தப்பட்டது. எல்லாப் பத்திரிகைகளும் தப்புத் தண்ணியில் போட்ட தாளமாக இரண்டு வருடத்தில் சலசலத்து ஓய போட்டி முடிவடைந்தது.

ஈழநாடு உலகப் பத்திரிகையாக வலம் வரத் தொடங்கியதும், உலகத்தமிழர்களின் அபிமானியாக இடம் பிடித்ததும் பத்திரிகையின் தரம் குறைந்தது. எதுவாயிருந்தாலும் "நம்ம சனம் வாங்கும்" என்ற நிலை வந்ததும் பத்திரிகையின் விடயங்களில் கவனக்குறைவு. இதில் ஐரோப்பிய கலை, இலக்கிய, சமூக வெளிப்பாடுகள் செய்திகள் இதில் வராமற்போக 1999 ஏப்பிரல் ஜேர்மன் சிவனடியான் சிறீபதி, பிரான்ஸ் வண்ணைதெய்வம் ஆகியோர் இணைந்து பிரான்ஸிலிருந்து "தாகம்" என்ற பத்திரிகையை வெளிக்கொணர்ந்தனர். கலை, இலக்கிய செய்திகளை மட்டும் தாங்கி அதுவும் ஒரு மாதம் மட்டுமே வாராந்திரியாக வெளிவந்தது.

1995 ஜனவரியிலிருந்து அமரர் கஜேந்திரனை ஆசிரியராகக் கொண்டு "ஈழமுரசு" பாரிஸிலிருந்து வெளிவரத் தொடங்கியது. குளிர்சாதனப் பெட்டியிலிருந்த சாப்பாட்டை எடுத்து திரும்பத் திரும்ப சுடவைத்துக் கொடுப்பது போல வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகையிடையே "ஈழமுரசு" சிறிது மாறுபட்ட புதிய, சூடான செய்திகளைத் தாங்கி வெளிவரத் தொடங்கியது.

பிரான்ஸின் பத்திரிகைப் போட்டியும் ஈழநாட்டில் வெளிவரும் நினைவஞ்சலிப்போட்டியும் (இரண்டு பிள்ளைகளும் வெவ்வேறு நாடுகளிலிருந்து நினைவஞ்சலி கொடுத்தல்) ஜேர்மனி, லண்டன் போன்ற இடங்களில் பத்திரிகை நடாத்த பலரும் கடை திறப்பது போல் தொடங்கினர். ஜேர்மனியிலிருந்து தமிழர்கள் அதிகமாக வாழும் மாநிலங்களிலிருந்து குறைந்த எண்ணிக்கையில் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. நயினை விஜயனின் "தமிழருவி" டோர்ட்மூண் நகரிலிருந்து வெற்றிமணி மற்றைய மாநிலங்களிலிருந்து ஈழமணி, ஈழம் என்பனவும் வெளிவந்தன. இவை அதிக விளம்பரங்களைத் தாங்கி பின் நாளில் இலவச பத்திரிகைகளாகவே வெளிவந்தன. "வெற்றிமணி" என்ற இலவச பத்திரிகையே இன்று வரையும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எல்லாப் பத்திரிகைகளும் ஒரே செய்தியையே வெளியிடுகின்றன. செய்தி என்பது உண்மையானதெனில் ஒன்று தான். தாயக யுத்தம், இடம் பெயர்வு, அவலம், அரசியல் பற்றிய செய்திகளை சரிவரச் செய்திருப்பினும் அய்ரோப்பிய நமது சூழலின் செய்திகள் கருத்துக்கள் வெளிவராதது தமிழ்பத்திரிகையின் குறை. ஈழமுரசு ஓரளவு சில விடயங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தக் குறை போக்க இயல்வாணனை ஆசிரியராகக் கொண்டு 1998ம் ஆண்டு யூன் மாதம் "சுட்டுவிரல்" தினசரி செய்திப்பத்திரிகையாக வெளிவந்தது. தினசரி வெளியீடு என்பது அதிசயம் தான். வியாபார ரீதியில் விரிவு படுத்தப்படாது பாரிசிற்குள் மட்டும் வெளிவந்ததாகையால் இந்த உண்மை பலருமறியாதது. இதுவும் கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் தினசரியாக வெளிவந்து பின் வாராந்திரியாகி மறைந்து போனது. தோன்றலும் மறைதலும் இயற்கையும் இயல்புமாகவே போனதொன்றிற்கு இதுவும் விதிவிலக்கல்ல.

லண்டனில் இன்று ஈ.கே.இராஜகோபாலின் புதினம் மற்றும் உதயன், வடலி, அருவி போன்ற இலவச பத்திரிகைகள் தாம் நினைத்த நேரத்தில் மாதத்திற்கு ஒன்றோ இரண்டோவெனவும் வாராந்திரியாகவும் வெளிவருகின்றன. கைக்கெட்டிய செய்திகளோடு தமிழ் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களைத் தாங்கி வெளிவருகின்றது. இவை பத்திரிகை ஆர்வலர்களால் சாதகமான சந்தர்ப்பங்களில் வெளிவருகிறது.

2002 ஓகஸ்ட் மாதத்திலிருந்து இரண்டு "ஈழநாடு" பிரான்ஸிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. ஒன்று சி.பாலசந்திரனை ஆசிரியராகவும் மற்றையது எஸ்.எஸ்.குகநாதனை ஆசிரியராகவும் கொண்டு வெளிவருகின்றது. இரண்டு ஈழநாடுகள் வருவதற்கு முன் சிலகாலம் "இழநாடு" ஆக வெளிவந்தது பலர் பார்க்கத் தவறியிருப்பர். இந்தப் பெயர் மாற்றம் - பின் இடமாற்றம் - பின் ஆள் மாற்றம், பத்திரிகை நிர்வாகம் ஏதோ அலங்கோலப்பட்டதை அம்பலப்படுத்தி நிற்கின்றது. பத்திரிகை தொழில் "தொண்டல்ல" வர்த்தகமும் தான், இருந்தும் இதை சோத்துக்கடை, புட்டுக்கடை, தோசைக்கடை லெவலுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறது. "ஈழநாடு பாரிஸ்" உலகத் தமிழரின் பத்திரிகை என்ற அபிமானம் மதிப்பு பெற்றதோடு பத்திரிகை நிறுவனத்தாரின் சாதனை, மதிப்பு, உழைப்பு அளப்பரியது. அந்த மதிப்பும் அளப்பரிய செயலும் இன்று...?

மக்களது தேவைகள், பலம், பலவீனம் இவற்றைப் புரிந்து கொண்டு செய்யும் தொழில் வியாபாரம். தமிழ் வாசிப்புச் சூழலில் தங்கி நிற்க வேண்டுமெனில் இந்நிலையில் நின்று தோற்றுவிக்கப்படலாம். தோற்றம் வளர்ந்து இயங்குசக்தியாகி வாசகர் களம், விநியோகம், விளம்பரம் என ஒழுங்கமைந்த ஒரு ஒழுங்கில் செல்கையில் அந்தச் சாதனத்தை மக்களை வழிநடத்திச் செல்லும், மக்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படும் ஊடகமாக மாற்றவேண்டிய தேவை இருந்து கொண்டே இருக்கிறது. இங்கே எமது வாசகர் பரப்பளவில் அரசியலுக்கு, இலக்கியத்திற்கு, அறிவியலுக்கு, செய்திக்கு என்று தனித்தனிப் பத்திரிகைகள் நடாத்த இயலா. ஆகவே எல்லாமும் சேர்ந்த மொழியறிவாளர்களையும் உள்ளெடுத்து பத்திரிகையைக் கொணரவேண்டியிருக்கிறது. பத்திரிகை தயாரிப்பு ஒரு இன்டர்நெட், ஒரு கம்பியூட்டர், ஒரு தொலைபேசியுடன் ஒரு அறைக்குள்ளிலிருந்து செய்து முடிக்கும் காரியமாகிவிட்டது. மக்கள் மயப்பட்டுப்போன ஒரு பத்திரிகை, நிறுவனமயப்பட்ட துறைசார் தொழில், உடன் கோழி, உடன் மீன் கடையாகிப் போச்சுது இன்று. பங்கு இறைச்சி போல் பகிர்ந்துண்டு போகும் சரக்காகிப் போனது வெட்கப்பட வேண்டிய விடயம் தான்.

**ஒலி, ஒளி**

ஊடகங்களில் வானொலி, தொலைக்காட்சிகள் விரும்பிய நேரத்தில், வேளைகளில் நுகரமுடியாத சாதனங்கள். பார்க்க கேட்க தவறிய நிகழ்ச்சிகளை திரும்பப் பெற இயலா. நேரம் ஒதுக்கியோ ஒரு நிலையிலிருந்தோ கேட்கும் சாதனங்கள், எல்லோராலும் விரும்பப்படும் ஊடகங்களும் இவைதான். இவை முக்கியமானவையும் கூட. புலம் பெயர் சூழலில் எமக்கு இவை தேவையானவைதான்.

ஐரோப்பிய மொழிபுரியாமை, கற்றலுக்கான அவகாசம் இல்லாமை இப்படியான சூழலில் ஒவ்வொருவரும் வேலை-வீடு என்ற 'ரிமோட்கொன்றோள்' வாழ்வியகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் நமக்கு இந்த ஊடகங்கள் மிகவும் பயன்பாடானவை. நமது மொழியில் உடனுக்குக்குடனான செய்திகள், அறிவித்தல்கள் உறவுகள் உடனான தொடர்புகள் இவற்றிற்கெல்லாம் ஊடகங்கள் உதவுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



தொலைபேசியூடான செவ்விகள், உரையாடல்கள், விவாதங்கள், கருத்துக்களங்கள் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பேச்சுக் கூச்சத்தை இல்லாமல் செய்வதோடு நாவன்மையையும் சிந்தனைத் திறனையும் வளர்க்கிறது. எமது சிறுவர்கள் தமிழைக் கற்கவும் பயன்படுகிறது. தமிழகத்தில் இருந்து வரும் படங்கள், நாடகங்கள் மூலம் தமிழை நமது வழக்கில் இல்லாத சொற்பிரயோகங்களையும் பயன்படுத்திப் பேசும் சிறுவர்கள் வானொலியூடாக நல்ல தமிழை கேட்கிறார்கள்.

ஐரோப்பாவில் தனியார் தமிழ் வானொலிச்சேவை முதன் முதல் 1987 ம் ஆண்டு நோர்வையில் கார்மேகம் நந்தா அவர்களால் ஒரு மணித்தியால நிகழ்ச்சியாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இளவாலை விஜேந்திரன் அவர்களால் இரண்டு மணித்தியால நிகழ்ச்சியாக வாரத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து நிகழ்கின்றது.

1990 ம் ஆண்டிலும் நோர்வையில் யூலியஸ் அன்ரனி அவர்களால் 'தேன்தமிழ் ஓசை' ஆரம்பிக்கப்பட்டு நோர்வேயின் ஒல்டன்ஸ், பேர்கன் மாநிலங்களில் வாரத்தில் மூன்று நாட்கள் பகுதிநேர ஒலிபரப்புச் சேவையாக இடம்பெறுகின்றது.

1990 இல் பிரான்ஸில் முதன்முதலாக 'முத்தமிழ் மன்றம்' என்ற அமைப்பினால் வாரத்தில் இரண்டு தடவை ஒரு மணித்தியால சேசை நடைபெற்றது. பிரியாலயம் துரைஸ், தேவா, ராம்ராச் ஆகியோரின் முயற்சியால் இரண்டு வருடங்கள் இச்சேவை நீடித்து நின்று போனது.

1991 ம் ஆண்டு லண்டனில் சண்றைஸ் வானொலியும் இரண்டு மணித்தியால சேவையாக வாரத்தில் மூன்று நாட்கள் இடம்பெற்றது. இதே ஆண்டில் பிரான்ஸில் எஸ்.கே. ராஜன் அவர்களால் 'தமிழ் அமுதம்' வாரத்தில் இரண்டு நாட்கள் ஒரு மணித்தியால சேவையாக நடைபெற்றது. இச்சேவையும் ஒரு வருடத்திற்கு மேல் நீடிக்கவில்லை.

1992 ம் ஆண்டு ஜேர்மனியில் டோர்ட் மூண் நகரில் விக்னா பாக்கியநாதன் அவர்களால் ஒரு மணித்தியாலய சேவையாக 'கலைவிளக்கு' ஆரம்பிக்கப்பட்டு வடமேல் மாகாணத்தில் மட்டும் கேட்கக் கூடியதாக 95 ம் ஆண்டுவரை நீடித்து நிறுத்தப்பட்டது. 2000ம் ஆண்டில் நோர்வே ஒஸ்லோவில் 'தமிழ்முரசு' பகுதி நேர வானொலியாக இன்று வரையும் ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

1990 இல் ஜேர்மன் பேர்லின் நகரில் 'உலகத் தமிழ்' தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டு சிலமாதங்களில் நிறுத்தப்பட்டது.

1997 ஜனவரியில் இருந்து RADIO ASIA முழுநேர வானொலிச் சேவையாக தொழில்த்துறை சார் நிறுவனமாக பிரான்ஸில் ஆரம்பிக்கப்பட்டது. செ.சிறீதரன், எஸ்.எஸ்.குகநாதன், சிவனடியான் சிறீபதி (ஜேர்மனி), மூர்த்தி மாஸ்டர் (சுவிஸ்), ஈ.கே.ராஜகோபால் (லண்டன்) ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவை கட்டண அறவீடு முறையென அறிமுகப் படுத்தப்பட்டது. நான்கு மாதங்களின் பின் இலவச சேவையாக்கப்பட்டது.

1997 மே மாதத்தில் இருந்து ரி.ஆர்.ரி தமிழ் வானொலி தொலைக்காட்சியாக விஸ்தரிக்கப்பட்டு த.சந்திரகுமாருடன் இணைந்து தொலைக்காட்சி சேவையும் முழுநேர சேவையாக ஒளிபரப்பப்பட்டது. இதுவே புலம்பெயர் தமிழ் மக்களின் முதல் தொலைக்காட்சி. முழுநேர வானொலி, தொலைக்காட்சிச் சேவை நடத்துவது சாமானிய விடயமல்ல, நிறுவனங்களின் ஆசாத்தியத் துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும். இதே ஆண்டு யூலை மாதம் லண்டனில் ஐ.பி.சி. வானொலிச்சேவை முழு நேரசேவையாக தொடங்கி இன்று வரையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

பிரான்ஸில் ரி.ஆர்.ரி நிறுவனம் கலைந்து போய் 2000 ம் ஆண்டு டிசம்பர் இல் இருந்து 'தமிழ் அலை' ஒலிபரப்புச் சேவை தொடங்கப்பட்டது. முன்னைய ரி.ஆர்.ரி யின் சில கலைஞர்களும் முதலீட்டாளர்களினதும் முயற்சி இது. ரி. ஆர்.ரி யின் ஒளிபரப்புச் சேவை ரி.ரி.என். ஆக பெயர் மாற்றப்பட்டு முன்னைய முதலீட்டாளர்களில் சிலருடன் புதுமெருகுடன் ஒளிபரப்பப்பட்டுவருகின்றது 2001 ஜனவரியிலிருந்து. பிரான்ஸில் மும்மரமடைந்த ஒலி ஒளிபரப்புக்களின் பின் லண்டனில் மேலும் வு.ட.ஊ. நு.வு.ட.ஊ எனப் புதிய புதிய வானொலிச்சேவைகளும் போட்டி போட்டுக்கொண்டு எழுந்தன. தீபம் தொலைக்காட்சிச் சேவையும் இன்றைய பொழுது வரையும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது.

2001 ஆகஸ்ட் இல் இருந்து முன்னைய T.R.T யிலிருந்த சில கலைஞர்களும் வேறு இலக்கிய ஆவலர்களும் சேர்ந்து A.B.C. என்ற முழுநேர ஒலிபரப்புச் சேவை ஒன்றை நடத்தி வருகின்றனர்.

2002 மே இல் இருந்து தமிழ் அலை வானொலிச் சேவையினரால் T.R.T தமிழ் ஒளி முழுநேர தொலைக்காட்சிச் சேவையொன்று தொடக்கப்பட்டது. 2002 செப்டெம்பர் வரை பிரான்ஸில் இயங்கிய இச் சேவை ஜேர்மனிக்கு மாற்றப்பட்டு லண்டன் CITV தமிழகம், மற்றும் சிறிலங்காவில் இருந்தும் நிகழ்ச்சிகளை வாங்கி வழங்கக் கூடிய அளவு விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றது. தொலைக்காட்சி சேவையை ஜேர்மனிக்கு அனுப்பி விட்டு தமிழ் அலை தற்சமயம் தற்காலிகமாக நின்று போயிருக்கிறது.

இந்த தமிழ் ஊடகங்களின் வரவால் இங்கு பிறந்து வளர்ந்த எமது பிள்ளைகள் எளிதில் தமிழை பேசப்பழகுகின்றனர். சிறுவர்களும் பெரியவர்களும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதனால் பல பொது விடயங்களை தெரிந்து கொள்கின்றனர். 'தமிழைப் படிச்சு என்னத்துக்கு' என்று அலட்சியத்தோடு இருந்தவர்கள் மொழி ஒரு கருவியென, தேவையை உணர்ந்து தம்பிள்ளைகளுக்கு தமிழ் கற்பிக்க முயல்கின்றனர். கடை கடையா ஏறி இறங்கி ஒலி ஒளி நாடாக்களை வாங்கி வீட்டிற்குள் உட்காந்திருந்து பாத்துக்கேட்டு மனனம் செய்யும் நமக்கு, அவையாக வீட்டிற்குள் வந்ததனால் வேலையும் குறைவாக போகின்றது.

தாயகச்செய்திகள் விவரணங்கள் மூலம் எம்மையும் எம் தாய் மண் அறிய நம் பிள்ளைகளையும் தாயகத்துடன் இறுகப் பிணைத்து வைத்திருக்கின்றது. தாயகச் சூழலையும் சிந்தனையும் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வூடகங்கள் மூலம் இலக்கியம், அரசியல், அறிவியல், விஞ்ஞானம், செய்திகள், பேட்டிகள், ஆரோக்கியம் பற்றிய விடங்களை தாய் மொழியின் மூலம் அறியக்கிடைப்பதும் பெரிய விடயம்தான். ஊடகங்களின் அதிக நிகழ்ச்சிகள் வெறும் பொழுது போக்குகளாகவே அமைகின்றன. பொழுது போக்கு என்பது முக்கியம் தான், நாள் முழுக்க கருத்தியல் வடிவங்களை வழங்கவும் முடியாது. அதை நேயர்களால் ரசிக்கவும் முடியாது.

வீட்டிலுள்ளவர்கள் வேலைக்குகப் போனால் தனிமையிலிருக்கும் நமது வயதானவர்களுக்கு தமிழுடகங்கள் ஒரு வரப்பிரசாதம். ஊடகங்களின் தொகை அதிகரித்தனால் இருந்த இடத்திலேயே இருந்து விருப்பத்திற்கேற்ப அலை



படிப்பகம்

www.padippakam.com



வரிசைகளை மாற்றி மாற்றி ரசிக்கின்றனர். இதனால் போதிய தேகாப்பியாசமின்றி உடல் உபாதைக்கு உட்படுகின்றது. விரும்பி ரசிக்கும் தொடர்களால் சில விடயங்களை 'நாளைக்குப்பாப்பம்' என்றும் தள்ளிப்போடுகின்றனர். சோம்பேறியாகின்றனர். எல்லா விடயங்களும் நன்மையாலும் தீமையாலும் கலப்பானது. அப்படி நோக்கினும் சில பாதகமான விடங்களும் உண்டு.

எல்லாவற்றையும் தமிழில் அறியக்கூடியதாக இருக்கையில் வாழும் நாட்டில் மொழிமேல் அக்கறையில்லை, கற்றலில் ஆர்வமில்லை, அதுசம்பந்தமான தேடலில்லை, என்ற குற்றசாட்டுமுண்டு. மொழியின் முக்கியத்துவம் பற்றி சரியான புரிதல் இருப்பவர்களுக்கு இந்த குற்றசாட்டு பொருந்தமில்லை. அப்படியான புரிதலை ஊடகங்களின் போட்டிப் பெருக்கம் மறுதலிக்கின்றது.

இன்றைய பொழுதுவரை நான்கு வானொலிகளும், மூன்று தொலைக்காட்சி சேவைகளும் குறைந்த சனத்தொகையுள்ள ஐரோப்பிய தமிழ்ச் சூழலில், தமிழர்களின் பொருளியல் வளத்திற்கு அதிகம்தான். இவற்றைச் செவ்வனே நடத்திச்செல்ல வேண்டிய செலவை குறிப்பிட்டுத்தான் தெரிய வேண்டியதில்லை. நம்மவர் உழைக்கும் பணம் இப்படி விரையமாகிறது. இந்த இத்தனை ஊடகங்களுக்கும் செலவாகும் பணத்தை அகதிகள், ஆதரவற்றவர்கள், ஊனமுற்றவர்களுக்கு நிவாரணப் பணிகளைச் செய்யலாம். வர்த்தகநோக்கில் இந்நிறுவனங்கள் லாபமீட்டவுமில்லை.

ஊடகங்களின் தொகை அதிகரித்ததனால் அதன் செலவை ஈடுசெய்ய வர்த்தகர்களை நாடவேண்டியுள்ளது. வர்த்தகர்களும் பல ஊடகங்களுக்கும் விளம்பரங்கள் கொடுக்க நேரிடுகையில் 'தமிழ்ச்சாமான்' களின் விலையை அதிகரிக்க நேரிடுகிறது. கேட்டால் 'நம்மாக்கள்...நம்மடைய வளர்த்து விடவேண்டும்' என்பார்கள். நமதுகளை வளர்க்க சாதாரண குடிமகன்தான் பலியிடப்படுகிறான்.

இத்தனை ஊடகங்களும் என்ன நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றன. எப்படித் தயாரிப்பது? குறைந்த சனத்தொகை, ஒரேவிடயங்கள். ஒரு கலைஞனை இரண்டு ஊடகங்கள் நேர்கண்டால் ஒரேசெய்தி தானே. இதுபோலவே ஒரேவிடயங்கள் எல்லா ஊடகங்னளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தொலைக்காட்சிகளில் இறக்குமதி செய்திகள் அதிகம். இது தவிர்க்கக்கடியதும் தவிர்க்க இயலாதது மாகின்றது. மனிதன் தனது தேவை களைத்தானே தேடிக்கொள்கின்றான். ஒரு தனிமனிதனால் தேடமுடியாத வற்றையே மற்றவர்களிடமிருந்து பெறுகிறான். அவசியங்களை இறக்குமதிசெய்யலாம், அனாவசியங்களை இறக்குமதிசெய்ய வேண்டிய தேவை என்ன?

தொலைக்காட்சிகளில் உள்ளுர் விடயங்கள் மிகமிகக் குறைவு இந்த வகையில் எடுத்து நோக்கின் T.T.N. தொலைக்காட்சி சரியான நேரத்தைக் கடைப்பிடித்தல், உள்ளுர் (புகலிட- ஈழ) விடங்களுக்கு முன்னுரிமை, வழங்கள் முறை, தாயக நினைவுகளை, அவலங்களை எமக்கு உணர்த்தி தாயகத்திற்கும் எமக்குமான உறவை இறுக்கல் இப்படியான நல்ல காரியங்களைச் செய்கிறது. இச் சேவையில் இறக்குமதி குறைவு. இறக்குமதி செய்து விற்றல் என்பது வெறும் வியாபாரத்திற்கு மட்டுமே பொருந்தும். ஒரு மனிதனின் பழக்க வழக்கத்தை, கலையை, கலாசாரத்தை, பண்பை, அறிவை இறக்குமதி செய்தல் என்பது இயலாது.

உள்ளுர் உற்பத்திக்கு செலவு அதிகம். ஆகவே மலிவாக இறக்குமதி செய்கின்றோம். ஆகவே நிகழ்ச்சிகளை வாங்குவது மலிவு என்பதால் பேய்களை வாங்கி தலையில் சுமக்க வேண்டிய அவசியமில்லை. (சில நிகழ்ச்சிகள் அப்படி அமைந்து விடுகின்றன)

ஊடகங்களின் எண்ணிக்கைகள் குறைந்தால் லாபமீட்ட சந்தர்ப்பம் வரும். சந்தர்ப்பம் வரின் தரமான நிகழ்ச்சிகளை வாங்கவும் செலவு செய்து சுயமாக நிகழ்ச்சிகளை தயாரிக்கவும் முடியும், இதை விடுத்து கீறிட்ட இடங்களை நிரப்பவும்,நேர இடைவெளிகளை நிறைவு செய்யவும் எதையாவது வாங்கி நிரப்பிக் கொள்வதல்ல. விடயங்கள் பெறுவதில் சிரமம் இருப்பின் இந்த ஊடகங்கள் சேவை நேரத்தைக் குறைத்துக் கொள்ளலாமே. பிரான்ஸில் பிறந்த பிள்ளை ஐந்து வயதில் 'பப்படம் சைவாக்கள் சாப்பிடுகிறது' என்று பப்படத்தை இந்து மதத்தில் சேர்க்கிறது என்றால் தமிழக வீடியோ நாடாக்கள் பிள்ளைகளை அல்லது அம்மாக்களை அப்பாக்களை எப்படி வழி நடத்துகிறது என்பது வெள்ளிடை மலை.

ஐரோப்பிய தமிழ்த் தொலைக்காட்சிக்கு மலிவாக 'சனல்' வாங்க ஓடித்திரிகின்றார்கள். சந்தை வியாபாரம் போலல்லவா இருக்கிறது. மலிவாக வாங்கி வழங்க முடியும் என்ற கருத்தே வலியுறுத்தப்படுகின்றது. எப்படியானவை? எதை? என்பது முக்கியப்படுத்தவில்லை.

**சு. கருணாநிதி.**

---

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்னர்–



படிப்பகம்

www.padippakam.com



## நோபல் பரிசின் வரலாறு

சுவீடனைச் சேர்ந்த அல்பிரட் நோபல் அவர்களின் பெயரில் 1901ம் ஆண்டிலிருந்து அவரது நினைவு தினமான டிசம்பர் 10ம் திகதி நோபல்பரிசு வழங்கப்பட்டு வருகின்றது. டைனமைட்டைக் கண்டுபிடித்து கோடீஸ்வரரான அல்பிரட் நோபல் தனது கடைசிக் காலத்தில் எழுதிய உயிலின் அடிப்படையிலேயே இந்நிகழ்வு நடைபெற்று வருகின்றது 1833இல் சுவீடனில் ஸ்ரொக்கொல்ம் நகரில் பிறந்த நோபலின் தந்தை இம்மானுவல் நோபலும் மிகச்சிறந்த திறமைசாலியே. கட்டுமானத்துறை நிபுணர், பொறியியல் வல்லுனர், இராணுவத் தளபாடங்களைத் தயாரித்தல் என பல துறைகளிலும் வல்லுனராக இருந்ததுடன் மிகப் பெரிய செல்வந்தராகவும் இருந்தார். அல்பிரட் நோபல் அவர்கள் டைனமைட்டைக் கண்டுபிடித்ததோடு மட்டும் நின்றுவிடாது இலக்கிய ஆர்வலராகவும், பொறியியல், விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் சிறந்தவர். அத்துடன் வியாபாரத் துறையிலும் அதிக நாட்டமுள்ளவர். டைனமைட்டிற்கு உலக நாடுகளில் அதிக வரவேற்புக் கிடைக்கவே இரசாயன, பொறியியல் துறைகளில் பல்வேறு கண்டு பிடிப்புக்களை நிகழ்த்தினார். உலகின் பல நாடுகளில் டைனமைட் ஆலைகளை நிறுவினார்.

ஒருதடவை இவரது தொழிற்சாலை ஒன்று வெடித்து சிதறியது. இவ்விபத்தில் இவரது இளைய சகோதரன் உட்பட பலர் பலியானார்கள். இதனால் இவர் அதிர்ந்து போனாலும் சோராது தொழிலைத் தொடர்ந்தார். 1888இல் நோபலின் சகோதரன் லுத்விக் மரணமடைந்ததும் சுவீடன் பத்திரிகையில் ஒரு நிருபர் அல்பிறட் நோபல் மரணமடைந்ததாக தவறுதலாக செய்தியினைப் பிரசுரித்து விட்டார். அச்செய்தியில் டைனமைட் புகழ் நோபல் மரணம், டைனமைட் மன்னன் மரணம், டைனமைட்டைக் கண்டுபிடித்து நாசகார ஆயுதங்களுக்கு வழிவகுத்த நோபல் இறத்து போனார், போன்ற தலைப்புக்களில் பலவகையான கட்டுரைகளை வெளியிட்டார். அதுமட்டுமல்லாது மரணவியாபாரி என நோபலுக்கு ஒரு பட்டத்தையும் அந்நிருபர் கொடுத்து விட்டார். இச்செய்திகள் நோபலை மிகவும் பாதித்தது.

நான் மனிதகுல அழிவுக்காகவா இத்தனை வேலை செய்தேன், மக்கள் மனங்களில் நான் ஒரு கொடியவனாகவா பதிக்கப்பட்டுள்ளேன் என மனம் ஒடிந்து போன நோபல் இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார். உலகில் மனிதகுல மேம்பாட்டிற்காய் தம்மை அர்ப்பணித்து பணிபுரிபவர்களை ஊக்குவிக்கும் முகமாக ஒவ்வொரு வருடமும் மருத்துவம், பௌதிகம்,இரசாயனம், இலக்கியம், சமாதானம் போன்றவற்றிற்காய் பாடுபடுபவர்களைத் தெரிவு செய்து தனது சொத்திலிருந்து குறிப்பிட்ட பகுதியினை பரிசாக வழங்கி கௌரவிக்கும்படி உயிலை எழுதினார். அத்துடன் தமது உயிலில் மருத்துவம்,பௌதிகம், இரசாயம் போன்றவற்றிற்கு தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பை சுவீடன் நாட்டுக்கும், சமாதானத்திற்கான நபரைத் தெரிவு செய்யும் பொறுப்பை நோர்வே நாட்டுக்கும் கொடுத்து உயிலை எழுதிவிட்டு 1896ம் ஆண்டு டிசம்பர் 10ம்திகதி மாரடைப்பால் இறந்து போனார்.

திருமணமாகாத நோபல்தனது சொத்துக்கள் அனைத்தையும் தகுந்த முறையில் முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு ஆண்டு தோறும் தமது பெயரில் மேற்குறிப்பிட்ட துறைகளில் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றும் நபர்களுக்கு விருது வழங்கப்பட வேண்டுமென உயில் எழுதி வைத்தார். பல துறைகளுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டாலும் அமைதிக்கான அதாவது சமாதானத்துக்கான பரிசே அதிமுக்கியமாக உலக அரங்குகளில் வணிக்கப்படுகறது. இப்பரிசு வழங்கும் பொறுப்பினை நோர்வேயிடம் கொடுத்ததால் நோர்வேயிலுள்ள நோபல்பரிசுக் குழுவானது மிகச்சிறந்த முறையிலேயே செய்து வருகிறது.

2002ம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் ஜிம்மி கார்ட்டர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவர் அமெரிக்காவிலுள்ள ஒரு சிறு கிராமமான பிளேய்ன்ஸ் நகரில் 01.10.1924இல் பிறந்தார். அரசியலிலும், கிறிஸ்தவ சமயத்திலும் ஆர்வமுள்ளவராயும், மனித உரிமைகளுக்காகவும், சமாதானத்திற்காகவும், சமுக முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவர். 1977இல் அமெரிக்காவினது ஜனாதிபதியாகப் பதவியேற்று 1978இல் இஸ்ரேல் - எஜிப்திற்கிடையிலான காம்ப்டேவிட் (Camp David) ஒப்பந்தத்தை நிறுவி அந்நாடுகளுக்கிடையில் சமாதானத்தை நிலைநாட்டினார். இது இவரது அரசியல் வாழ்வில் மிகச்சிறந்த சமாதான முயற்சியாகும். இதுவரை அமெரிக்காவினது மூன்று ஜனாதிபதிகள் நோபல்பரிசைப் பெற்றுள்ளனர்.

யூலியஸ் அன்ரனி
தேன்தமிழோசை வானொலித் தயாரிப்பாளர்
நோர்வே.



படிப்பகம்

www.padippakam.com



## எங்கள் போர் . . .

பூவேந்தும் கரங்களின்று
புண்ணாகிப் போக
முயல் பிடிக்க முனையும்
மூளை கபாளம் பிழந்து
வெளிக்கிளம்ப மல்லாந்து
படுத்தும் விடும் மழலை கோடி

அண்ணாந்து பார்த்து
அடியெடுத்தோட
அகல விரித்து அறுத்துவிடும்
அணுப்பிழம்பு
விழித்தபடி மண்புணரும்
துண்டுபட்ட சிரசு பல

இல்லாத மருந்தால்
இதயம் தொலைந்து
"கொத்துக்கு கொத்தாய்
மடியும் பாலகர்கள்"
முன்னிலையில் மருத்துவர்கள்
கை விரித்து கண்ணீர் மல்கி

வல்லபல வர்த்தகப் பேய்களினால்
"வாழும் பல பச்சை மண்கள்"
வாடி வதங்கி
மாண்டு வரும் உலகந் தோறும்

நில்லாது சதிராடும் பேய்களினால்
நித்தமொரு சாவு வரும்
இடம் வலமிழந்து
இத்தனைக்கும் மத்தியில்
எதன் பொருட்டு இவர் பின்னால்
ஓடுமிந்த மக்கள் குழாம்

குரல் வளையை தறித்து விட்டு
குடிப்பதற்கு கோலாவும்
உண்பதற்கு கம்பேக்கரும்
பார்ப்பதற்கு CNNம் உண்டாம்

நம்பவைத்து நலமடிக்கும்
நயவஞ்சக வலைகள் பல
நல்மனிதர்கள் வேடமிட்ட
கபட மனிதர் கூட்டம்
"கடவுளுண்டு கடவுளுண்டு" கூறி
கல்லெறியும் பிணங்கள் மீது

என்ணைக் காசுகளில்
எடுத்து வைக்கும் இவற்றையெல்லாம்
சொந்த மண்ணின்
வளம் கொண்டு
சோறுண்ண முடிவதில்லை
எமக்கிங்கு
எம்மிடமே பறித்து
எமக்கிடுகிறார் பிச்சையிங்கு!

கள்ள மனிதர்களில்
கால் கழுவும் காரியக் குட்டி
கர்தருக்கு காவலனாம்
ரோமாபுரியின் முதல் மகனாம்

காட்டுமிராட்டித் தனத்திற்கு
நிகராவோமென்று
கோவணம் கட்டும்
கொலம்ஸ் கூட்டமிது

அணுவைப் பிழந்து
உயிரைக் குடித்து
உலகைக் கருக்கி
ஊறு செய்யுமிவர் கொடுமையை

யாரிடம் கூற
யாரிடம் நோக
இனியும்
யாராய் நின்றோம்
யாராய் நிற்போம்?

நாம் முதுமைக்குள் சிறைப்படினும்
அன்றி
மூலதனப் பேயால்
முதுகொடிந்து போகினும்
அமெரிக்கக் கழுகுகளின்
காலொடிக்க மறவோம்

காடு வைத்து
மேடுவைத்து
நிலம் நெடுக நீர் பரப்பி
உயிரதுவை மலர வைக்க
எத்தனை கோடியாண்டு
கர்பத்துடன் இயற்கை அன்னை!

கண்டதற்கு கோடு வைத்து
கேடுகெட்ட மானுடராய்
வாழுமிந்த ஆரிய வெள்ளை மாளிகை

தன்னைத்தானே தோற்றுவித்த
மண், விண்
கதையறிந்தும்
மனிதவேட்டையிடும்
மடையர் கூட்டம், மானுடத்தின்
மகத்தான இனக்கூறு?

பொருட்காட்பின்
பொல்லாது பிசாசு
செல்லாத ஐ.நா.சபையாக
உலகுக்கு ஒன்றைக் காட்டி விட
மல்லாந்து போகும்
வல்ல தேசம் பல

இனி
"நில்லாது எங்கள் போரென்று"
உலக மக்கள்
ஓங்கியுரைத்தனர்

*~ ப. வி. சிறிரங்கன் ~*



படிப்பகம்

www.padippakam.com



# நத்தார் பண்டிகைக்காகச் சோடிக்கப்பட்ட அறையினுள் சிறு உரையாடல்

*- ஏர்ண்ஸ் கைமேறான்* (ERNST HEIMERAN) -

இரண்டாவது வெள்ளி. நேலவினது கடைக்குள் மனிதா்கள் குவிந்தபடி, நத்தார் பண்டிக்கைக்கால விசேஷ பிஸ்கட் வேண்டுவதற்காக.

**நேல** (உரத்துப்பாடுகிறாள்) :

ஓ... நீ மகிழ்ச்சி கரமான, ஓ... நீ ஆசீா வதிக்கத்தக்க, கினாப்பன் பிறிங்கென்ட் (இளம் பையனைக் கூட்டிவரும்) நத்தாா் தினமே, (நின்று விட்டது) என்ன சிரித்துக் கொண்டு பாா்க்கிறாய்? இது சிரிக்கத் தக்க பாட்டில்லை, இதுவொரு புனிதமான நத்தாா் பாட்டு!

**தந்தை:**

நீ மட்டும் தொடா்ந்து பாடேன் பாா்ப்போம். அது ரொம்ப இரம்மியமானது, அழகாக இருக்கிறது.

**நேல:**

இல்லை. நீ என்னைப் பாா்த்துச் சிரித்தனி அப்பா.

**தந்தை:**

நான் உன்னைப் பாா்த்துச் சிரிக்கவில்லை. நான் அதற்காக மட்டும் சிரித்தேன், நீ பாடிய பாட்டுக்காகச் சிரித்தேன். “கினாப்பன் பிறிங்கென்ட” நத்தாா் தினமே என்றதற்காகச் சிரித்தேன். அதன் பெயரைச் சரியாகச் சொன்னால் கினாடன் பிறிங்கென்ட (மகிழ்ச்சி கொண்டு வரும்) நத்தாா் தினமே. “கினாப்பன் பிறிங்கென்ட” - இளம் பையனைக் கூட்டி வரும் நத்தாா் தினமல்லவா.

**நேல:**

நான் கினாப்பன் பிறிங்கென்ட வில் இலயித்து விடுகிறேன். அப்பா நீ எனக்கு ஏதாவது எடுத்துக் கொண்டு வந்தியா?

**தந்தை:**

நான் அங்கு போக வில்லை. ஒரு மணி நேரம் காட்டுக்கு உலாவச் சென்றேன்.

**நேல:**

நீ, அங்கொன்றும் எனக்காகக் காணவில்லை, ஒன்றுமில்லை? (தண்டனை தரும் பாா்வையுடன்) மனிதா்கள் தேடும் போதெல்லாம் ஏதாவது கண்டெடுப்பாா்கள், இது நெடுக, நான் நெடுக இப்படி இப்படி ஏதாவது கண்டெடுப்பேன். காட்டுக்குள்ளும் தாம். எனக்கு ஆா்வமிருந்தால் அங்கு மறைந்திருப்பதைப் பாா்ப்பேன், அவ்விடத்தில் எதையாவதைக் காண்பேன். அது சரி இன்றைக்கு என்ன சாப்பாடென்றாவது உனக்குத் தெரியுமா?

**தந்தை:**

இல்லை. ஆனால் வெளிப்படையாகக் கூறினால் கொஞ்சம் நல்ல சாப்பாடு. ஏனென்றால் நீ, இதே மகிழ்ச்சியோடு இருக்க வேண்டுமென்று.

**நேல:**

“சிங்கன்” (பண்டியிறைச்சியில் செய்யப்பட்ட உணவு), இதனால தான் நான் சிரித்தபடி பாா்த்தேன். அதுவும் விளையாட்டுத் தான். வீணை வாசிப்பால் என் கைகள் நிறைய விட்டமீன்களைக் கொண்டிருக்கின்றன, முதலில் கைகளைக் கழுவி விட வேண்டும்.

**தந்தை:**

வீணை வாசிக்கிறாய்? இது எப்போதிருந்து நீ வாசிக்கிறாய்?

**நேல:**

சற்றுமுன் தான். “குழந்தைக் குஞ்சுகள் வாரும்” என்ற பாட்டிலிருந்து ஆரபே இராகத்தை எடுத்தேன். என்னால் இதை மிக இலகுவாகச் செய்யக் கூடியதாகவிருந்தது. பின்பு, தேன் பூசிய பாணோடு மல்லுக்கட்ட அது வீணைமீது விழுந்து... கைகளிலெல்லாம் அப்பி விட்டது. இப்போது அது ஒட்டிக் கொண்டு விடுகிறது.

**தந்தை:**

நீ ஒரு சரியான செல்லக்குட்டி (செல்லபண்டிக்குட்டி). கிறீஸ்டியானீ கோவிலிலிருந்து வீட்டுக்கு வந்து வீணையில் பயிற்சியெடுக்க முனைந்தால் அவளுக்கும் ஒட்டும் படியாக உன்னால் நேரிடப்போகுது.

**நேல:**

இப்போது எத்தனை மணி? எங்களுக்கு இன்னும் நேரமிருக்கிறது, அதை துடைத்து கழுவி விடுவதற்கு. நாங்கள் இருவருமே அதைச்செய்வோம். அப்பா, நீ செத்தபின்பு உன் மணிக்கூட்டை எனக்கு முதிசமாக வரச் செய்வியா?

**தந்தை:**

சில வேளை செய்வேன். அது சரி நான் மிக விரைவாகி விட வேணுமா?

**நேல:**

அய்யோ அப்பா, இல்லை. எனக்கு நீ வேணும். நீ வாழ வேணும். நான் சாகும் வரை நீ வாழ வேணும். அம்மாவும் அப்படியே, அத்தோடு எல்லோரும், எல்லோரும், எல்லோரும்! (உணா்ச்சிப் பெருக்கோடு சக்தி பெருகத்தக்க இறுகிய கட்டியணைப்பு.)

Ernst HEIMERAN பிறப்பு 1902 மறைவு 1955. வால் முன்சனா் நகரில் பிறந்து வளா்ந்த இவா் பதிப்பக நிறுவனரும் எழுத்தாளருமாவாா். குழந்தைகளின் அகவுலகை மிக இலாவகமாக படம் பிடிப்பதில் இவா் மிக ஆா்வமாய் எழுதியிருக்கிறாா். அதற்கு இச்சிறு உரையாடலே சாட்சி. இ∴து 'Sonntaage Prăche mit Nek' (ஞாயிறன்று நேலவுடன் உரையாடல்) எனும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



**நன்றிக்குரியவர்கள்**

**எமது இன்றைய ஆண்டு விழா சிறப்புற உடலால், மனத்தால் உழைத்தவர்களுக்கும், விழாவை ஆவணப் பதிவுகளாக்கி கொண்டிருக்கும் 'சதீஸ் வீடியோ' 'போட்டோ மஜந்தா' ஸ்தாபனத்தினருக்கும், உணவு வழங்கலைப் பொறுப்பெடுத்து செய்துதவிய பெருந்தகையாளர்களுக்கும் நடன நாடகங்களை நிகழ்த்திய கலைஞர்களுக்கும் கருத்துக்களத்தின் சொல்விற்பன்னர்களுக்கும் ஒலி அமைப்பை செய்துதவியஸ்ரீஈழநிலாஜி இசைக்குழுவினருக்கும் எம் நன்றிகள் என்றென்றும்.**

**- விழாக்குழு. -**

## எமது நாடு

எமது நாடு இலங்கை. இது கடலால் சூழப்பட்ட ஒரு தீவு. இது அழகு நிறைந்த நாடு. அழகான கடற்கரைகள், உயரமான மலைகள், வற்றாத நதிகள் நிறைந்த நாடு. பசுமையானை வயல் வெளிகள், அடர்ந்த காடுகள் நிறைந்த நாடு. இங்கு தேயிலை, றப்பர், தென்னை முதலியன வளர்கின்றன. கறுவா ஏலம் கராம்பு முதலியனவும் பயிரிடப்படுகின்றன. மா,பலா,வாழை முதலிய பழ மரங்களும் வளர்கின்றன. இங்கு விலை உயர்ந்த இரத்தினக் கற்களும் கிடைக்கின்றன. இங்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் எனப் பல இனத்தவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்தனர். இவர்கள் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களைப் பின் பற்றுகின்றனர். நாம் எலோரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள். நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து ஒற்றுமையாக வாழ்ந்தோம். நாங்கள் இப்பொழுது எங்கள் நாட்டில் சிங்கள இனத்திற்க்கும், தமிழ் இனத்திக்கும் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக எங்கள் நாட்டை விட்டு புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகிறோம். எங்கள் நாடு கலவரம் இன்றி அமைதியாகவும் நாங்கள் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும், அதற்கு எங்களுக்கு கடவுள் கூடிய கெதியில் அருள் புரிய வேண்டுவதுடன், எனது சிறிய கட்டுரை முடித்துக் கொள்ளுகின்றேன்.

- நன்றி -

**ஆக்கம் : பாரசக்தி கந்தப்பிள்ளை**
**வயது : 9 வருடங்கள்**
**பாரிஸ் – 20**
**பிரான்ஸ்**



படிப்பகம்

www.padippakam.com



# கொரில்லாவை முன் வைத்து சில கோட்பாட்டு உருவாக்கக் கோடுகளும், கீறல்களுமான முகங்களின் கேள்விகளும்–நியாய விசாரிப்புகளும்.

**கொரில்லா பலராலும் பேசப்படுகின்ற புனைவு. இது ஒரு அரசியல் சம்பவங்களின் தொகுப்பு. இலக்கிய கட்டமைப்புகளை கடந்து போய்க் கொண்டிருக்கும் ஒரு வடிவம். தமிழுக்கு புதிது. இது நாவலா? அல்லது அரசியல் சம்பவங்களின் ஆவணமா? செய்தியா? விவரணச்சித்திரமா? எதற்குள்ளேயும் அடங்காத, எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒரு புனைவு. இதைத்தந்தவர் எமது கல்லூரியின் பழைய மாணவர் என்ற முறையில் கொரில்லா மீதான கோட்பாட்டு விளக்கமும், விசாரணைகளும் இங்கே எழுத்தாயிருக்கின்றது.**

"தொட்டிலுக்குள் போட்ட குழவி
தொலைந்துவிடும் ஒரு நொடியில்
தோள்கொடுக்கப் போனதாக
சேதி வரும் மாலை தனில்
மாறி மாறிப் பார்த்து விட்டு
மயங்கி விடும் தாய் மனது
மடி கடித்த நினைவுகளும்
மங்கலாக வந்து போகும்
வார்த்தையின்றிச் சோர்ந்து விடும்
வந்து போகும் உணர்வுகளும்
வானுயர்ந்த நோக்குக்காகவாக
வாழ்விழந்தோம் இன்று வரை?".

இன்று வரை கேட்கப்படும் கேள்வியிது.
ஈராயிரம் ஆண்டுகளாய் தாழ்த்தப்பட்டு "தாழ்ந்தவர்கள்" என்று நகைப்போடு நோக்கப்பட்டவர்கள் நாம்! நமது வாழ்வுமீது மிகவும் கேவலமான நெருக்குவாரங்களை- சேறடிப்புகளை கள்ளப்பட்டங்களை- தீண்டாமையை சுமத்திய "மேல்சாதிய சைவ வேளாள அரசியலை" இன்று வரையும் ஒரு வடிவத்துக்குள் வைத்து அவிழ்த்துப்பார்க்க நமக்கான அரசியல் விழிப்புணர்ச்சி விஞ்ஞான பூர்வமாக கைகூடி வரவில்லை. அத்தகையவொரு நிலைமையை ஏற்படுத்திய இலங்கைக் கல்வி அமைப்பும், அதன் உள்ளீடாக இருக்கும் சாதிய நலனும் அதையெமக்கு திட்டமிட்டே சுமத்தியது. இந்த நிலமைக்கு காவோலை கட்டி கொழுத்தப்புறப்பட்ட இயக்கமே தலித்திலக்கியம்.

கொரில்லாவின் மொழியுடான சித்தரிப்பும் அதன் பகுப்பாய்வு மீதான நாளாந்த சமூக சீவியம், இதன் நம்பகத்தன்மை யாவும் அதன் அநுபவ வழிப்பட்ட வாழ்வை வாழ்ந்து-சுமர்ந்தவர்களாலேயே புரியக்கூடிய நிர்ப்பந்தம் இயல்பானதே! இந்த நிர்பந்தத்துக்குள் நிலவுகின்ற நமது வாழ்வு-சாவும் எங்கோ ஒரு மூலையில் நிகழ்ந்து ஆரவாரமற்ற மனிதர்களால் உணரப்படாமலே அமிழ்ந்துவிடும் நிலையைத்தடுத்து, இஃதுதாம் எமது வாழ்வினது சமூக இருப்பு, இதுவே எமது கால அரசியல் சமூக-பொருளியல் வாழ்வை தீர்மானிக்கும் காரணிகள்-கண்ணிகள் என்பதை பறையடித்துச்சொல்லும் ஒரு ஊடகமாக, இயக்கமாக சோபா சக்தி என்ற எழுத்தியக்கம் கொரில்லாவை முன் வைத்திருப்பது ஒரு வரலாற்று நிகழ்வே, தேவையே!

இந்த "வாழ்வு விவரணம்" தொழில் படும் தளம் குஞ்சன் வயலான தீவுப் பகுதி யெனினும், இஃது முழுமொத்த பூமிப் பந்தில் வாழ்வு மறுக்கப்பட்டு-உரிமை பறிக்கப்பட்ட உழைக்கும் மக்களனைவருக்குமே பொருந்தும். நாம் வாழும் வாழ்வானது ஏதோ எமது அறிவற்ற வாழ்வோட்டத்தால் நிகழும் ஒரு போக்காக காட்ட முனையும் கபட மேல்சாதிய ஊடகங்களால் இத்தகைய எழுத்துக்கள் எப்பவும் கண்டு கொள்ளப்படா.

மானுடநேயம்,மகத்துவம்,ஜனநாயகமென்பதெல்லாம் சாதிய வேளாள இந்துக்களுக்கான சமூக விழுமியமாக புரிந்து வைத்திருக்கும் புலம்பெயர் வானொலி 'தொலைக்காட்சி' பத்திரிகைகள் இந்தப் படையலை தெருவோர வேப்பமரத்து முனியப்பருக்கோ அன்றி அந்தோனியாருக்கோ வைத்ததாக பொருட்படுத்தும்.

எமக்குள் முகிழ்த்திருக்கும் சமூக கோபம் இன்று நேற்றைய கதையில்லை. பல்நூறு வருடங்களாக நமது மூதாதையர்கள் கொண்டிருந்த பகை முரணே இப்போது சமூதாய ஆவேசமாக-விஞ்ஞானத்தன்மை பெற்று யுத்த தந்திரோபாயத்திற்காக, கிரமமாக மறுவாசிப்புக்குள்ளாகிறது. நாம் நுகர்ந்த- நமது முன்னோர்கள் புழுவிலும் கேவலமாக வாழ்ந்த- சமூக வாழ்வை இப்போது நாம் கட்டுடைத்துப்பார்க்கிறோம்! அதுவே இன்றைய தலித் இலக்கிய முயற்சிகள் கோரியும் நிற்கின்றன, இதுவே கொரில்லாவின் இலக்கிய கோட்பாட்டு வடிவமும், வருவது எதுவானாலும், நாம் நமது கடந்த கால வாழ்வு மீதான தார்மீக கோபம் குறித்து மிகக்கவனமாக இருக்க வேண்டும்! எக்காரணங் கொண்டும் இதன் வீச்சுக்குன்றக் கூடாது, தணியக்கூடாது. இதுவே நம்மை வழிநடத்திச் செல்லும் ஊட்டச்சத்து. நமது வாழ்வை நாயிலுங்கேவலமாக்கி, இழிநிலைக்கிட்ட அந்த வர்க்க-சாதிய நிலைகளை கண்ணிகளை தனியே மார்க்சிய வர்க்க கோட்பாட்டு புரிதலுக்குள் அடக்கிப்பார்க்க முடியாது. இன்றைய நிலையில் உழைக்கும் மக்கள் பல்வகை சாதிகளாக பிளவுபட்டு மிகக் கீழான நிலமைகளுக்குள் வாழ்வு நகர்கின்றது, இப்பிளவு மேலும், மேலும் மேற்சாதிய ஒடுக்கு முறைக்கு ஒத்திசைவாகிவிடும் நிலை வேறு!

மனிதர்களை மனிதர்கள் ஒடுக்குதல் என்பது இந்த நூற்றாண்டு ஒருமுடிவுக்கு வந்தாக வேண்டும், இதற்கொரு முற்றுவைப்பதற்கான முன்னெடுப்பாக நாம் தலித்திய கருத்தமைகளை நோக்கியாக வேண்டும். கூடவே தலித்தியத்தை நாம் எவ்வாறு புரிகின்றோம்? ஒரு சில மேட்டுக்குடி "படிப்பாளிகள்" , மார்க்சியர்கள் அஃது பூதம்-மார்க்சியத்திற்கு விரோதமான பிற்போக்கு பிளவுவாத முதலாளிய நலமுடன் பின்னப்பட்ட சந்தர்ப்பவாதமாக



படிப்பகம்

www.padippakam.com



கருதுவது அனுபவமின்மையின் போக்கு மட்டுமல்ல, கூடவே, சாதிய வேளாள "மேல்குல" கருதுகோள்களுமே இதை இயக்கி வருகிறது.

தலித்துவ அடையாளமென்பது "பாட்டாளிய வர்க முன்னணிப் படை, பாட்டாளிய வர்க்க சர்வாதிகாரம்" என்பவற்றின் பிரதியீடாகவும்-இந்திய-இலங்கை போன்ற சாதிய ஒடுக்குமுறை நிகழும் நாடுகளுக்கு உழைக்கும் மக்களை இனம் காணும் பொதுமைப் பண்புடைய சுட்டலாகவுமிருக்கும். உழைக்கும் மக்கள் பல் வகைச் சாதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒடுக்கப்படும் நாடுகளுக்கு "தலித்திய வர்க்கம்,தலித்திய மொத்த அதிகாரம், தலித்திய முன்னணிப்படை" என்பதே சாலப் பொருத்தம்! இவற்றின் புரிதலினுடேதாம் நாம் சமுகமாற்றை நோக்கிப் பயணமாக முடியும். தலித்துவப்பண்பாடு தாம் சாதிய வேர்களை அறுக்க முடியும்! இ'.து நடைமுறையிலுள்ள எல்லா விண்ணானங்களையும் கேள்விப்பட்டு உடைத்தெறிவதுதாம் நோக்கமாக இருக்கும்.

இந்த வகை புரிதலோடு கொரில்லாவில் முன்வைத்து தலித்துவ இலக்கிய கோட்பாடு நோக்கிய சிறு பயணம்:-

இன்றைய உழைக்கும் விளிம்பு மனிதர்கள் தம்மை உருவாக்கிக் கொள்வதற்கான எந்த வடிவமும் இல்லை. உலகியல் வாழ்வு இதுவரையில் இருந்த நம்பிக்கைகளை திரும்பத்திரும்ப புதிய மொந்தையில் தந்த படி. இவைகளால்-சரிந்து விடுகின்ற பொருளியல் வாழ்வைச் செப்பனிட்டு தனது முரண் நிலையில் மழுப்பங்களை காட்ட முனைகிறது! என்ற போதும் "உழைக்கும் வலு" வளைந்து கொடுக்கும் அடிமைப்படுத்தலுக்குள் திணிக்கப்பட்டபடி. இந்தச் சமுகசீவியம் எந்தவொரு உழைக்கும்பிரிவையும் சுதந்திரமான-தனித்தன்மையுடைய உற்பத்தியுறவுகளாகப் பார்க்க விடுவதில்லை. இந்த பொது இறுக்கமே இப்போது பல மட்டங்களிலும் (மூளை உழைப்பாளிகளிடமும்- நிர்வாக யந்திரங்களிடமும்) "முட்டாள் தனத்தின் வியூகம்" என்று விவாதிக்கப்படுகின்றது. இவ்வுளவியல் ஒடுக்கு முறையென்பது ஒரு காலகட்டத்தின் தேவையைப் பூர்த்திப்படுத்தும் மூலதனத்தின் திட்டமிட்ட வியூகமே. இதையே முன்வைத்து இன்றைய புத்திஜீவ மட்டம் கருப்பொருளாக விரிந்துரைக்கிறது.

செப்ரெம்பர் 11க்கு பின்பு வியூகங்கள் பல வடிவங்களில் உலாவருகிறது. இவை கணக்கில் எடுக்கப்பட்ட எல்லா அறிவார்ந்த தளங்களையும் கைப்பற்றி விட்டது. இந்த நிலைமையில் நம் அக நிலை படைப்பாற்றல் இழந்துவிட்ட நிலையில் தோல்விப் பயத்துடன் புற நிலையை அணுகுகிறது. தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு எந்த செயல் வடிவமும் அதனிடமில்லை. இ'.து தாம் இன்றைக்கு நம்மில் பலரிடம் மலிந்து காணக்கிடக்கின்றது. வர்க்க உணர்வென்பது வெறும் பொருள் சார்ந்த விஷயமாக சமுக உளவியல் நிறுவப்பட்டுள்ளது. இதன் உச்சபச்ச பிரச்சார ஊடகங்களாக தொலைக்காட்சியும், கொலிவூட் சினிமாவும், கல்வியமைப்பும் செயற்பட, சமூக நிலை சற்று சரிப்பட்டு விட பலர் தாங்கள் இதுவரை உணர்ந்துவந்த வர்க்க உணர்வை சமரச நிலைமைக்குள் அம்போவாக்கியபடி, இது குறித்து ஜேர்மனிய பல்கலைக்கழக விரிவுரையாளர் Pefer V.Zima தனது பிரபல்யமிக்க கட்டுரையான "பின் நவீனத்துள் மானிடர்களினது பயிற்றுவிப்பு" என்ற நூலுல் இப்படி எழுதுகிறார் "பல்வகைப்பட்ட கருத்து நிலைகளை, பிரச்சனைகளை அன்றி சாதாரண தவறான புரிதல்களை விவாதிப்பதற்கு யாரால் முடியவில்லையோ அதுவே சிறுபான்மை தனத்தின் வெளிப்பாடு".

இ'.துதாம் நாம் செய்து வரும் இன்றைய செயல். இதை உடைத்தெறிவதில் தாம் தலித்தியமும் அதன் உணர்வுத்தளமும் வெற்றி கொள்கிறது. மனிதனை மனிதன் ஒடுக்குதல் தனியே பொருளாதார ரீதியாக மட்டும் இருக்கும் ஐரோப்பிய நாடுகளில் இந்த "வர்க்க இழப்பு" நிகழ்ந்துவிட்டது. ஆனால் இந்திய-இலங்கை மாதிரியான சாதிய-சமூக ஒடுக்குமுறை நிகழும் நாடுகளில் இந்த வர்க உணர்வென்பது தலித்தாக முன்னிறுத்திப் போராடுவதில் வெற்றிகொண்டது வரலாற்று விந்தையல்ல. எனவே தாம் ஒரு சோபா சக்தி விஷ்வரூபமாக தன் உயிரை நிழலாகக் கொடுத்து ஈழப்போராட்ட வரலாற்றை மக்கள் சார்ந்து வெளிப்படுத்தியது.

தலித்துவ இலக்கியத்தின் கோட்பாடு என்பது என்ன? படைப்பிலக்கியத்தின் ஊடாக வரலாற்றுக்கொடுமையை வெளிப்படுத்துவதும் அதன் ஊடே கற்றுக்கொள்வதும்-கற்பித்தலுமே. இந் நோக்குத்தாம் படைப்பிலக்கியத்தின் கோட்பாடு அழகியற் கட்டுமானத்தை நிர்மாணிக்கும். இதுதாம் நாம் எழுதுவதை கேள்விக்குட்படுத்தும். நாம் எழுதுவது முதல்தர இலக்கியமா? நாம் இலக்கிய சிருஷ்டிகளா? என்று எம்மை கேட்க வைக்கும். இவ்வகை புரிதலற்றவர்-தான் படைப்பதல்லாம் வானத்தில் உச்சியுள்ளது என்று விட்டு விமர்சனத்தையே வெறுக்க முனைவார். தலித்துவ எழுத்துக்கள் மட்டுமே இதிலிருந்து தப்பிக்கும் ஆற்றலோடு அமைகிறது. இதற்கு கொரில்லாவே சாட்சி! சோபாசக்திக்குள் நிகழ்ந்தது என்ன? இலக்கியத்திற்காக தன்னை வழங்கியதா? தனது ஆன்மாவை, உயிர்ப்பை வழங்கி வரலாற்றை படைப்பாக்கி முன்வைத்துள்ளார். சிந்தனையில்,படைப்பாற்றலில், வேதனையில், அனுபவங்களில் தன்னைத் தொலைத்து தேடியது. இந்தத் தேடுதலே தன்னை இனங்காண வைத்ததும், புரிந்துணர்வை வளர்த்ததும், சமுதாயத்துள் தாழ்த்தி வைத்திருக்கும் மனித விடுதலைக்காக வாழ்வை தேடுகிறார், படைக்கிறார். தலித்துவத்திற்காக-தலித்துவ விடுதலைக்காக தலித்தைத் தேடுகிறார். தன்னைத்தானே திட்டுகிறார், கேலிசெய் கிறார்,தன்னைத் தானே சாகடிக்கிறார். தனக்குத்தானே புத்துயிர் கொடுத்து தலித்துவ விடுதலையை தீவுப்பகுதிக்குள் கொண்டுவர முனைகிறார்! உலகத்தோடு தோள் சேர்க்கிறார்.

இந்த உலகை நாம் எப்படி நெருங்குகிறோம்? துன்பத்தின் மூலம், நெருக்கடிகளின் மூலம்,வேளாள-இந்துத்துவ ஆதிக்கத்தின் மூலம், மனிதர்களை மனிதர்கள் கொல்வதின் அச்சத்தின் மூலம், எமது அறிவின் மூலம், உழைப்பின் மூலம்,படைப்பின் மூலம் இந்த உலகு எமக்கே சொந்தம்! நமக்குத் தெரிந்த இவ்வுலகை நமக்குள் கொண்டுவர இதுவரை எமக்குள் அறிவாற்றல் கை கூடவில்லை. தீவுப்பகுதி தலித்துவ மக்களாகிய எமக்கு எம்வாழ்வை-அர்ப்பணிப்பை கண்



படிப்பகம்

www.padippakam.com



தலித்துவ மக்களாகிய எமக்கு எம்வாழ்வை-அர்ப்பணிப்பை கண் முன் கொண்டுவந்து காட்சிப்படுத்தும் படைப்பு நிலை இப்போது எம்மிடம் உள்ளது. நாம் நம்மை தெரிவு செய்கிறோம். தெரிவுசெய்வதினூடே நமது இருப்பு, நமது விடுதலையோடு சம்பந்தப்படுவதை உணர்கிறோம். நமக்கான உலகை நாம் கொண்டுவந்து அதனோடு கலத்தல் நிகழ்ந்துவிடுகிறது. இதை கொரில்லா மிகவும் துல்லியமாக செய்து விடுகிறது.

இவ்வகை கலத்தலின் மூலம் கொரில்லா நம்மோடு உண்மை பேசுகிறது. பேருண்மையை இக்கலத்தலின் மூலம் அது தந்துவிடுகிறது. கொரில்லா நம்மைப்பற்றிய குறைகளைத் தயவு தாட்சண்யமின்றி நமக்கு பகிரங்கப் படுத்துகிறது. இதில் நமக்கு வெடகமேதுமில்லை. இதற்காக நாம் தீக்குளிக்க வேண்டியதில்லை. நமது குறை இன்னொருவரின் குறையின் தொடர்ச்சியோ அல்லது நீட்சியோ! இவ்வண்ணமே மூதாதையர்களின் தொடர்ச்சி நமது தொடராகவும் இருக்கிறது! எம் குறைகளைப் பிரகடனப்படுத்துவதன் மூலம் நாம் எத்தனையோ பேர்களைப் பிரகடனப்படுத்துகிறோம். எம்மை நாமே திருத்த சிலுவை சுமக்கிறார் இந்த சோபா சக்தி. எமது விடுதலையை நாம் சாதிக்க வேண்டுமானால் நாம் செத்தாகவே வேண்டும், சாதியின் பெயரால், இயக்கத்தின் பெயரால், கள்வனெனும் பெயரால், துரோகியின் பெயரால் இந்தச்சாவு நம்மை நெருங்கியபடியே! இந்த சாவுதான் கொரில்லாவை படைப்பிலக்கிய நிலைக்குள் உயர்த்தித் தள்ளுகிறது.

எமது வாழ்வை விவரிக்க "நாம் எப்படி எல்லாம் செத்தோம், நமது முன்னோர்கள் எப்படி எல்லாம் அடிமைப்படுத்தப்பட்டு-அவமானப்படுத்தப் பட்டார்கள், எங்கள் வாழ்வை எப்படி எல்லாம் இழந்தோம்". விளக்க-பொருள் தேட கொரில்லா முனைகிறது. இதுவே தாம் இன்றைய தலித்துவ இலக்கியக் கோட்பாடு, இதுவே படைப்பிலக்கிய அழகியல். கொரில்லா மகத்தான நாவல் விவரணமாக இருப்பதற்குக் காரணம், அ்.்.து வரலாற்றின் ஒரு பகுதி, ஈழப்போரின் வரலாறை அது தனக்குள் பகுதியாகவும்-முழுமையாகவும் பிரதிபலிக்கிறது! மனிர்களாகிய நாம் வரலாற்றின் ஓடத்தில் மிதக்கிறோம்,வரலாற்று ஓடத்தையும் இயக்கியபடி! எமது செயல்களை, சிந்தனைகள் வரலாற்றோடு பிணைத்துப் பார்ப்பது சாத்தியமே. இதைச்செய்நேர்த்தியுடன் "கொரில்லா" கொண்டிருக்கின்றது.

கதையோட்டம் ஒன்றோடொன்று தொடர்ந்தும்-தொடராமலும் பின்னிப் பிணைந்தும்,ஆழ்ந்தும்-ஒடுங்கியும் வரலாற்றில் முன்னும் பின்னும் செயற்படுகிறது. இங்கு சோபாசக்தி மிகப்பெரிய சோதனையை மிக லாவகமாச் செய்கிறார். அதாவது , பாத்திரங்களை கால இடச்சூழலில் வைத்துப் பார்ப்பதும், நிகழ்வை விவரிப்பதுமே அ்.்.து, காலங்கடந்த கருத்து மீதியான மனிதர்களை காட்டும் கபட இலக்கியச் சூழலுக்குள் கடப்பாரைக் கொண்டு வரலாற்றுச்சூழலுக்கேற்ற மனிதர்களை அவர்தம் நிஷமுகங்களோடு படைக்கின்ற இலக்கிய நாணயம் இந்தச் சோபா சக்தியிடமே நான் காண்கிறேன். மனிதர்களாக-அவர்தம் வாழ்வை விரிந்த பின்னணியில் வைத்துப் பார்ப்பதும்,பொதுவயப் படுத்துவதும், பின்பு அதையே பிரித்துப் பார்த்து சாதிய ஒடுக்கு முறைக்குள் நிலவும் சங்கதிகளை விவரிப்பதும்தாம் தலித்துவ தத்துவம். இதை சோபா சக்தி கச்சிதமாகக் கையாளுகின்றார்.

தற்காலத்திற்குள் வாழும் நாம் வரலாற்றின் கடந்த காலத்தை தற்காலத்திற் கூடாகப் பிரதி பலிக்கும் ஆபத்தை அறிவோம். இந்த ஆபத்தை எப்படி இந்த கொரில்லா வென்றது? இ்.்.து ஆச்சரியமானது. ஆனால், படைப்பாளியின் பின்னணி கடந்த காலத்தை தானே அனுபவப்பட்டு-தானே பிரதிமை செய்தால் இ்.்.து வெற்றியாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே தாம்,கொரில்லாவின் எந்தப் பாத்திரமானாலும் வரலாற்றில் விரிகிறார்கள், சம்பவங்கள்-பிரச்சனைகள் யாவுமே அந்தந்த வரலாற்றுச் சூழலை நமக்கு விவரிக்கிறது! எந்தப் பகுதியை வாசித்தாலும் அ்.்.து வரலாற்றில் ஒரு பகுதியாக-துண்டாக, பிரதியாகப் பிரதிபலிக்கின்றது.

பாத்திர வளர்ச்சியென்பது மிகவும் அசாதாரண விஷயமாகவுள்ள தமிழ் இலக்கியச் சூழலில், கொரில்லா மிகவும் சாதாரணமாகவே அவ்வளர்ச்சியை எட்டி விடுகிறது.

கீர்கேகோர்ட் (Kirrkegaard) கூறுகிறார்: "மனிதர்கள் உலகத்தின் மீதான நம்பிக்கைகளை கட்டாயம் கொன்று விட வேண்டும். பின்பு உண்மையான நம்பிக்கைகளை காப்பாற்றி விட முடியும்".

சோபாசக்தி கற்பனையான நம்பிக்கைகளைக் கொன்று விட்டார். மணலில் கயிறு திரித்து வானத்தில் ஊஞ்சல் கட்டும் நோக்கம் அவருக்கில்லை. எனவே, கொரிலா வரலாற்று விவரண நாவலாகவும், படைப்பிலக்கியத்துள் தலித்துவ அழகியலாகவும்-கோட்பாடாகவும் விரிகிறது.

ஈழமக்களின் வாழ்வும், சாவும் போலிப் பிரச்சார ஊடகங்களால் உருமாற்றப்பட்டு மூழ்கடிக்கப் பட்டு விட்ட நிலையில், ஒரு இலட்சத்துக்குமேல் பலி கொள்ளப்பட்ட மக்களின் குருதியில் தமது (வேளாள தரகு முதலாளிய வர்க்கம்) பணப் பயிரை வளர்த்து வரும் இன்றைய சூழலில் கொரில்லாவின் பாத்திரங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தின் முகத்தை நமக்கு பதியப்படுத்திக் காட்டியபடி.

வில்லியம் சேக்ஸ்கியரின் (William shakes peare) கோம் லேட் நாடகத்தில் "கோம்லெட்" கூறுவார்: "இறைவன் உங்களுக்கு ஒரு முகத்தை வழங்கினார், நீங்களோ உங்களுக்கு வேறொன்றைச் செய்தீர்கள்".

சேக்ஸ்பியர் கூறுவது இறைவன் வழங்கியதாக, நாமோ இயற்கை வழங்கியதாக எடுப்போம். ஆனால், நமக்கு நாங்கள் எத்தனை முகங்களைப் படைத்துள்ளோம்?
இந்த முகங்களை சோபாசக்தி கொரில்லாவினூடே நமக்கு விபரிக்கிறார். இறுதியாக கொரில்லா பற்றிக் குறிப்பிடுவதாக இருந்தால் "முழுமையானது என்பது பொய்யானது".

ப.வி.ஸ்ரீரங்கன்
ஜேர்மனி.



படிப்பகம்

www.padippakam.com



எனக்கு இந்தக்கடற்கரை பிடிக்கவில்லை. ஆனாலும் நிறைய சிப்பி, கல்லுகள் பொறுக்கினோம். பின்னர் பார்செலோனைச் சுற்றிப் பார்த்தோம். அங்கு வெப்பநிலை 34° டிகிரியாக இருந்தது. நாங்கள் காம்பிங் செய்த இடத்தின் பெயர் Argeles-Gazost. இன்று இங்கு லீவு நாள் என்பதால் எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டு இருந்தது. திரும்பி பிரான்ஸிற்கு வரும்போது கமியோனினுள் நாங்கள் Maillon-Faible விளையாடினோம்.

வெள்ளிக்கிழமை/16/.ஆவணி

இன்று எல்லோரும் பிந்தி 10 மணியளவில்தான் விழித்தெழுந்தோம். பின்னர் நாங்கள் கயிறடித்து விளையாடினோம். அதில் சுகந்தாதான் 111 அடித்து வென்றாள். பிருந்தா-86, நான்-50, என்னுடைய சகோரன்-26, சுதர்சன் - 4 என்கின்ற எண்ணிக்கையின்படி விளையாட்டை முடித்தோம். பிறகு நாங்கள் லூர்த் நோக்கிப் பயணமானோம். போகும் வழியில் பிருந்தாவின் அப்பாவின் விருப்பப்படி கண்ணாடிக் குவளைகள், பூ வாஸ் போன்றவை செய்யுமிடமான souffleur de verre பார்க்கச் சென்றோம். அங்கு வேலை செய்பவர்கள் எங்களுக்கு 2 பூ வாஸ் செய்து காட்டினார்கள். லூட்சை வந்தடைந்ததும் பிருந்தா குடும்பத்தினருக்கு அங்கு வருவது முதல் தடவை என்பதால் சுற்றிப் பார்த்தார்கள். அன்றுதான் assomption பண்டிகை நாள். பின்னர் அப்பாக்கங்கள் Barbecue தயார்பண்ணினார்கள் சாப்பிடுவதற்கு. சாப்பிட்டின் மத்திய சந்தையில் ஒரு இசை நிகழ்ச்சி பார்ப்பதற்காக அப்பாக்கள் சென்றார்கள்.

சனி/17/ஆவணி

இன்று எங்கள் விடுமுறை நாட்கள் முடிந்து பரிஸ் திரும்பும் நாள். காலையில் எழுந்ததும் எல்லோருமாக எங்கள் கூடாரங்களை கழற்றி கமியோனில் ஏற்றிக்கொண்டு பரிஸ் நோக்கி புறப்பட்டோம். பரிஸ் வந்து சேரும் போது மறுநாளை காலை 3மணியாகி விட்டது. ஆகவே பயணத்திற்கு 14 மணித்தியாலங்கள் எடுத்திருந்தோம்.

இந்த இரண்டு வாரங்களையும் நான் மிகவும் சந்தோசமாகக் கழித்தேன். ஒருவருக்கும் திரும்பி வருவதற்கு விருப்பம் இல்லை. மிகவும் அருமையான, பிரயோசனமான விடுமுறையாக இந்த விடுமுறை அமைந்தது. அதுவும் Haut-Pyrénée யும் மலைகளும் மிகவும் அருமை. நான் புதிய நண்பர்களையும் சந்தித்தது மிகவும் மகிழ்ச்சி.

---

**நமது தாய் மொழியும் சமயமும்**

*புலம் பெயர் நாடுகளில் வாழ்கின்ற அதிகமான தமிழ் மக்கள் தமிழ் மொழியை பேச முன்வருவத்தில்லை, அத்துடன் சைவசமயத்தவர் பிற சமயங்களுக்கு மாறுகின்றனர். பெரும்பாலன தமிழ் மக்கள் ஒரே இனத்தவரை கண்டால் அவர்களுக்கு நல்ல பழக்கதுடன் வணக்கம் கூறாமல் வேறு பக்கம்மாக திரும்பிச் செல்கின்றனர்.ஆனால் வேறு நாட்டவர் தங்கள் நாட்டவரை கண்டால் அவர்களுக்கு மரியாதையாக அவர்கள் உடைய மொழியிலே வணக்கம் சொல்லி செல்கின்றார்கள். அதேபோல ஆபிரிக்கா நாட்டுக்காரர்கள், அராபிய நாட்டினர் இவர்கள் கூட தங்கள் தங்கள் மொழிகளிலேயே வணக்கம் கூறி போகின்றார்கள், ஆனால் எமது மக்கள் மட்டும் கண்டும் கணாதவர்களைப் போல் போவதை பார்த்து எனக்கு மிகுந்த கவலையாக இருக்கின்றது.*

**கொன்றைவேந்தன்**

1) *அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.*
2) *ஆலயம் தொழுவது சாலவும் நன்று.*
3) *ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.*
4) *எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.*
5) *சீரைத் தேடின் ஏரைத் தேடு.*
6) *தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.*
7) *தாயில் சிறந்த தொரு கோயிலும் இல்லை.*
8) *மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.*
9) *மின்னலுக்கு எல்லாம் பின்னுக்கு மழை.*
10) *முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.*

*ஆக்கம்: காயத்திரி கந்தப்பபிள்ளை*
*வயது:-11 வருடங்கள்*
*பாரிஸ்:20 - பிரான்ஸ்*



படிப்பகம்

www.padippakam.com



தமிழும் தமிழ் எழுத்தாளன் பயிற்சியும்

தமிழ் இன்று பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. விஞ்ஞான முன்னேற்றமும் அரசியல் விடுதலையும் தமிழின் வளர்ச்சியைத் தெளிவுபடுத்துகின்றன. தொடர்ந்து படிப்படியாக வளர்ந்து வரும் மேலைநாட்டு மொழிகளுக்கு இல்லாத சிலசிக்கல்கள் தமிழ் மொழிக்கு உள்ளது. இவற்றுள் பெரும்பாலான சிக்கல்கள் இடையிலே தேக்கமடைந்து பின் விரைந்து வளரும் மொழிகளுக்குடைய சிக்கல்களேயாகும். தமிழ் மொழி இன்று பலதேசங்களில் பேசப்படும் மொழியாகி உள்ளது. முன்பொரு காலத்தில் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, மொறிசியா, பர்மா பிசித்துதீவு என்று சுருங்கி இருந்த நிலை மாறி இன்று உலகம்பூராகவும் பேசப்படும் உலக எங்கும் பரந்த உலகத்தமிழர் என்ற அடைப்பெயரைக்கொண்டு அகதி நிலையிலும் தலைநிமிர்ந்து வளர்கின்றது.

இந்த நிலையில் எம்மொழி பல நாடுகளில் பாடசாலைகளில் படிப்பிக்கும் மொழியாகவும், பல நாடுகளில் வாரப்பத்திரிகைகள், மாதசஞ்சிகைகள் ஆண்டுமலர்கள் சிறப்பு மலர்கள் வெளியிடும் மொழியாகவும் வளர்ந்துள்ளது. இந்த சூழலில் எமது வருங்கால சந்ததியினர் எமது மொழியில் எழுதும்போது எப்படி எம்மொழியை கையாளவேண்டும் என தெரிய வைக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும் அதைப்பற்றி நாம் கொஞ்சம் சிந்தித்தால் நல்லதல்லவா?

பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ் என்று இரண்டு வகையான தமிழ் எம்மிடையே உள்ளன பேச்சுத்தமிழுக்கும், எழுத்துத்தமிழுக்கும் உள்ள வேறுபாட்டைக் கட்டுப்படுத்தல் இலகுவான ஒன்றல்ல அதைமிகவும் கவனமெடுத்து நினைவில் நிறுத்தி அதன் பின்பே நாம் எழுதத் தொடங்கவேண்டும்.

சித்திரமும் கைப்பழக்கம். செந்தமிழும் நாப்பழக்கம். வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்...

என்று சொன்ன ஔவைப்பிராட்டியார் கலைகளுக்கும் கல்விக்கும் பயிற்சி மிகமிக அவசியம் என்று வலியுறுத்திக் கூறுகின்றார்

எத்துறையாயினும் அத்துறையில் போதிய பயிற்சி பெறுபவனே முன்னுக்கு வர முடியும். வளர்ந்து வரும் எம் இளம் எழுத்தாளர்கள் நிறையவே எழுதிப் பழகுதல் அவசியமாகும். எழுதி, எழுதிப்பழகுவதால் நாம் நம்மொழியை சிறப்பாய் வளாப்பதோடு ஏனைய மொழிகளோடு நாமும் சரிசமனாக நடைபயில முடியும் என்பதே உண்மை. அதனால் நாம் எழுதும் ஒரு ஆக்கத்தை எத்தனை தரம் வேண்டுமானாலும் திருப்பித் திருப்பி எழுத ஆக்கம் மிக சிறப்படைந்த வண்ணமாவே இருக்கும்.

எழுத்தாளன் தனக்கு தானே குருவாகித் தனது எழுத்தின் பிழைகளைக் கண்டறிய முயல வேண்டும். தனது எழுத்ததுக்களை தானே திருத்தி எழுத வேண்டும். எழுத்தாற்றலை வளர்பதற்கு இதைவிடவேறு சிறந்த வழி வேறு இல்லை எனலாம்.

ஒருபடைப்பை எழுதத் தொடங்குமுன் அதுபற்றிய ஒரு குறிப்புத் திட்டம் ஒன்றைத் தயார் படுத்துவது பயனுடையது. இத்திட்டத்தில் கருத்து, அல்லது சம்பவம் என்ற நிகழ்வுகள் வரிசைப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்பு பொருளை காரண காரியங்களை ஒழுங்கு படுத்துவது அவசியம். இவைகள் ஆக்க இலக்கியத்தின் அழகுகளை மெருகூட்டி படிப்பவனை
இழுத்துப் பிடிக்கத்தக்க விதத்தில் அமையவேண்டும்.

எழுதிக் கொண்டிருக்கும் போது தவறுகளைப் பற்றியோ, பிழைகளைப் பற்றியோ அழகு படுத்தல் பற்றியோ கவலைப்படக்கூடாது. அத்தகைய கவலைகள், கற்பனைகள் கலைத்து பாதிப்பாக்கி எழுத்து ஓட்டத்தை சிதைத்துவிடும். எழுத வேண்டியதை எழுதி முடித்து விட்டு பின் அதை படித்தல் அவசியம். அங்கேதான் எழுத்துப்பிழை, வசனப்பிழை, சொற்பிழை போன்றவற்றை
திருத்தி நெறிப்படுத்த வேண்டும். இது முன்னதாகச் செய்த குறிப்புத்திட்டம் சரியானதாக இருந்தால் இத்தகைய



படிப்பகம்

www.padippakam.com



பிழைகள் அதிகம் இல்லாமல் ஆக்கம் தென்படும். படைப்பு நாம் எதிர்பார்த்ததை விட நீண்டு விட்டதாக மனம் நினைத்து சுருக்க நினைத்தால் திரும்ப எழுதுவதை விட வேறு வழி இல்லை. ஆனால் அப்படி எழுத தொடங்குவதற்கு முன்னதாக பின்வருவனவற்றைக் கவனித்து குறித்துக் கொள்வது பொருத்தமானது.

1 அவசியமற்ற சொற்கள்: சொற்றொடர்கள்

2 விலக்குவதற்குரிய இழிவழக்குகள்

3 நீக்கத்தகுந்த உதாரணங்கள்

4 பொருத்தமற்ற தாளிதங்கள் :ழீ உவமை, பழிமொழிகள், சிலேடை

5 மேலதிக கருத்துக்கள்: மேற்கோள்கள்

6 ஐயப்பாட்டுக் குரியஇடங்கள்

இவைகளை நீக்கி அளவாகச் சுருக்கியபின் படைப்பினை ஒரு பக்கத்துக்குள் வைத்தல் மற்றவர் விரும்பத்தக்கது. பின் இரண்டொரு நாட்களின்பின் செய்த ஆக்கத்ததை ஒருமுறை படித்துப்பார்தால் இன்னும்சில தவறுகள் தென்படலாம் அதையும் திருத்தியமைத்தால் படைப்பு ஒரு புதிய பார்வைக்குள் உள்ளடக்கப்படுவதால் ஆக்கம் தரம் கொண்டதாக கணிக்கப் படுகின்றது.

எழுத்தாளனின் இரசிகன் எழுத்தாளனே! அவனது ஆக்கத்தல் அவனுக்கு ஒரு மன நிறைவு வரவேண்டும். மனநிறைவு அதி முக்கியமானது மன நிறைவு வரும்வரை படைப்பினைச் சீர்செய்ய வேண்டும். இந்த விடயத்தில் எழுத்தாளன் சலிப்படையவே கூடாது. எழுத்துலகத்தை விட்டு பலபேர் விலகியதற்கும், இன்னும்பலர் திறமை இருந்தும் எழுதுலகில் பிரவேசிக்காமல்
இருப்பதற்கும் காரணம் அவர்களின் மனதில் எழுந்த மனச்சலிப்பேயாகும்.

காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சுதான். ஆனால் அவனுக்கு அவன் ஆக்கத்தில் ஒரு நம்பிக்கை இருக்கலாம். ஆனால் மற்றவர்களுக்கும் அதன் மீது அந்த நம்பிக்கை வரும்வரை நாம் நம்பிக்கையோடு முயற்சிக்க வேண்டும். வந்ததும் ஒருபத்திரிகைக்கு அனுப்பி அது பிரசுரிக்கப்படும் வரை எமது முயற்சியில் நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டும். அது பிரசுரிக்கப்படா விட்டாலும் தொடர்ந்து நம் மனசில் சலிப்பை வரவிடாது தொடர்ந்து முயற்சிக்க
வேண்டும். முயிற்சித்தபடி தொடரவேண்டும். தொடரத் தொடர நம் படைப்பின் தரமும் உயர்ந்து, படைப்பை பத்திரிகைகள் தேடி வரவேற்கும் நிலையும் வரும் என்பது உறுதி.
நீயும் ஒரு எழுத்தாளன் என்று மனநிறைவோடு பணி தொடரலாம் என நம்புகின்றேன்.

ஆக்கம்
வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்



படிப்பகம்

www.padippakam.com



## ஒரு மாணவியின் சுற்றுலா . . . .

தமிழில் – விஜி

எனது பெயர் அர்சுனி, நான் விடுமுறைக்கு இரண்டு வாரங்கள் "Haute-Pyrénée இற்கு எனது பெற்றோர், எனது சகோதரன் சாதுரியன், எனது நெருங்கிய நண்பி பிருந்தா, அவரது தங்கை சுகந்தா,அவர்களின் பெற்றோர், என்னுடைய நண்பன் சுதர்சன் ஆகியோருடன் சென்றிருந்தேன். என்னுடைய அந்த இனிய 15 நாட்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

செவ்வாய் /6/ஆவணி
முதலில் நாங்களும், பிருந்தாவின் குடும்பத்தினரும் விடிகாலை 5மணியளவில் கயோர் (Cahors) நோக்கி பயணம் வெளிக்கிட்டோம். மதியம் 1 மணியளவில் கயோரை அடைந்தோம். உடனடியாக எல்லோருமாக கூடாரங்களை அமைந்தபின், மதிய உணவாக நூடில்ஸ் சாப்பிட்டோம். இந்த கம்பிங்கின் பெயர் "La Riviére de Cabessut". பின்னேரம் நான் நீச்சல்குளத்திற்கு சென்று நீச்சலடித்துவிட்டு, பின்னர் நண்பர்களுடன் பற்மின்ரன் விளையாடினோம். அதேநேரம் எமது பெற்றோர் கூடாரத்தை ஒழுங்குபடுத்தினார்கள். இரவுச்சாப்பாடாக பாணும், ஜாமும், போர்மாஸ் (பாற்கட்டி) என்பவற்றுடன் முடித்தபின்னர், நானும் பிருந்தாவும் பாத்திரங்களை கழுவினோம். அந்தநேரம் அப்பாக்கள் வழிகாட்டிப் புத்தகத்தில் பார்க்க வேண்டிய இடங்கள் பற்றிய விபரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு மிகவும் களைப்பாக இருந்ததால் நான் தூங்கப்போய் விட்டேன்.

புதன்/7/ஆவணி
காலை 9மணியளவில் விழித்துக்கொண்ட நான் காலைக்கடன்களை முடித்துவிட்டு சொக்கோலா பாணும், பால்த் தேத்தண்ணியும் காலைச்சாப்பாடாக சாப்பிட்டுவிட்டு கொஞ்சநேரம் விளையாடினோம். பின்னர் "Roc de la Cazelle" குகை பற்றிய விபரங்களை வரவேற்றுப் கூடத்தில் பெற்றுக்கொள்வதற்காகச் சென்றேன். மதிய உணவின் பின்னர் எல்லோரும் "Roc de la Cazelle" குகை நோக்கி பயணம் செய்தோம். இந்தக் குகை வரலாற்றுக் காலங்களுக்கு முந்திய ஒரு குகையாக இருந்தது. நான் பெரிய பாறைகளுக்கு உள்ளுக்குள்ள வசிப்பிடங்களுக்கு ஓரமாகச் சென்றேன். இந்தக்குகையும், குகை மண்டபங்களும் 12ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மனிதர்களால் செய்யப்பட்டது என்பது ஆச்சரியமாக இருந்தது. இந்த வசிப்பிடங்கள், அந்த வரலாற்றுக்கு முந்திய மனிதர்களால் செய்யப்பட்ட பாவனைப்பொருட்களையும், ஆயுதங்களையும் பாதுகாக்கும், சேகரிக்கும் இடமாகக் இருந்திருக்கின்றது. முழுப்பாறைகளைக் குடைந்து குகை மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தன. உள்ளுக்குள் அவர்களது நாளாந்த வாழ்க்கையை சித்தரிக்கும் உருவமைப்புக்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் விதம் ஒரு உண்மையான குகைக்கிராமத்தின் தோற்றத்தை அளித்தது. ஒரு முழுப்பாறையைப் பொழிந்து அமைக்கப்பட்ட ஒரு வீடும் இருந்தது. தளபாடங்கள் 20ம் நூற்றாண்டை பிரதிபலிக்கும் அமைப்பு வடிவங்களில் காணப்பட்டது. வரலாற்றுக்காலங்களுக்கு முந்திய மனிதர்கள் வேட்டையாடுதல், சித்திரம் வரைதல், பழங்கள், புக்கள் பிடுங்குதல், கற்களை செதுக்குதல் போன்றவற்றைத் தெரிந்து வைத்திருந்தார்கள். அவற்றினூடாக வாழ்ந்தும் வந்தார்கள்.

கம்பிங்கிற்கு திரும்பியதும் எல்லோருக்கும் சரியான பசி என்பதால் சாப்பிட்டு விட்டு பற்மின்ரன் விளையாடினோம். பின்னர் காட்ஸ் விளையாடுவதற்கு அதன் விதிகள் பற்றி எங்களுக்கு தெரியாததால் பிருந்தாவின் அப்பா எங்களுக்கு விதி பற்றி விளங்கப்படுத்தியதும் சுதர்சனைத் தவிர எல்லோரும் தூங்கப் போகும் வரை காட்ஸ் விளையாடினோம். சுதர்சனுக்கு காட்ஸ் பற்றிய விதிகள் இன்னும் விளங்கவேயில்லை.

வியாழன்/08/ஆவணி
இன்று விசேடமாக ஒன்றும் இல்லை. காரணம் மழை பெய்துகொண்டிருந்தது. மாறி மாறி பற்மின்ரன், காட்ஸ், Mini-golf போன்ற விளையாட்டுக்களை விளையாடினோம். நாளை பிருந்தாவின் பிறந்தநாள் என்பதால் நானும் சுதர்சனும் சேர்ந்து ஒரு வாழ்த்துமடல் வரைந்தோம். இன்று Barbecue செய்து சாப்பிட்டோம். இரவு காட்ஸ், பிரமிட் போன்ற விளையாட்டுக்களை 11 மணிவரை விளையாடினோம்.

வெள்ளி/09/ஆவணி
இன்று காலையில் பிருந்தாவைக் கண்டதும் அவளுக்கு என்னுடைய பிறந்தநாள் வாழ்த்துகளைச் சொன்னேன். இன்றும் மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததால் கமியோனுக்குள்ளேயே இருந்தோம். மழைவிடும்போது Mini-golf விளையாடினோம். இரவுச்சாப்பாடாக குஸ்குஸ் சாப்பிட்டோம். பின்னர் பிருந்தாவின் பிறந்தநாளை முன்னிட்டு ஒரு கேக் வெட்டி சிறிய கொண்டாட்டம் ஒன்று கொண்டாடினோம். பற்மின்ரன் விளையாடும் இடத்தில் புதிய நண்பர்களான சீமோன், போஸ்ரீன், யான் போன்றோர்களையும், ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த சில நண்பர்களையும் சந்தித்தோம். இன்றிரவு என்னால் தூங்கமுடியவில்லை. காரணம் பிருந்தாவின் அப்பாவின் கொரட்டை எனக்கு மிகவும் இடைஞ்சலாக இருந்தது.

சனி /10 /ஆவணி
காலைச்சாப்பாடு செரியலுடன் (Ceréales) வழமைபோல் காலை கழிந்தது. எல்லோரும் மத்தியசந்தைக்கு சென்றோம். அப்பாமார் நிறைய சாமான்கள் சாப்பாட்டுச்சாமான்கள், கார்ட் போஸ்ரல்கள் என்று வாங்கினார்கள். ஆனாலும் பையன்கள் எங்களுடன் வராததினால் அமைதியாக இருந்தது. அவர்கள் பு.்.ட்போல் விளையாட அடுத்த கம்பிங்கிற்கு போயிருந்தார்கள். நாங்கள் திரும்பி வந்ததும் அம்மாமார் கம்பிங்கு போக நானும், பிருந்தாவும் எங்கள் அப்பாக்களுடன் பற்மின்ரன் விளையாடினோம். பு.்.ட்போல் விளையாடிவிட்டு பையன்கள் திரும்பி வந்ததும் தாங்கள் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு கோல் போட்டதாக சொன்னார்கள். பின்னர் மீண்டும் நான் சீமோன், போஸ்ரீன், யான் இரவுச்சாப்பாடு வரை பற்மின்ரன் விளையாடினோம். அன்றிரவு யான், போஸ்ரீன் இருவரினதும்



படிப்பகம்

www.padippakam.com



பிறந்தநாளை அவர்களுடைய கம்பிங்கில் கொண்டாடினோம். நான் எங்கள் எல்லோர் சார்பிலும் அவர்களுக்கு ஒரு வாழ்த்து மடல் ஒன்றை அன்பளிப்பாக கொடுத்தேன்.

ஞாயிறு/ 11/ ஆவணி

காலை சாப்பாடு முடிந்ததும் பிருந்தாவும் நானும் எங்களுடைய நண்பியும் சுதர்சனின் சகோதரியுமான அஜெந்தாவுக்கு வாழ்த்துமடல்கள் வாங்கி வந்தோம். அஜந்தாவுக்கும், இலங்கையில் இருக்கும் பிருந்தாவின் பெரியண்ணாவுக்கு பிருந்தாவும், என்னுடைய பெரியக்காவுக்கு நானுமாக மூன்று வாழ்த்து மடல்களைத் தயார் பண்ணினோம். நான் வாழ்த்துமடலில் ஆங்கிலத்தில் எழுதி அதை வாசித்துக் காட்டியபோது பிருந்தா சிரித்தாள் என்னுடைய ஆங்கிலத்தைப் கேட்டு. பின்னர் முத்திரை வாங்கி ஒட்டியதும் தபாலில் சேர்த்தோம். ஆனாலும் என்னுடைய வாழ்த்துமடல் இலங்கைக்குப் போய்ச் சேரும் என்பதில் நம்பிக்கையில்லை.
இன்று சில நாட்களின் பின்னர் வெயில் எறித்ததால் அப்பாமார் கமியோன்களை கழுவுவதற்காக கமியோன் கழுவும் இடத்துக்குச் சென்றார்கள், நான் நீச்சல் குளத்திற்கு சென்றேன். பின்னர் இரவுச் சாப்பாடு வரை பட்மின்ரன் விளையாடினேன். இந்தநாள் கயேரில் (Cahor) தங்கும் இறுதி நாள் என்பதால் இரவு நீண்ட நேரம் வரை எனது நண்பர்களான போஸ்ரின், யான், சீமோன் ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தேன். உண்மையாகவே எனக்கு கொஞ்சம் கூட விருப்பமில்லை அந்த கவெஸ்ஸி ஆற்றங்கரையையும் (La Riviére de Cabessut), எனது நண்பர்களையும் விட்டு வருவதற்கு.

திங்கள்/12/ஆவணி

இன்று காலையிலேயே எங்களது பெற்றோர்கள் கூடாரங்களை அவிழ்க்கத் தொடங்கிவிட்டார்கள். நான், சுதர்சன், என்னுடைய சகோதரன் எல்லோரும் அவர்களுக்கு உதவினோம். காலைச் சாப்பாடின் பின்னர் இறுதித்தடவையாக என்னுடைய நண்பர்களுடன் பேபி பூட் விளையாடினோம். நான் எனது நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சொககோலா பக்கட் கொடுத்தேன். வலன்ரின், ஓறலி போன்றோரிடமிருந்து பிரிவது மிகவும் மனக் கஸ்ரமாக இருந்தது. நாங்கள் ஐன்ரோங் (Einstang) போவதற்காக புறப்பட்டோம். பயணம் பெரிதாக நேரம் எடுக்கவில்லை. ஐன்ரோங்குக்கு வந்ததும் அப்பாக்கள் விபரம் திரட்டுவதற்காக வரவேற்புக் கூடத்துக்கு சென்றனர். நான் உடனடியாக கவனித்த விடயம் நீச்சல் குளம், மத்தியசந்தை என்பன அருகில் இல்லை என்பதையே. மத்தியசந்தைக்கு போவதென்றால் மேலிருந்து இறங்கி அதிகதூரம் வரவேண்டும். ஏனெனில் கம்பிங் போடும் இடம் ஒரு செங்குத்தான மலையின் உச்சியில் இருக்கிறது. திடீர் வளைவுகளைக் கொண்டதும் சறுக்கும் பாதையாக இறங்கும் வழியிருந்தது. ஆகவே நாங்கள் Argéler-Gazost என்கின்ற இடத்தை நோக்கி புறப்பட்டோம்.
கம்பிங்கின் பெயர் மூன்று பள்ளத்தாக்குகள் (Trois vallées) என்பதாக இருந்தது. இந்த கம்பிங் பெரிய இடமாகவும், பெரிய நீச்சல் குளமும் நீச்சல் குளத்தினுள் இரண்டு நீரில் வாழும் tobaggans இருந்தது. இங்கு ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு நிகழ்ச்சி நடக்கும். இன்றிரவு ஒருவரின் நகைச்சுவைப் நிகழ்வு ஒன்றிருந்தது. பையன்கள் மட்டுமே பார்ப்பதற்காகச் சென்றார்கள். அன்றிரவு எல்லோரும் நல்லதூக்கம் செய்தோம்.

செவ்வாய் /13 / ஆவணி

இன்று விழித்ததும் காலைக்கடன்களை முடித்துவிட்டு பற்மின்ரன் விளையாடினோம். பின்னர் நீச்சல்குளத்தில் நன்றாக நீச்சல் அடித்தோம். எங்களுடன் பிருந்தாவின் அப்பாவும் நீச்சலடித்தார். மதிய உணவின் பின்னர் எல்லோரும் haute-Pyrénée இற்கு சென்றோம். அங்கு கால்நடையாக நீண்டநேரம் உலாவினோம். சில சிறிய பாறைகளில் ஏறி இறங்கினோம். பின்னர் 1000 மீற்றர் உயரத்தில் உள்ள கேபிள் கதிரையில் ஏறி போய் வந்தோம். என்னுடைய அப்பா முதலில் பயத்தினால் வரமறுத்தவர் நான் கட்டாயப்படுத்தியதின் பெயரில் எங்களுடன் வந்தார். ஆனால் கேபிள் கதிரையில் போகும் போது திரும்புவதற்கோ கீழுக்கு பார்ப்பதற்கோ மறுத்துவிட்டார்.

மாலை கம்பிற்கு திரும்பியதும் அப்பாக்கள் பற்மின்ரன் விளையாடினார்கள், பையன்கள் குண்டு (pétanque) விளையாடினார்கள். இரவு ஒரு பாடகரின் பாட்டு நிகழ்ச்சி ஒன்று இருந்தது. அவர் பாடகர் மி'ல் சார்தூவின் பாடல்களைப் பாடினார்.

புதன்/14/ஆவணி

இன்று பையன்கள் இரண்டு சைக்கிள்கள் வாடகைக்கு எடுத்தார்கள். நான் அப்பாக்களுடன் நீச்சக்குளத்திற்கு சென்று நீச்சலடித்தேன். இன்று rafting இருப்பதாகச் சொன்னார்கள் ஆகவே அதுபற்றி வரவேற்பு கூடத்தில் விசாரித்து வந்தேன். எங்களில் யாரும் சயகவபை செய்வதற்கு முடியாது காரணம் மிகவும் நன்றாக நீச்சல் அடிக்கத் தெரிந்தவர்கள் மட்டும்தான் rafting செய்யலாம். ஆகவே நாங்கள் எல்லோரும் rafting பார்ப்பதற்காக சென்றோம். போகும் வழியில் கழுகுக் கோபுரம் என்னும் பெயருடைய கோபுரத்தைப் பார்த்தோம். அருகில் சென்று பார்க்கும்போது அது அவ்வளவு கவனத்தை ஈர்க்கக்கூடியதாக இருக்கவில்லை என்பதால் திரும்பி வந்துவிட்டேன். நாங்கள் ஒவ்வொருத்தரும் rafting செய்யும்போது நாங்கள் ஆராவாரித்தோம். பின்னர் இரவு கம்பிங்கில் மஜிக் நிகழ்ச்சி நடந்தது நாங்கள் எல்லோரும் சென்றிருந்தோம். இன்றைய நாள் வழமைபோல் மிகவும் சந்தோசமாக கழிந்தது.

வியாழன் /15/ ஆவணி

இன்று காலை 5 மணிக்கே எல்லோரும் புறப்பட்டு ஸ்பானியோல் நோக்கி சென்றோம். ஸ்பானியோலைச் சென்றடைவதற்கு 8 மணித்தியாலங்கள் இருந்தன. போகும்போது பாதையில் இருந்த மரங்கள் எல்லாம் தென்னைமரங்கள் போலவும், பனைமரங்கள் போலவும் காட்சி தந்ததால் எனக்கு இலங்கை ஞாபகம் வந்தது. ஸ்பானியோல் மறோக், இலங்கை போன்ற நாடுகள் போலவே எனக்கு காட்சி தந்தது. நாங்கள் பார்செலோனில் உள்ள கடற்கரைக்குச் சென்றோம். கடலினுள் பெரிய கல்லுகள் காணப்பட்டதால்



படிப்பகம்

www.padippakam.com



எனக்கு இந்தக்கடற்கரை பிடிக்கவில்லை. ஆனாலும் நிறைய சிப்பி, கல்லுகள் பொறுக்கினோம். பின்னர் பார்செலோனைச் சுற்றிப் பார்த்தோம். அங்கு வெப்பநிலை 34° டிகிரியாக இருந்தது. நாங்கள் காம்பிங் செய்த இடத்தின் பெயர் Argeles-Gazost. இன்று இங்கு லீவு நாள் என்பதால் எல்லாக் கடைகளும் பூட்டப்பட்டு இருந்தது. திரும்பி பிரான்ஸிற்கு வரும்போது கமியோனினுள் நாங்கள் Maillon-Faible விளையாடினோம்.

வெள்ளிக்கிழமை/16/.ஆவணி

இன்று எல்லோரும் பிந்தி 10 மணியளவில்தான் விழித்தெழுந்தோம். பின்னர் நாங்கள் கயிறடித்து விளையாடினோம். அதில் சுகந்தாதான் 111 அடித்து வென்றாள். பிருந்தா-86, நான்-50, என்னுடைய சகோரன்-26, சுதர்சன் - 4 என்கின்ற எண்ணிக்கையின்படி விளையாட்டை முடித்தோம். பிறகு நாங்கள் லூர்த் நோக்கிப் பயணமானோம். போகும் வழியில் பிருந்தாவின் அப்பாவின் விருப்பப்படி கண்ணாடிக் குவளைகள், பூ வாஸ் போன்றவை செய்யுமிடமான souffleur de verre பார்க்கச் சென்றோம். அங்கு வேலை செய்பவர்கள் எங்களுக்கு 2 பூ வாஸ் செய்து காட்டினார்கள். லூட்சை வந்தடைந்ததும் பிருந்தா குடும்பத்தினருக்கு அங்கு வருவது முதல் தடவை என்பதால் சுற்றிப் பார்த்தார்கள். அன்றுதான் assomption பண்டிகை நாள். பின்னர் அப்பாக்கங்கள் Barbecue தயார்பண்ணினார்கள் சாப்பிடுவதற்கு. சாப்பிட்டபின் மத்திய சந்தையில் ஒரு இசை நிகழ்ச்சி பார்ப்பதற்காக அப்பாக்கள் சென்றார்கள்.

சனி/17/ஆவணி

இன்று எங்கள் விடுமுறை நாட்கள் முடிந்து பரிஸ் திரும்பும் நாள். காலையில் எழுந்ததும் எல்லோருமாக எங்கள் கூடாரங்களை கழற்றி கமியோனில் ஏற்றிக்கொண்டு பரிஸ் நோக்கி புறப்பட்டோம். பரிஸ் வந்து சேரும் போது மறுநாளை காலை 3மணியாகி விட்டது. ஆகவே பயணத்திற்கு 14 மணித்தியாலங்கள் எடுத்திருந்தோம்.

இந்த இரண்டு வாரங்களையும் நான் மிகவும் சந்தோசமாகக் கழித்தேன். ஒருவருக்கும் திரும்பி வருவதற்கு விருப்பம் இல்லை. மிகவும் அருமையான, பிரயோசனமான விடுமுறையாக இந்த விடுமுறை அமைந்தது. அதுவும் Haut-Pyrénée யும் மலைகளும் மிகவும் அருமை. நான் புதிய நண்பர்களையும் சந்தித்தது மிகவும் மகிழ்ச்சி.

---

**நமது தாய் மொழியும் சமயமும்**

*புலம் பெயர் நாடுகளில் வாழ்கின்ற அதிகமான தமிழ் மக்கள் தமிழ் மொழியை பேச முன்வருவத்தில்லை, அத்துடன் சைவசமயத்தவர் பிற சமயங்களுக்கு மாறுகின்றனர். பெரும்பாலன தமிழ் மக்கள் ஒரே இனத்தவரை கண்டால் அவர்களுக்கு நல்ல பழக்கதுடன் வணக்கம் கூறாமல் வேறு பக்கம்மாக திரும்பிச் செல்கின்றனர்.ஆனால் வேறு நாட்டவர் தங்கள் நாட்டவரை கண்டால் அவர்களுக்கு மரியாதையாக அவர்கள் உடைய மொழியிலே வணக்கம் சொல்லி செல்கின்றார்கள். அதேபோல ஆபிரிக்கா நாட்டுக்காரர்கள், அராபிய நாட்டினர் இவர்கள் கூட தங்கள் தங்கள் மொழிகளிலேயே வணக்கம் கூறி போகின்றார்கள், ஆனால் எமது மக்கள் மட்டும் கண்டும் கணாதவர்களைப் போல் போவதை பார்த்து எனக்கு மிகுந்த கவலையாக இருக்கின்றது.*

**கொன்றைவேந்தன்**

*1) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.*
*2) ஆலயம் தொழுவது சாலவும் நன்று.*
*3) ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.*
*4) எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.*
*5) சீரைத் தேடின் ஏரைத் தேடு.*
*6) தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.*
*7) தாயில் சிறந்த தொரு கோயிலும் இல்லை.*
*8) மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.*
*9) மின்னலுக்கு எல்லாம் பின்னுக்கு மழை.*
*10)முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.*

*ஆக்கம்: காயத்திரி கந்தப்பபிள்ளை*
*வயது:-11 வருடங்கள்*
*பாரிஸ்:20 - பிரான்ஸ்*



படிப்பகம்

www.padippakam.com



# தனிநபர் ஓரங்க நாடகம்: முற்போக்குவாதி.

நொண்டிக்கூத்தன்.

(கதையாடி சுற்றும் முற்றும் பார்த்தவாறு, தனது மணிக்கூட்டையும் கண்காணித்தவாறு, யாருடையதோ வருகையைப் பார்த்திருப்பது போலவும், வரவேண்டியவர் குறிப்பிட்ட நேரத்திற்கு வராததால் அதிருப்தியடைந்தவர் போலவுமான பாங்குடன் அரங்கிற்கு வருகை தருகிறார். அவரது கையில் கைத்தொலைபேசியொன்று உள்ளது. தலையில் தொப்பியொன்றும் அணிந்துள்ளார்.)

எங்கட சனத்துக்கு நேரத்தை மதிக்கிற பழக்கமே கிடையாது. வெள்ளக்காரன்ர நாட்டில இருக்கிறமெண்ட பேர்தான். சொல்லுறன் எண்டு கோவிக்காதையுங்கோ. இப்பவும் இங்கையும் எங்கட சனங்கள் அங்கையிருந்தது மாதிரித்தான் இருக்கிதுகள்.

( மீண்டும் கதையாடி தனது மணிக்கூட்டையும், வரவேண்டியவர் வருகிறாரா என்பதையும் சுற்றும் புறமும் பார்த்துவிட்டு அதிருப்தியுடன் தலையாட்டியபடி இருக்கின்றார்.)

கதைக்கவிட்டீங்கெண்டா எல்லாரும் முற்போக்கு வாதிகள் எண்ட நினைப்பிலதான் கதைப்பினம். ஆனா, செயலில ஒர மண்ணாங்கட்டியுமில்லை. காலையில இருந்து பின்னேரம் வரைக்கும் எப்பிடிக் காசுழைக்கலாம் எண்டு அலையிறதத் தவிர, கொஞ்சமாவது முன்னேற்றமாச் சிந்திச்சு சமூகத்துக்கு முன்னுதாரணமா இருக்க வேணுமெண்டு ஆரும் நினைக்கினமே. எங்கட சனத்தை நினைச்சா விசர்தான் வரும்.
ஒரு அஞ்ச நிமிசம் எங்கட சனத்தோட அறிவுபூர்வமா எதையும் கதைக்கேலுமோ ? சும்மா சினிமாப் படத்தைப் பாத்துப் பாத்து இருக்கிற மூளையையும் அழிக்கிறதுதான் மிச்சம். முற்போக்குவாதியள் மாரி கதைச்சா மட்டும் போதுமே.

பாரதியார் கதையப் படமாக்கிப் போட்டாங்கள் பாத்தனீங்களோ எண்டு கேட்டா, பாரதியாரோ ? அதார்? எண்டெல்லோ கேக்கினம். சிலர் அவரென்ன புது நடிகரோ எண்டும்தான் கேக்கினம்.

பெண்களுக்குச் சமஉரிமை கொடுக்கோணும், சாதிப்பிரிவினை இல்லாமச் செய்யவேணும், அறிவ வளக்கோணும் எண்டெல்லாம் பாரதி சொன்னது எல்லாருக்கும்தானே. கொஞ்சமாவது முற்போக்காச் சிந்திச்சுச் செயற்பட்டா என்ன குறைஞ்சா போயிரும். முற்போக்குவாதிமாரிக் கதைச்சா மட்டும் போதுமே ? சமூகத்தை வளக்கிறதுக்கு அறிவையும் எல்லோ வளக்கோணும். வெள்ளக்காரன்ர தேசத்தில அகதியளா இருந்தாலும் சுயகௌரவத்தோட நாங்களும் அவங்கள விடக் குறைஞ்சனாங்களிலில்ல எண்டு ப்றுாவ் பண்ணிறதெண்டால் அதுக்கேத்தமாரி முற்போக்கா நடந்தெல்லே காட்டவேணும். காலமையிலயிருந்து பின்னேரம் வரைக்கும் காசு காசெண்டலைஞ்சாப் போதுமே. சுயகௌரவமும் முக்கியம்தானே.
அவைக்குப் பயந்து, இவைக்குப் பயந்து, சமூகத்திற்குப் பயந்து, அம்மாவுக்குப் பயந்து, அப்பாவுக்குப் பயந்து, இப்பிடியே ஒவ்வொருத்தருக்குமாகப் பயந்து நாங்க பிற்போக்காக நடக்கேலுமே.
எல்லாத்துக்கும் ஒரு துணிவு வேணும் பாருங்கோ.
முற்போக்கு மாதிரிக் கதைச்சா மட்டும்போதுமே.

(கதையாடியின் கைத்தொலைபேசி அழைப்புமணி அடிக்கிறது. அல்லது அப்படியொரு பாசாங்கு செய்கிறார். பணிவுடன்...)

கோவிச்சுக்கொள்ளாதயுங்கோ. ரெலிபோன் அடிக்கிது.
அலோ....!
ஆ, காத்தியேசண்ணையோ ! எப்பிடியண்ணே ?

---

ஓமண்ணை நானும் உங்களுக்கொருக்கா அடிக்கவேணுமெண்டு நினைச்சனான். கும்பிடப்போன தெய்வம் குறுக்கால வந்த மாதிரி.

---

சீ சீ அப்பிடியொண்டுமில்லையண்ணே. வாறமாசம் 10 ம் திகதி மகளுக்குச் சாமத்தியச் சடங்கு செய்யப்போறம். குடும்பத்தோட வாருங்கண்ணே. அதுக்குத்தான் ஐயரைக்கூப்பிடுகிறதுக்குப் பிள்ளயா கோயிலுக்குப் போய்க்கொண்டிருக்கிறன்.

---

சரியண்ணே !

---

ஓம்.



படிப்பகம்

www.padippakam.com



---

உங்கட மகன் அகிலனுக்கோ ?

---

நல்ல விஷயமண்ணே. பேசி முற்றாக்குங்கோ.
சாதி கீதி ஊர் பேரெல்லாம் வடிவா விசாரிச்சுப் பார்த்திருப்பீங்க தானே. கலியாணம் எண்டா இந்த விசயங்கள்ள கவனமாயிருக்கவேணுமண்ணே. மற்றது தகப்பன் நகக்கடையெண்டா நல்ல சீதணமும் வாங்கலாம்.

---

ஆ! பிள்ளை இங்க படிக்கிற பிள்ளையோ ? ஒண்டுக்கு ரெண்டுதரம் யோசியுங்கோண்ணை. இங்க பெடியள் பெட்டையள் எல்லாம் கண்டபாட்டுக்கு ஒண்டாத்திரியுதுகள். ஆம்பிளைக்கும் பொம்பிளைக்கும் சம உரிமையெண்டு கதைக்கிற காலமண்ணே. கதைக்கு வேணுமெண்டா சரிப்பட்டு வரும் வாழ்க்கைக்குச் சரிப்பட்டு வருமோ அண்ணே. எங்களுக்கெண்டிருக்கிற கலாசாரத்தை விட்டிட்டு ஒரு மோட்டு வாழ்க்கையை வாழேலுமோண்ணே. சுதந்திரம் சுதந்தரமெண்டு பொம்பிளையளக் கதைக்கவிடேலுமே. அவையவைய அவையவையின்ர இடத்தில வைக்கவேண்டாமே.

---

என்னண்ணே ?

---

ஓ. நான் முந்தின அதே யாவாரந்தான். இப்ப வேற சைட் பிஸ்னசும் செய்யிறன். கொள்கை கௌரவம் எண்டெல்லாம் பாத்தா, நாலு காசுழைக்கேலுமே. காசில்லாதவன நாங்க எப்பிடி மதிக்கிறேல்லையோ, அதுமாரி எங்களிட்ட காசில்லாட்டியும் சனம் மதிக்காது. அண்ணே நாய் பேயினர காலில விழுந்தெண்டாலும் நாலு பணத்த உழைக்கோணுமண்ணே. பணந்தானே எல்லாம். பணந்தான் அறிவு, பணந்தான் நட்பு, பணந்தான் உறவு, பணந்தான் ஒழுக்கம், பணந்தான் எல்லாமண்ணே.

---

சரியண்ண, மறந்துபோகாதையுங்கோ. வாறமாதம் பத்தாம் திகதி.

---

சரியண்ண சந்திப்பம்.

(கதையாடி மீண்டும் சனத்தின் பக்கம் திரும்பி...)

அது காத்தியேசண்ணை. பாவம் நல்ல மனுசன்.
என்னவோ கதைச்சுக்கொண்டு நிக்க ரெலிபோன் வந்து குழப்பிப்போட்டுது.

ஓ. எங்கட சனங்களைப்பற்றிக் கதைச்சுக்கொண்டு நிண்டனாங்கள். முற்போக்காச் சிந்திச்சு சமூகத்துக்கு முன்னுதாரணமா நடக்கிறதுக்கு நேர்மையும் துணிவும் வேணுமுங்கோ. சும்மா வெளியில வெள்ளக்காரன் மாரி கதைச்சா மட்டும் போதுமே. எங்கட சனத்த நினைச்சா விசர்தான் வரும். வாயால முற்போக்குவாதியள் எண்ட நினைப்பில விளாசுவினம்.எல்லாம் ஒரு வசதிக்காகத்தான். தங்களையும் புத்திசாலியளா, பெரியாக்களா காட்டிறதுதான் வேற ஒண்டுமில்ல. சொந்த வாழ்க்கயில பாத்தா எல்லாம் தலைகீழ். எங்கட சனங்கள நினைச்சா விசர்தான் வரும்.

(கதையாடி மணிக்கூட்டைப் பார்த்துவிட்டு...)

எனக்கொரு ராந்தேவு இருக்கு. ஏற்கெனவே மூக்கா மணித்தியாலம் பிந்திப் போச்சு. கோவிச்சுக் கொள்ளாதையுங்கோ. முடிஞ்சளவுக்குச் சமூகத்தை எல்லாருமாச் சேந்து முன்னேற்றப் பாப்பம். கோவிச்சுக் கொள்ளாதேங்கோ.
ஐயரை ஒருக்காச் சந்திக்கவேணும்.

(தலையிலுள்ள தொப்பியைக் கழற்றி கையில் வைத்து, பார்வையாளருக்குக் காட்டியவாறு, ஒருவித நளினச் சிரிப்புடன்...)

இது ஒரு தொப்பிதானுங்கோ. எனக்கு மட்டும்தான் இது அளவெண்டு நினைக்கக்கூடாது. றை பண்ணிப் பாத்தா உங்கள்ள கனபேருக்கு இது அளவாயிருக்கும்.
போயிட்டுவாறனுங்கோ. (முற்றும்)



படிப்பகம்

www.padippakam.com




▲ பிரான்ஸில் நடைபெற்ற வித்தியாலய விழா 2002ம் ஆண்டின் சில நிகழ்வுகள் ▼







*2002 / 2003 ம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்கள்*

**இடமிருந்து வலம்**

*சி. பாலச்சந்திரன்*
*(கணக்குப் பரிசோதகர்)*
*க. நாகரட்ணம்*
*செ. ஸ்ரீபாஸ்கரன்*
*மு. கேதீஸ்வரன்*
*கே. விசாகன்*
*அ. ஜெயகுகன் (செயலாளர்)*
*க. தவச்செல்வம்*

**இருப்பவர்கள்**

*யா. பாலகிருஷ்ணன்*
*நா. மகேந்திரன்*
*சு. கருணாநிதி (தலைவர்)*

**படத்தில் இடம்பெறாதவர்கள்**

*அ. இயல்வாணன்*
*அ. தேவதாஸன்*

படிப்பகம்

www.padippakam.com







2003ல் எமது பாடசாலை

படிப்பகம்